
பக்கம் 05
குறைபாடுகள் விரைவில் நிவர்த்தி செய்யப்படும்


பக்கம் 07
ஈரானில் கடும் நிலநடுக்கம் 7 பேர் சாவு; 30 பேர் காயம்


பக்கம் 23
இங்கிலாந்து கவலை

உதயன்
UTHAYAN - A Lively National Tamil Daily
சுடர்: 29 கதிர்: 004 வள்ளுவர் ஆண்டு: 2044 | கார்த்திகை 14, சனி 30.11.2013
பககம் : 24
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30


மேக மூட்டம்
28^C 24^C

# புலிகளை மீள நினைவுபடுத்தி கோபமூட்டுகிறது கூட்டமைப்பு

## பாதுகாப்புச் செயலர் கோத்தபாய பாய்ச்சல்

கொழும்பு, நவம்பர்30
தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் தின நிகழ்வுகளை மீண்டும் நினைவு படுத்தி அரசையும், படையினரையும் ஆத்திரமூட்டும் - வெறுப்பூட்டும் செயற்பாடுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈடுபட்டு வருகின்றது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.
கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில நாளேடு ஒன்றுக்கு வழங்கிய நேர் காணலிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
இந்த நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
போருக்குப் பின்னரான நல்லிணக்க நடவடிக்கைகளை வேண்டுமென்றே சதி செய்து குழப்புவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சி செய்து வருகின்றது.
எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் இடம்பெறும் ஐ.நா மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடருக்கு முன்னர் வடக்கில் குழப்ப நிலையை ஏற்படுத்துவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயன்று வருகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் அடிவருடிகளின் கட்டளைகளையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த 4 ஆண்டுகளாகப் பின்பற்றி வருகின்றது.



தமிழீழ விடுதலைப்புலிகளைத் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக்குவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயன்றது. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளின் தவறுகளை அவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராகவில்லை.
இறுதிவரை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தனி ஈழ வேலைத் திட்டத்தையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுத்து வந்தது.
அல் குவைதா இயக்கத் தலைவர் ஓசாமா பின்லேடனை நினைவு கூருவதற்கு அமெரிக்கா அனுமதிக்குமா ? -என்றார் பாதுகாப்புச் செயலர் (த-5)

## இரண்டாவது வாசிப்பு நேற்று நிறைவேறியது

கொழும்பு, நவ.30
2014 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு, 99 மேலதிக வாக்குகளால் நேற்று நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.
2014ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக அரசும், அதன் பங்காளிக் கட்சிகளும் வாக்களித்த அதேவேளை, எதிர்க்கட்சிகள் எதிராக வாக்களித்தன. ஆதரவாக 154 வாக்குகளும் எதிராக 55 வாக்குகளும் அளிக்கப்பட்டன.
இதன்படி 99 மேலதிக வாக்குகளால் வரவு- செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு நிறை

21 ஆம் பக்கம் பார்க்க

## மக்களையும், அருட்தந்தையரையும் பொலிஸார் தாக்கியது உண்மையே

### பொலிஸாரின் கருத்தை கண்டிக்கிறார் தாக்கப்பட்ட வணபிதா

யாழ்ப்பாணம், நவம். 30
யாழ்ப்பாணத்துக்கு கமரூன் வருகை தந்திருந்தபோது யாழ். பொதுநூலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டகாணாமற்போனோரின் உறவினர்களையும், அருட்தந்தையர்களையும் பொலிஸார் தாக்கியது உண்மையே. அதனை அவர்கள் மறுக்க முடியாது.
இவ்வாறு நேற்று தெரிவித்தார் தாக்குதலுக்கு இலக்கான அருட்தந்தை யூட் நிக்ஷன் அடிகள்.
பிரிட்டன் பிரதமரின் வருகையின் போது பொது நூலகத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட காணாமற்போனோரின் உறவினர்களையோ, அருட்தந்தையர்களையோ தாம் தாக்கவே இல்லை என்று யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜிவ்றி தெரிவித்தார்.


கோப்புப் படம்

இது குறித்த சம்பவத்தின் போது தாக்குதலுக்கு இலக்கான அருட்தந்தை யூட் நிக்ஷனிடம் கேட்ட போதே அவர் மேற் கண்டவாறு கூறினார். ஆர்ப்பாட்டத்தில் பங்குகொண்ட மக்களையும் அருட்தந்தையர்களையும் பொலிஸார் தாக்கியது உண்மை என்று அவர் அடித்துக் கூறினார்.

21 ஆம் பக்கம் பார்க்க

## 'பேஸ்புக்'கிலும் தமிழர்களை உளவு பார்க்கிறது பொலிஸ்

யாழ்ப்பாணம், நவ. 30
தமிழ் இளையவர்கள் மத்தியில் முகப் புத்தகப் பாவனை அதிகரித்துள்ள நிலையில் அதனைப் பொலிஸார் உளவு பார்க்க ஆரம்பித்துள்ளார்கள். முகப் புத்தகத்தில் மாவீரர் நினைவு தின படங்களை கடந்த 27ஆம் திகதி பதிவேற்றியிருந்த ஒருவரின் வீட்டைத் தேடிப் பொலிஸார் விசாரணை நடத்தியிருக்கின்றனர்.
விடுதலைப் புலிகள் அமைப்பின் மாவீரர்கள் தினத்தைக்

21 ஆம் பக்கம் பார்க்க

## மாநகர சபையில் தகாத வார்த்தைப் பிரயோகங்கள்

யாழ்ப்பாணம். நவ. 30
யாழ்.மாநகர சபையின் ஆளுங் கட்சி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இடையே நேற்று சபையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் தகாத வார்த்தைப் பிரயோகம் வரைச் சென்றது.
இதனைக் கண்டும் காணாதது போன்று கைத்தொலை பேசியில் உரையாடிக் கொண்டிருந்தார் மாநகர சபை முதல்வர்.
யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றது. இதன் போது

21 ஆம் பக்கம் பார்க்க

## காணிகளைப் பறிக்கும் பணி பிரதேச செயலகங்களுக்கு

### நடவடிக்கைகள் முழு வீச்சில்

*யாழ்ப்பாணம், நவ. 30*
*யாழ். மாவட்ட காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் அலுவலகத்தின் செயற்பாடுகளை பிரதேச செயலகத்துக்கு பாரப்படுத்தும் நடவடிக்கைகள் முழுவீச்சில் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.*
*பிரதேச செயலர்கள் ஊடாகக் காணி சுவீகரிப்பை மேற்கொள்வதற்குத் தேவையான ஒழுங்குகள் முன்னெடுப்பதற்காகவே இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதா*

21 ஆம் பக்கம் பார்க்க

## மக்கள் பிரதிநிதியான முதலமைச்சரை இராணுவம் எப்படித் தடுக்க முடியும்?

### நாடாளுமன்றில் கூட்டமைப்பு கேள்வி

கொழும்பு, நவ.30
"வடக்கில் ஜனநாயகம் நிலை நாட்டப்பட்டுள்ளது என அரசு கூறினாலும், வடமாகாண மக்களால் தெரிவுசெய்யப்பட்ட முதலமைச்சர் தமது மாகாணத்தில் ஒருசில இடங் களுக்குச் சுதந்திரமாகச் செல்ல முடியாமல் தடுக்கப்பட்டுள்ளார். இது வடக்கில் இடம்பெறும் இராணுவ ஆட்சிக்குச் சிறந்த உதாரணமாகும்."
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந் தி ரன் நேற்று சபையில் தெரிவித்தார்.
வலி. வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள கோயில்கள், பாடசாலைகள் இராணுவத்தினரால் இடித்தழிக்கப்படுவதைப் பார்வையிடுவதற்காக நேற்றுமுன்தினம் மாலை அங்கு சென்ற வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை படையினர் அங்கு செல்லவிடாமல் திருப்பி அனுப்



21 ஆம் பக்கம் பார்க்க

## றெக்ஷயன் கொலைக்கான பிஸ்ரல் எங்கிருந்து வந்தது?

### துருவித் துருவி ஆராய்கின்றது பொலிஸ்

யாழ்ப்பாணம், நவம். 30
நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர் டானியல் றெக்ஷயனின் படுகொலை இலங்கைப் புலனாய்வுத் துறைகளுக்குப் பெரும் தலையிடியாக மாறியுள்ளது. இந்தக் கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட மைக்ரோ ரக 9 எம்.எம். பிஸ்ரல் எப்படிக் கொலையாளிக்குக் கிடைத்தது என்பது தொடர்பில் பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவு, பயங்கரவாத தடுப்புப் பிரிவு, தேசிய உளவுச் சேவை என்பன மிகத் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றன. இந்த விசாரணைகளுக்கென கொழும்பில் இருந்தும் விசேட பொலிஸ் பிரிவு ஒன்றும் வருகை தந் துள்ளது.
மாவீரர் வாரத்தில் இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதால் இதன் பின்னணியில் திட்டமிட்ட சதி ஏதாவது இருக்குமா என்ற ரீதியிலும் விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.
சுடப்பட்ட துப்பாக்கி ரவை நான்கு துண்டுகளாகச் சிதறிய நிலையில் றெக்ஷயனின் மூளையினுள் இருந்து மீட்கப்பட்டன.
வீட்டிலிருந்து அவர் சடலமாக மீட்கப்பட்டபோதே அவரது தலையிலும் மார்பிலும் இரத்தம் காணப்பட்டுள்ளது. அப்படி இருந்தபோதும் அவர் தற்கொலை செய்துகொண்டார் என்ற கதை பரப்பப்பட்டுள்ளது. ஆனால் கொலை நடந்த இடத்தில் இருந்து கைத்துப்பாக்கி

21 ஆம் பக்கம் பார்க்க

# நெடுந்தீவு கொலையின் பின்னணி என்ன?

யாழ்ப்பாணம், நவ.30

நெடுந்தீவுப் பிரதேச சபையின் தலைவர் டானியல் றெக்ஷயன் சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பில் யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

நேற்று யாழ். பொலிஸ் நிலையத்தில் நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இது குறித்துத் தெரிவித்தவை வருமாறு:-

டானியல் றெக்ஷயன் (வயது -47) புங்குடுதீவில் உள்ள அவரது வீட்டில் கடந்த 26 ஆம் திகதி உயிரிழந்தார். இவருக்கு 16,12,10 வயதுகளில் மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

அவர் நெடுந்தீவிலேயே அதிகமாகத் தங்கி இருப்பவர். அவருக்கு பல் வேதனை என்பதனால் கடந்த ஒரு மாத காலமாகப் புங்குடுதீவில் உள்ள தனது வீட்டில் தங்கி இருந்தார்.

சம்பவ தினத்தன்று பிள்ளையின் படிப்புச் செலவாக ஒரு தொகைப் பணம் தேவைப்பட்டமையால் அவரது வீட்டை அண்மித்துள்ள ஒரு வீட்டுக்கு றெக்ஷயனின் மனைவி பணம் வாங்கி வரச் சென்றுள்ளார்.

பின்னர்வீட்டுக்குச் சென்ற றெக்ஷயனின் மனைவி அப்பாவை கூப்பிடுமாறு ஒரு பிள்ளையிடம் கூறியுள்ளார். அந்தப் பிள்ளை உள்ளே சென்று பார்த்து விட்டுத் திரும்பி வந்து, 'அப்பா நித்திரையாக உள்ளார் . அவரது தலையில் இரத்தம் காணப்படுகிறது' என்று தாயாரிடம் கூறியுள்ளது. இதனை அடுத்து அறைக்குள் சென்ற றெக்ஷயனின் மனைவி அங்கு கணவன் இரத்தம் தோய்ந்த நிலையில் படுத்திருந்ததைக் கண்டு உடனடியாக அவரை ஓட்டோவில் புங்குடுதீவு வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளார்.

அங்கு அவரைப் பரிசோதித்த மருத்துவர், தலையில் ஆழமான காயம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் உயிரிழந்து விட்டார் என்றும் கூறியுள்ளார்.

அதன் பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது. உடற்கூற்றுப் பரிசோதனையின் போது 9 மில்லி மீற்றர் ரக துப்பாக்கியால் சுடப்பட்டு உயிரிழந்தமை, தலைக்குள் இருந்து மீட்கப்பட்ட அதன் ரவையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.

பொலிஸார் புங்குடுதீவுக்குச் சென்று விசாரணை நடத்தினர். துப்பாக்கியால் சுடப்பட்ட போது துப்பாக்கி ரவை தலையிலிருந்து வெளியேறாது உள்ளேயே தங்கிவிட்டது. இதிலிருந்து றெக்ஷயன் சுமார் 5 மீற்றர் தூரத்திலிருந்தே சுடப்பட்டிருக்கலாம் என்று தெரிகிறது.

முற்பகல் 10 மணிக்கும் பிற்பகல் 1.30 மணிக்கும் இடையில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.


இந்த சம்பவம் இடம்பெறுவதற்கு முன்னர் வீட்டை விட்டு வெளியே சென்றிருந்த றெக்ஷயன் ஓட்டோவிலேயே தனது வீட்டுக்குத் திரும்பியுள்ளார். வழியில் கடை ஒன்றில் ஓட்டோவுக்கு எரிபொருள் நிரப்பப்பட்டுள்ளது. வீட்டுக்குச் சென்ற பின்னரே றெக்ஷயன் சுடப்பட்டுள்ளார். அவரை ஏற்றிச் சென்ற ஓட்டோச் சாரதி தொடர்பில் தகவல் கிடைக்கப் பெறவில்லை. பொலிஸார் அவர் தொடர்பில் விசாரணை முன்னெடுத்துள்ளனர். விசாரணை செய்ய பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. ஒரு வாரத்தில் சந்தேகநபரைப்பிடித்து விடுவோம். அவர் தற்கொலை செய்திருந்தால் அங்கு துப்பாக்கியை மீட்டிருக்க முடியும். துப்பாக்கி அங்கு காணப்படவில்லை.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர், துப்பாக்கி சுடுவதில் வல்லமையுள்ளவராக இருக்கிறார் என்பதனை உணர முடிகின்றது என்றார் பிரதிப் பொலிஸ்மா அதிபர்.

கட்சிக்குள் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இவ்வாறு நடந்திருக்குமோ என்று அவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்ட போது, அது தொடர்பில் இதுவரை தெரியவரவில்லை - என்றார். (த-4)

# பிரான்ஸ் சுற்றுலாப் பயணிகள் 50 ஆயிரம் பேர் இலங்கைக்கு

## கடந்த ஒரு வருடத்தில் மட்டும்



யாழ்ப்பாணம், நவ.30

கடந்த ஒரு வருட காலத்துக்குள் பிரான்ஸ் நாட்டு சுற்றுலாப் பயணிகள் ஏறத்தாழ 50 ஆயிரம் பேர் இலங்கை வந்துள்ளனர். இனி வரும் காலத்தில் இந்த எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று இலங்கைக்கான பிரான்ஸ் நாட்டுத் தூதுவர் ஜீன் போல் மொன்சாசு தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமை நீதியமைச்சில் சந்தித்து உரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்களின் மாநாட்டை இலங்கை வெற்றிகரமாக நிறைவு செய்தமை மகிழ்ச்சி தருகின்றது. இது இலங்கைக்குக் கிடைத்த ஒரு வெற்றியாகவே நான் கருதுகிறேன். இதன் காரணமாகச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கும் - என்றார்.

இந்தச் சந்திப்பில் உலக நாடுகள் பலவற்றில் தூக்குத் தண்டனையை நீக்குவது தொடர்பான ஒப்பந்தங்கள் பற்றியும், இங்கையில் தூக்குத் தண்டனையை இல்லாதொழிப்பது பற்றியும் பேசப்பட்டது.

கலந்துரையாடலில் பேசிய அமைச்சர் ரவூப் ஹக்கீம்,

தூக்குத் தண்டனை நீக்கம் தொடர்பில் நான் கவனமெடுக்கின்றேன். எதிர்வரும் ஜனவரி மாதத்துக்குள் கிழக்கு மாகாணத்தில் முதலீட்டு மாநாடு நடத்தப்படவுள்ளது.

இதற்கு பிரான்ஸ் நாட்டு முதலீட்டாளர்களையும் அனுப்ப வேண்டும் - என்றார்.

இந் நிகழ்வில் நீதியமைச்சரின் சட்ட ஆலோசகர் எம்.எச்.எம். சல்மான் இணைப்புச் செயலாளர் ஏ.ஆர். மன்சூர் உட்பட பல அதிகாரிகள் கலந்து கொண்டனர். (த-10)

# பாதீனியம் அழிப்பு மாதமாக டிசெம்பர்

யாழ்ப்பாணம், நவ.30

வடக்கு மாகாணத்தில் எதிர் வரும் டிசெம்பர் மாதத்தை பாதீனியம் ஒழிப்பு மாதமாக வட மாகாண விவசாயத் திணைக்களம் பிரகடனப் படுத்தியுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை நிலாவரைப் பகுதியில் பாதீனியம் ஒழிப்பு மாதம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஆகியோர் கலந்து கொண்டு இதனை ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.

பாதீனியத்தினால் பயிர்களின் விளைதிறன், தரம் என்பன குறைவடையும். பாரம்பரிய பல்வகைத் தன்மை பாதிக்கப்படும். கால் நடைகள் இதனை உண்பதால் நோய்கள் ஏற்படலாம். மனிதர்களுக்கும் நோய்கள் ஏற்படும். இதனால் பல்வேறு பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதால் பாதீனியத்தை ஒழிக்கும் நோக்குடன் டிசெம்பர் மாதம் முழுவதும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த மாதத்தில் விவசாய நிலங்கள், தரிசு நிலங்கள் ஆகியவற்றில் பாதீனியங்களை இனங்கண்டால் அதனை அழிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-14)

# ஓட்டோக்களின் வலது புறம் இறங்க நாளை முதல் தடை

யாழ்ப்பாணம், நவ.30

யாழ். குடாநாட்டில் சகல ஓட்டோக்களிலும் வலது பக்கக் கதவினால் பிரயாணிகள் இறங்குவதற்குத் தடை நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் நடைமுறைக்கு வருகிறது.

இதனை மீறுவோருக்கு எதிராக நாளைமறுதினம் திங்கட்கிழமை முதல் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸ் பொறுப்பதிகாரி சமிந்த டீ சில்வா தெரிவித்தார்.



ஓட்டோக்களில் அநேகமானவற்றில் வலது, இடது புறக் கதவுகள் ஊடாக இறங்கும் செயற்பாடுகள் தொடர்ந்து நடைமுறையில் உள்ளன. இனி மேல் இடது புறமாக மட்டுமே பிரயாணிகள் இறங்க வேண்டும். வலதுபுறமாக இறங்குவதால் விபத்துக்கள் அதிகரிக்கின்றன என்றும் அவர் மேலும் கூறினார். (த-4)

# வல்வையில் இரத்த தானம்

யாழ்ப்பாணம், நவ.30

வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலையில் நாளை ஞாயிற்றுக்கிழமை இரத்த தான முகாம் முற்பகல் 9 தொடக்கம் மதியம் ஒரு மணி வரை இடம்பெறவுள்ளது.

வைத்தியசாலை நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம் பெறும் இந்த முகாமில் அனைவரையும் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்குமாறு யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கி அறிவித்துள்ளது. (த-4)

# வடக்கு மாகாண சபையுடன் இணைந்து செயலாற்ற தயார்

## நோர்வேத் தூதுவரிடம் கூறினார் ஜனாதிபதி



கொழும்பு, நவ.30

"புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாண சபையுடன் இணைந்து பணியாற்றத் நான் தயாராக உள்ளேன்" என்று நோர்வேத் தூதுவரிடம் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் கிறீட் லொசனுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை கொழும்பில் சந்திப்பு இடம் பெற்றது.

சிநேகபூர்வமான சந்திப்பாக இது இடம்பெற்றதாகவும், ஜனாதிபதியும், தூதுவரும் இலங்கையின் தற்போதைய அபிவிருத்தி விடயங்கள் தொடர்பில் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டதாகவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

போர் முடிவுற்ற பின்னர் வடக்கில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் நோர்வேத் தூதுவர் இந்தச் சந்திப்பின் போது திருப்தி வெளியிட்டுள்ளார். அத்துடன் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தியமை தொடர்பில் நோர்வேயின் வரவேற்பை அவர் ஜனாதிபதியிடம் வெளிப்படுத்தியுள்ளார்.

வடக்கில் இயல்பு நிலையை மீண்டும் தோற்றுவிக்கவும், வடக்கு மக்களின் சமூக, பொருளாதார முன்னேற்றங்களை உறுதிப்படுத்துவதற்காகவும், புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள வடக்கு மாகாண சபையுடன் தான் இணைந்து செயற்படத் தயராக உள்ளதாகவும் ஜனாதிபதி நோர்வே தூதருக்கு தெரிவித்தார் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. (த-5)

# காணாமற்போனோர் முறைப்பாடுகளில் அரைவாசிக்கு மேல் படையினருடையவை

கொழும்பு, நவ.30

காணாமற்போனவர்கள் தொடர்பில் 8 ஆயிரம் முறைப்பாடுகள் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்குக் கிடைத்துள்ள போதும், அதில் அரைவாசிக்கு மேற்பட்ட முறைப்பாடுகள் காணாமற் போன இராணுவச் சிப்பாய்கள் தொடர்பானவை என்று தெரிய வருகின்றது.

1990 ஆம் ஆண்டு தொடக்கம் 2009ஆம் ஆண்டுவரை வடக்கு, கிழக்குப் பகுதிகளில் காணாமற் போனவர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

இந்த ஆணைக் குழுவுக்கு முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்கான இறுதித் தினம் இன்றாகும்.

இதுவரை காணாமற் போனவர்கள் தொடர்பில் 8 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக ஆணைக் குழுவின் தலைவரும், முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதியுமான பராக்கிரம பரணகம தெரிவித்தார்.

முறைப்பாடுகளின் சரியான எண்ணிக்கையை குறிப்பிட முடியாது. காணாமற் போனவர்கள் தொடர்பில் இரட்டிப்பான முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றிருக்கலாம். அதனாலேயே சரியான எண்ணிக்கையை உடனடியாக வெளியிட முடியாது என்றும் அவர் கூறினார்.

வடக்கு - கிழக்கு இளைஞர், யுவதிகள் தொடர்பில் மாத்திரமின்றி இராணுவ சேவையிலிருந்து காணாமற் போனவர்கள் தொடர்பிலும் முறைப்பாடு கிடைத்துள்ளது. அனைத்து முறைப்பாடுகள் குறித்தும் செயற்பட வேண்டியுள்ளது எனவும் பராக்கிரம பரணகம தெரிவித்தார். (த-5)

# தமிழரசுக் கட்சியின் மானிப்பாய் கிளை கலைப்பு

யாழ்ப்பாணம், நவ.30

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மானிப்பாய் தொகுதிக் கிளை கலைக்கப்பட்டுள்ளதாக கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா அறிவித்துள்ளார்.

கௌரிகாந்தனைத் தலைமையாகக் கொண்ட மானிப்பாய் தொகுதிக் கிளையை, இந்த வார ஆரம்பத்திலிருந்து கலைத்துள்ளதாக மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

கட்சிக்குக் கட்டுப்படாமல் மீறிச் செயற்படுவதாக கிளையின் தலைவர் மீது குற்றம் சுமத்தியும், வேறு சில காரணங்களைக் குறிப்பிட்டும் மானிப்பாய்த் தொகுதிக் கிளையைக் கலைப்பதாக அவர் கூறியுள்ளார். (த-5)

# வடக்கில் விவசாயத் துறைக்கு நிபுணத்துவ ஆலோசனைகள்

## மாகாண விவசாய அமைச்சர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ.30

வடக்கு மாகாணத்தில் விவசாயத்துறை சார் செயற்பாடுகளில் தன்னிறைவு அடைவதற்காக நிபுணத்துவ ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன. இதற்காக சிந்தனைக் குழாம் ஒன்றையும், ஆலோசனைச் சபை ஒன்றையும் அமைக்கவுள்ளதாக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விவசாயம், கமநல சேவைகள், கால்நடை வளர்ப்பு, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றுப்புறச் சூழல் ஆகிய துறைகளை நவீன முறையில் மேம்படுத்தி இந்தத் துறைகளில் வடக்கு மாகாணத்தைத் தன்னிறைவு அடையச் செய்வதற்கு அறிஞர்களின் பங்களிப்பு அவசியமாகும்.

அந்த வகையில் எமது அமைச்சுக்குத் தேவையான நிபுணத்துவ ஆலோசனைகளைப் பெறும் பொருட்டுத் தாயகம், தமிழகம் மற்றும் புலம்பெயர் நாடுகளில் வாழும் துறைசார் அறிஞர்களை உள்ளடக்கிய சிந்தனைக் குழாம் ஒன்றை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழாமில் இடம்பெறுபவர்கள் இணைய வழித் தொடர்பாடலின் ஊடாகத் தமது ஆலோசனைகளை வழங்க முடியும்.

அத்தோடு தாம் காலத்துக்குக் காலம் நேரில் கூடிக் கலந்தாலோசிக்கும் நோக்கில் ஆலோசனைச் சபை ஒன்றையும் அமைக்கவுள்ளோம்.

இந்த சிந்தனைக் குழாமிலும், ஆலோசனைச் சபையிலும் இடம்பெற்றுத் தமது மேலான ஆலோசனைகளையும், கருத்துக்களையும் வழங்க விரும்பும் பற்றாளர்கள் அனைவரையும் npminiagri@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு உடனடியாகத் தொடர்பு கொள்ள முடியும் என்றார். (த-5)

# கடந்த வாரத்தில் மட்டும் 10 இடங்களில் திருட்டு

*செய்தியாளர் சந்திப்பில் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், நவ.30

யாழ்.குடாநாட்டில் கடந்த வாரம் 10 இடங்களில் இடம்பெற்ற கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவங்களில் 7 இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியான பொருள்கள் பறிபோயுள்ளன என்று யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். ஜிவ்றி தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ்.நகரில் கடை உடைத்து 22 ஆயிரம் ரூபா பெறுமதியான இரும்புக் கம்பிகள் திருடப்பட்டுள்ளன. சுழிபுரம் மூளாயில் பெண்ணொருவரைத் தாக்கிவிட்டு அவர் அணிந்திருந்த ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான தாலிக்கொடியை அறுத்துச் சென்றுள்ளனர்.

தெல்லிப்பழையில் அளவெட்டி மேற்கைச் சேர்ந்தவரது 4 இலட்சம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. சந்தேகத்தில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டுவில் வடக்கில் கடைக்குள் புகுந்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. சந்தேகத்தில் மானிப்பாயைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மானிப்பாய் மெமோறியல் பாடசாலை ஒழுங்கையில் வீடு உடைத்து ஒரு இலட்சத்து 10 ஆயிரத்து 300 ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. மானிப்பாய் சங்கரத்தை வீதியில் வீட்டிலிருந்து 15 ஆயிரம் ரூபா பெறுமதியான தண்ணீர் இறைக்கும் இயந்திரம் திருடப்பட்டுள்ளது.

மீசாலை மேற்கில் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான கைத்தொலைபேசி திருடப்பட்டுள்ளமை தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சந்தேகத்தின் பேரில் 27, 32 வயதுகளையுடைய கெருடாவிலைச் சேர்ந்த இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொடிகாமத்தில் மாவீரர் தினத்தன்று கடை உடைத்து 5 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. வேலணை மேற்கில் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான பசுமாடு கடத்தப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-4)

# விசுவமடுவில் நவீன அரிசி ஆலை



விசுவமடு, நவ.30

விசுவமடுவில் நேற்று நவீன அரிசி ஆலையை வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

ஆஸ்திரேலிய அரசின் நிதியுதவியுடனும், ஐ.ஓ.எம். நிறுவனத்தின் அனுசரணையுடன் விசுவமடு விவசாயிகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் இந்த அரிசி ஆலை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்துகொண்டார். இலங்கைக்கான ஆஸ்திரேலிய உதவித் தூதுவர் ரொபின்மூடி, இலங்கையிலுள்ள மாலைதீவுக்கான தொழில்நுட்ப ஆலோசகர் டொங்லின் லீ, முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன், வட மாகாண சபையின் உதவி அவைத்தலைவர் ம.அன்ரனி ஜெயநாதன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் வட மாகாண சபை உறுப்பினர்களாக து.ரவிகரன், திருமதி கு.மேரிகமலா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். (க-433)

## பிறரை அடித்த குற்றச்சாட்டில் 25 பேர்கைது

யாழ்ப்பாணம், நவ.30

பிறருக்கு அடித்து காயப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கடந்த வாரம் 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். ஜிவ்றி தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அதே சமயம் மது போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 8 பேரும், சட்டவிரோதமாக மது விற்பனை செய்த குற்றச்சாட்டில் 14 பேரும், பொது இடத்தில் மது அருந்திய குற்றச்சாட்டில் 4 பேரும், சந்தேகத்தின் பேரில் 10 பேரும், மோசடிக் குற்றச்சாட்டில் 5 பேரும், களவு எடுத்த குற்றச்சாட்டில் 5 பேரும், அத்துமீறி வீடு புகுந்த குற்றச்சாட்டில் 2 பேரும், பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 2 பேரும், டெங்கு பரவும் சூழலைப் பேணிய குற்றச்சாட்டில் 5 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்- எனவும் அவர் தெரிவித்தார். (வ-4)

# ரூ. 41 லட்சத்து 69 ஆயிரம் காசோலை மோசடிகள்

*பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், நவ.30

யாழ்.குடாநாட்டில் 41 இலட்சத்து 69 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி இடம்பெற்றுள்ளதாக யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜிவ்றி தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.நகரிலுள்ள ஒருவருக்கு எதிராக மொரட்டுவ பகுதியைச் சேர்ந்த ஒருவர் 11 லட்சத்து 97 ஆயிரத்து 292 ரூபா பெறுமதியான காசோலை மோசடி தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதே முறைப்பாட்டாளர் ஸ்ரான்லி வீதியைச் சேர்ந்த வியாபாரிக்கு எதிராக 15 லட்சத்து 71 ஆயிரம் ரூபா காசோலை மோசடி தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளார். சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அரசடி வீதி, நவாலியைச் சேர்ந்த ஒருவர் 5 லட்சம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி செய்தமை தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளார்.

நீர்வேலியைச் சேர்ந்த ஒருவர் 9 லட்சம் ரூபா பெறுமதி யான காசோலை மோசடி செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் மற்றொருவருக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்-என்று மேலும் தெரிவித்தார். (வ-4)



# வியாபார நிலையம் உடைத்துத் திருட்டு

யாழ்ப்பாணம், நவ.30

ஆனைக்கோட்டை, ஆறுகால் மடத்திலுள்ள வியாபார நிலையம் ஒன்றை உடைத்த திருடர்கள் குபேரன் சிலையுடன் பெட்டி யில் வைக்கப்பட்டிருந்த சுமார் 75 ஆயிரம் ரூபா பணம் மற்றும் பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

கடந்த புதன்கிழமை இரவு 10.30 மணி அளவில் வியாபாரநிலைய உரிமையாளர் கடையைப் பூட்டிவிட்டு சென்று நேற்று முன்தினம் அதிகாலை 4.30 மணியளவில் கடைக்குச் சென்று பார்த்தபோதே திருட்டுப்போனளமை குறித்து தெரியவந்தது.

திருடர்கள் கடையைப் பூட்டியிருந்த 3 பித் தளைப் பூட்டுகளையும் உடைத்து வெளியே வீசிவிட்டு பொருள் களைக் கிளறி பால்மா பைக் கற்றுகள், மீள்நிரப்பு அட்டைகள், நுளம்புத்திரிப் பெட்டி கள் உட் பட அனைத்துப் பொருள் களிலும் ஒரு தொகையை திருடர்கள் எடுத்துச் சென்றுள்ளனர்.

அங்கு மேசையில் வைக்கப்பட்டிருந்த குபேரன் சிலை கொண்ட கண்ணாடிப் பெட்டியை வெளியே எடுத்துச் சென்று அதனுள் இருந்த சுமார் 75 ஆயிரம் ரூபா பணத் தாள்களையும் திருடிச் சென்றுள்ளனர். எதிர்வரும் 7 ஆம் திகதி ஐயப்ப சுவாமி கோயிலுக்கு அதனை எடுத்துச் செல்ல இருந்ததாகத் தெரிவித்தார் வியாபார நிலைய உரிமையாளர்.

சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் அதிகாலை 5.30 மணியளவில் யாழ்.பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறையிட்டுக் காத்திருந்த போதும் பொலிஸார் நீண்ட நேரத்தின் பின்னரே சுமார் 11 மணியளவிலேயே வியாபார நிலையத்துக்குச் சென்று விசாரணை மேற்கொண்டு கைரேகைகளைப் பதிவு செய்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4)



## ஆலயத்தில் கற்பூரம் எரித்த அதிபருக்கு விசாரணை

பளை, நவ.30

ஆலயத்தில் தேங்காய் உடைத்து கற்பூரம் எரித்த பாடசாலை அதிபர் புலனாய்வுத் துறையினரால் ஆலய முன்றிலில் நீண்ட நேரம் தடுத்து வைக்கப்பட்டார். இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

பளைப் பிரதேசத்தில் ஏ-9 வீதிக்கு அருகில் உள்ள தமது பரம்பரை இந்து ஆலயத்துக்குச் சென்று தேங்காய் உடைத்து கற்பூரம் எரித்ததாலேயே அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

தான் பாடசாலையின் அதிபர் என்றும் அதே ஊரைச் சேர்ந்தவர் என்றும் வாராவாரம் ஆலயத்துக்கு வந்து கற்பூரம் எரிப்பதாகவும் அவர் கூறியபோதிலும், அதனை படையினர் செவிசாய்க் காமல் தடுத்து வைத்திருந்தனர். பின்னர் அடையாள அட்டை இலக்கம் உட்பட பல் வேறு விவரங்கள் பெற்ற பின்னர் காலையில் பாடசாலைக்கு வந்து விசாரணை நடத்துவதாகக் கூறி அன்றிரவு அவரை விடுவித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.(வ)

# கடை அறைகள் உரிமை மாற்றம்

*சாவகச்சேரி நகரசபை தீர்மானம்*

தென்மராட்சி,நவ.30

சாவகச்சேரி நகரசபைக்குச் சொந்தமான கடைத் தொகுதிகளில் மூன்று கடை அறைகளை உரிமை மாற்றம் செய்ய நகரசபையினரால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நகரசபையினர் பதவியேற்ற காலத்துக்கு முன்னர் நாட்டு நிலைமை காரணமாக கடை அறையின் வாடகையாளரால் கைமாற்றிக் கொடுக்கப்பட்ட கடைகளை தற்போதைய உரிமையாளருக்கு பெயர் மாற்றிக் கொடுப்பதென சபை யால் தீர்மானிக்கப்பட்டு அது தொடர்பாக விண்ணப்பம் தகுந்த ஆவணங்களுடன் கோரப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் கிடைத்த விண்ணப்பங்கள் சபையால் தெரிவு செய்யப்பட்ட விசேட குழுவால் பரிசீலனை செய்யப்பட்டன. அவற்றில் முதல் கட்டமாக மூன்று கடைகளின் வாடகையாளர்களின் பெயர்களை மாற்றிக் கொடுப்பது என்று தீர்மானிக் கப்பட்டுள்ளது.

கிடைத்த விண்ணப்பங்கள் விசேட குழுவால் பரிசீலனை செய்யப்பட்டு வருவதாகவும் தகுதியானவை தெரிவு செய்யப்பட்டு காலக்கிரமத்தில் பெயர் மாற்றம் செய்யப்படும் என்றும் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை தெரிவித்தார். (வ-9)

# புதிய கட்டடப் பணிகள் அடுத்த வருடம் ஆரம்பம்

*மாநகர சபை முதல்வர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், நவ.30

யாழ்.மாநகர சபையின் புதிய கட்டடத்துக்கு முதற் கட்டமாக 200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் அடுத்த வருடம் மேற்கொள்ளப்படும் என்று யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மாநகர சபையின் கட்டட புனரமைப்பு தொடர்பில் உறுப்பினர்களால் கேள்வி எழுப்பப்பட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாநகர சபையின் புதிய கட்டடம் அமைப்பதற்கு 810 மில்லியன் ரூபா நிதி தேவைப்படும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி கிடைக்க 4, 5 வருட காலங்கள் தேவைப்படும். எனவே முதற் கட்டமாக 200 மில்லியன் ரூபா நிதியைப் பயன்படுத்தி புதிய கட்டடத்தை அமைப்பதற்கான பணிகள் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படும். தற்போது உள்ள மாநகர சபை கேட்போர் கூடக் கட்டடத்தைத் தவிர ஏனைய கட்டடங்கள் பழைய கட்டடப் பொருள்களைக்கொண்டு கட்டப்பட்டுள்ளதால் அவை இடிந்துவிழும் நிலையில் உள்ளன. எனவே இவற்றைபுனரமைக்க வேண்டிய தேவை மாநகர சபைக்கு உள்ளது- என்றார். (வ-14-7)

# யாழ்.சிவப்பிரகாசம் வீதியை ஒளிரச் செய்யப்போவது யார்?

*இருபறியால் பிரதேச மக்கள் சிரமம்*

யாழ்ப்பாணம், நவ.30

யாழ்.வண்ணார் பண்ணை சிவப்பிரகாசம் வீதியில் வீதி விளக்குகள் சீராகப் பொருத்தப்படாததால் இரவு வேளைகளில் அந்த வீதியூடாக போக்குவரத்துச் செய்வோரும், வீதியில் வசிக்கும் மக்களும் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

வீதி விளக்குகளை சீராகப் பொருத்தி ஒளிரவிட நடவடிக்கை எடுக்குமாறு பல தடவைகள் மாநகர சபையினரிடமும் மின்சார சபையினரிடமும் கோரிக்கை விடுத்த போதிலும் ஒருவரை ஒருவர் மாறிமாறி தாம் பொறுப்பு அல்ல என்று தெரிவிக்கின்றனர் எனவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மின் கம்பங்கள் புதிதாக மாற்றப்பட்டபோது சில இடங்களில் மின் விளக்குகள் திரும்பப் பொருத்தப்படவில்லை என்றும் அதேவேளை மின் வயர்களும் சீராக கம்பங்களில் இணைக்கப்படவில்லை என்றும் அவர்கள் முறையிடுகின்றனர்.

இதேவேளை கே.கே.எஸ். வீதியில் இருந்து சிவப்பிரகாசம் வீதிக்குச் செல்லும் இளையதம்பி மகாவித்தியாலய வீதி புனரமைக்கப்பட்டு அரைகுறையில் கைவிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக குறித்த வீதியை பயன்படுத்துவதிலும் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொறுப்புடன் இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தீர்மானம் எதுவும் இல்லாத மாநகர சபையின் கூட்டம்

## எதிர்ப்புத் தெரிவிப்பதிலேயே உறுப்பினர்கள் ஆர்வம்

யாழ்ப்பாணம், நவ.30

யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் அறிவிக் கப்பட்டபடி நேற்றுக் கூட்டப் பட்ட போதும் அங்கு தீர்மானங் கள் எதுவும் நிறைவேற்றப்பட வில்லை. உறுப்பினர்களி டையே விவாதம் மட்டுமே நடைபெற்றது.

மாநகர சபையின் கூட்ட நிகழ்சி நிரலின்படி கூட்டம் குறித்த நேரத்தில் நேற்று ஆரம்பிக்கப் பட்டது. இதன் போது நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப அறிக்கைகளை உறுப்பினர்கள் ஆமோதிப்புச் செய்ய வேண்டும் என்று சபைச் செயலாளரால் தெரி விக்கப்பட்டது.

எனினும் வாசிக்கப்பட்ட அறிக் கையை எதிர்க்கட்சி உறுப் பினர்களோ, ஆளுங்கட்சி உறுப்பினர்களோ ஏற்றுக் கொள்ளவில்லை. உறுப்பினர் கள் அறிக்கையில் உள்ள விட யங்களுக்குக் காரணங்கள் கேட்டு விவாதிக்கத் தொடங்கி னர். ஆனால் கட்சி உறுப்பி னர்கள் சபையில் அதிகமாக இருந்தமையால் ஒவ்வொரு அறிக்கைக்கும் அவர்கள் எதிர்ப் பைத் தெரிவித்த வண்ணம் இருந்தனர்.

இதனால் கூட்டத்தில் தீர்மா னங்கள் எதனையும் மேற் கொள்ள முடியவில்லை. சரி யான அறிக்கை அடுத்த கூட் டத்தில் வாசிக்கப்படும் என்று அங்கு கூறப்பட்டது. (த-4)

# ஈழத் தமிழர் தொடர்பில் பேசுகிறார் சிதம்பரம்



சென்னை, நவ.30

இலங்கைத் தமிழர்களின் வாழ் வுரிமையும், இந்திய அரசின் நிலைமையும் என்ற தலைப் பில் சென்னையில் இன்று நடைபெறும் கூட்டத்தில் மத் திய நிதி அமைச்சர் ப. சிதம் பரம் உரை நிகழ்த்தவுள்ளார்.

இலங்கைத் தமிழர் பிரச் சினையில் காங்கிரஸ் தலை மையிலான மத்திய அரசு, இலங்கை அரசுக்கு ஆதர வாக நடந்து கொள்வதாக தமி ழகத்தில் பல்வேறு அமைப் புகளும் அரசியல் கட்சிகளும் குற்றம்சாட்டி வருகின்றன.

இலங்கைப் பிரச்சினையைக் காரணம் காட்டித்தான் மத்திய அமைச்சரவையிலிருந்தும் காங்கிரஸ் உடனான கூட்ட ணியிலிருந்தும் தி.மு.க. வில கியது. தமிழக சட்டப் பேர வையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும் மீறி இலங் கையில் அண்மையில் நடை பெற்ற பொதுநலவாய மாநாட் டில் இந்தியா பங்கேற்றது. அதனையடுத்து காங்கிரஸ் கட்சிக்கு எதிராக தமிழகத்தில் ஆர்ப்பாட்டங்கள், ரயில் மறி யல் என் போராட்டங்கள் நடைபெற்றன.

அதனைத் தொடர்ந்து இலங் கைத் தமிழர்களுக்காக மத் திய அரசு செய்த உதவிகள் குறித்து பத்திரிகைகளில் விளம் பரம் செய்யப்பட்டது.

இந்நிலையில் சென்னையில் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும் கூட்டத்தில் 'இலங் கைத் தமிழர்களின் வாழ் வுரிமையும் இந்திய அரசின் நிலையும்' என்ற தலைப்பில் ப.சிதம்பரம் உரைநிகழ்த்த வுள்ளார்.

அவரது ஆதரவாளர்கள் ஏற் பாடு செய்துள்ள இந்தக் கூட் டத்துக்கு தமிழ்நாடு காங்கிரஸ் குழுத் தலைவர் பி.எஸ். ஞானதேசிகன் உட்பட கட்சி யின் தலைவர்கள் எவரும் அழைக்கப்பட வில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (வ)

" "

இலங்கைப் பிரச்சினையை காரணம் காட்டித்தான் மத்திய அமைச்சரவை யிலிருந்தும் காங்கிரஸ் உடனான கூட்ட ணியிலிருந்தும் தி.மு.க. விலகியது.

# இலக்கு நோக்கிய பயணத்தில் மனம் தளராது முன்னேறுங்கள்

குருநகர், நவ.30

மாணவர்கள் இலக்கு நோக்கிய பயணத்தில் மனம் தளராது முன்னேற முயல வேண்டும். இவ்வாறு யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியா லயத்தின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வுக்குத் தலைமை தாங்கி உரை நிகழ்த்திய பாடசாலை யின் பழைய மாணவன் அருட் பணி ம.மரிசுதன் தெரி வித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய சமுதாயத்தின் தலை முறையாகவுள்ள மாணவர் கள் நல்ல குறிக்கோளை நிலை நிறுத்த வேண்டும். அந்தக் குறிக்கோளை நோக்கி முன் னேற வேண்டும். -என்றார். (ந-51)

# மாணவருக்கு கௌரவிப்பு

வவுனியா,நவ.30

வவுனியாவில் மக்கள் வங்கி யின் வவுனியா கிளையின் சிறுவர் தின விழாவும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் களைக் கௌரவிக்கும் விழா வும், நாளை ஞாயிறு பிற் பகல் 2 மணிக்கு கலாசார மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பாடசாலைச் சிறார் கள், அதிபர்கள், கலா சார உத்தியோகத் தர்கள், மக்கள் வங் கியின் பிரதிநிதிகள், திணைக்களத் தலைவர்கள் எனப் பலரும் கலந்து சிறப் பிக்கவுள்ளனர். (வ-402)

# இந்தியக் கடல் எல்லையில் இலங்கை மீனவர் கைது

சென்னை, நவ.30

இந்தியக் கடல் பகுதியில் மீன் பிடித்ததாக இலங்கை மீனவர் கள் 6 பேர் கைது செய்யப்பட் டுள்ளனர்.

இதுகுறித்து சென்னை துறை முகம் பொலிஸ் தரப்பில் தெரி விக்கப்பட்டுள்ளதாவது:-

இந்தியக் கடல் பகுதியில் கட லோரப் பாதுகாப்பு படையினர் கடந்த புதன்கிழமை ரோந் துப் பணியில் ஈடுபட்டி ருந்தனர்.

அப்போது சர்வதேச கடல் எல்லையைத் தாண்டி இந்தியக் கடல் பகுதிக்குள் வந்து இலங்கைப் படகு மீன் பிடித்துக் கொண்டிருந் தமை தெரியவந்தது.

அதையடுத்து பாது காப்புப் படையினர் அந்தப் படகை பறி முதல் செய்து, அந்தப் படகில் இருந்த இலங் கையைச் சேர்ந்த 6 மீனவர்களை கைது செய்தனர். பின்னர் அவர்களை, சென்னைத் துறை முகப் பொலிஸாரிடம் ஒப்ப டைத்தனர். பறிமுதல் செய் யப்பட்ட படகும் ஒப்படைக் கப்பட்டது.

துறைமுகப் பொலிஸார் 6 இலங்கை மீனவர்கள் மீதும் வழக்குப் பதிவுசெய்து, விசா ரணை நடத்திவருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

# பாராட்டு விழா

யாழ்ப்பாணம் நவ - 30

கொக்குவில் இந்துக்கல்லூரி யின் முன்னாள் அதிபர் அ. அகிலதாஸின் சேவை நயப் புப் பாராட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத் தில் முன்னாள் அதிபர் பொ. கமலநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் லோகநாதன் (துரைராசா)

(உரிமையாளர் நியூ கொழும்பு ஸ்ரோர்ஸ் புளியங்கூடல் சந்தி)



சரவணை மேற்கைப் பிறப் பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் லோக நாதன் நேற்று (29.11.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறி விக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
021 4910791, 077 0585766

சரவணை மேற்கு.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



பிறப்பு 22.01.1962 — இறப்பு 30.10.2013

### திருமதி தேவிகா கனகசபாபதி

கடந்த (30.10.2013) புதன்கிழமை சிவ பதமடைந்த எங்கள் குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்தியம் இன்று (30.11.2013) சனிக்கிழமை நடைபெற்று, நாளை (01.12. 2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணி யளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த் தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின் றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு சகல வழிகளிலும் உதவி புரிந்து ஆறுதல் தெரிவித்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள் கின்றோம்.

3ஆம் வட்டாரம், முள்ளியவளை. குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### செல்வி கமலாம்பிகை ஆறுமுகம்

(ஆங்கில ஆசிரியை, யா/ அளவெட்டி சீனன்கலட்டி ஞானோதயா வித்தியாசாலை)



அளவெட்டியைச் சேர்ந்த செல்வி கமலாம் பிகை ஆறுமுகம் கடந்த (24.12.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் மனோன்மணி தம்பதியரின் அன்புமகளும் வித்தியானந்தனின் (ஆஸ்திரேலியா) அன்புச்சகோதரியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் கடந்த (24.11.2013) ஞாயிற்றுக் கிழமை அளவெட்டியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி மனோன்மணி ஆறுமுகம் (தாய்)

கேணிக்கரை அளவெட்டி.

## மரண அறிவித்தல்

### திருநாவுக்கரசு சச்சிதானந்தன்

(இலங்கை போக்குவரத்து சபை முன்னாள் முகாரி (Foreman)



மல்லாகத்தை பிறப்பிடமாகவும், இணுவில் மஞ்சத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு சச்சிதானந்தன் நேற்று (29.11.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு - சின்னாச்சிப் பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான நடராஜா-நாகம்மா தம்பதியரின் அன்புமருமகனும் இந்திராணியின் அன்புக்கணவரும் ஜெயேந்திரன், நவநீதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் பெறாமகனும் இந்திராணியின் அன்புத்தம்பியும் சேயோன், பாலமுரளி, முகுந்தன், முரளீதரன், செந்தில்ராஜா மற்றும் கஸ்தூரி, வாசுகி, விதுரன், வானதி, வீஸ்மன், இதபாஷினி, சாருகாசினி, நந்தேஷன் ஆகி யோரின் அன்பு மாமனும் சூரியகலா, கலைவேந்தன், தமிழ்வேந்தன் காலஞ்சென்ற காண்டீபன் மற்றும் Dr.கஜேந்திரன், காரத்திகா, சிந்துஜன் ஆகியோரின் சிறிய தந்தையும் காலஞ்சென்ற கேசவன் மற்றும் கமலேஸ்வரி, சறோஜினிதேவி, திருஞானசம்பந்தர், ஞானசம்பந்தர், ஞானசூரியர் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற கனக சபாபதி மற்றும் யோகராசா ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.12.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
ச. ஜெயேந்திரன் (மகன்) தொ.பே. 077 6635942

மஞ்சத்தடி இணுவில்.

## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினம் நவரத்தினம்




அம்பன் குடத்தனையைப் பிறப்பிடமாகவும் நாதன் குடியிருப்பு விசுவ மடுவை வசிப் பிட மாகவும் கொண்ட திருமதி இரத்தினம் நவரத்தினம் நேற்று (29.11.2013) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2013) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2.00 மணிக்கு தகனக்கிரியைக்காக விசுவமடு இந்து மயானத்துக்கு எடுத் துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாதன் குடியிருப்பு, விசுவமடு. தகவல்: சதீஸ் (மகன்)

உதயன்
30/11/2013





## மூடாத பதுங்குகுழியால் டெங்கு பரவும் அபாயம்

யாழ்ப்பாணம், நவ.30

யாழ்ப்பாணம், திருநெல்வேலி சிவராசா அவனியுவில் காணப்படும் மிக நீண்டகால பதுங்கு குழி இன்னமும் மூடப்படாத நிலையில் உள்ளது. இதனால் மழை காலத்தில் இதனுள் நீர் நிறைந்து டெங்கு பரவக்கூடிய சூழல் காணப்படுகிறது.

மழைகாலத்தில் வீதியை மூடி வெள்ளம் தேங்கும் வேளையில் குறித்த பதுங்குகுழி இருப்பதே தெரியாது. எனவே அந்தப் பகுதியால் செல்பவர்கள் உயிராபத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை காணப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த மாதம் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவின் டெங்கு ஒழிப்பு தொடர்பாக இடம்பெற்ற கூட்டத்திலும் குறித்த பதுங்கு குழியில் மழை நீர் தேங்கி டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய நிலை உள்ளதாகச் சுட்டிக் காட்டப்பட்டது. அத்துடன் விஷ ஜந்துக்களின் உறைவிடமாகவும் இது அமைவதாகவும் பொதுமக்களுக்கு பாதுகாப்பு அளிக்கக் கூடியதாக இந்தப் பதுங்கு குழியை மூடு வதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-7)

## கல்விமாணி பாடநெறி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.30

கல்விமாணி பட்டக் கற்கை நெறிக்கான புதிய வகுப்புகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் இக் கற்கை நெறியை ஆரம்பிப்பவர்களுக்கான பதிவும் பாட அறிமுக நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியில் நடைபெற்றது.

அன்றைய தினம் இந் நிகழ்வுக்கு வருகை தராதவர்கள் நாளை சனிக்கிழமை தாம் கற்கையை பூர்த்தி செய்யவிருக்கும் நிலையத்தில் தமது பதிவுகளைச் செய்ய முடியுமென்று அறிவிக்கப்பட்டுள் ளது.

இக் கற்கை நெறி யாழ். மாவட்டத்தில் யாழ்.நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-422)

## காதோடு தோடுகளை அறுத்த கொள்ளையர்

*நள்ளிரவில் தனித்திருந்த மூதாட்டியின் வீட்டுக்குச் சென்ற கொள்ளையர்கள், மூதாட்டி அணிந்திருந்த தோடுகளை காதோ சேர்த்து அறுத்து எடுத்ததோடு அங்கிருந்த பணத்தையும் கொள்ளையடித்தனர். மூதாட்டி கூக்குரலிட்டதால் அவரின் முகத்தில் கடுமையாகத்தாக்கி காயமேற்படுத்தி விட்டுத் தப்பிச்சென்றனர். அராலிவடக்கு, வட்டுக்கோட்டையில் கடந்த புதன்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இதில் அதே இடத்தைச் சேர்ந்த செ.தங்கமுத்து (வயது-63) என்பவரே காது அறுபட்டு முகத்திலும் காயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். வட்டுக்கோட் டைப் பொலிஸார் விசாரணைகளைமேற் கொண்டுள்ளனர். (வ-4)*

# குறைபாடுகள் விரைவில் நிவர்த்தி செய்யப்படும்

*காரைநகர் மருத்துவமனைக்கு பயணம் செய்த சுகாதார அமைச்சர் உறுதி*



காரைநகர், நவ.30

காரைநகர் அரசினர் மருத்துவமனைக்கு வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை திடீர் பயணம் மேற்கொண்டார்.

மருத்துவமனைக்குச் சென்ற அவர் அங்குள்ள குறைபாடுகளை நேரடியாகப் பார்வையிட்டதுடன் அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப் படவுள்ளதாக உறுதியளித்தார்.

இது தொடர்பில் அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

நான் மருத்துவ மனைக்குத் திடீர் பயணம் செய்ததன் நோக்கம் தவறு களைக் கண்டு பிடிப்பதற் கல்ல. குறைபாடுகளைக் கண்டு நிவர்த்தி செய்வதற்கே. இங் குள்ள பல்வேறு குறைபாடு களை நேரடியாகக் கண்டு கொண்டேன். அவற்றை நிவர்த்தி செய்வதற்கு ஏற்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பேன்.

இங்கு நிரந்தர வைத்திய அதிகாரி எவரும் இல்லாத காரணத்தால் நோயாளர்கள் பெரும் சிரமப்படுவதாகவும் உடனடியாக நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவரை நியமிக்க வேண்டும் என்று நிர்வாகத்தால் விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்றுக்கொண்ட இரு வாரங்களில் நிரந் தர வைத்திய அதிகாரி நிய மிக்கப்படுவார்- என்றார்.

மேலும்இந்தமருத்துவமனைக்கு வேறு எங்கும் இல்லாத அளவுக்கு அன்பளிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவசர சிகிச்சைப் பிரிவு, பரிசோதனைக் கூடக் கட்டடத் தொகுதி என்பன புதிதாக அமைக்கப் பட்டுள்ளதுடன் மருத்துவ உபகரணங்கள் கணினி என்பனவும் இந்த ஊர் வள்ளல்களால் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது கூட ஆண், பெண் விடுதிகளைப்புனரமைக்கப்படும் பணிகள் இடம்பெறுகின்றன.

புலம்பெயர்ந்து வாழும் இந்த ஊர் மக்களால் மேற்கொள்ளப்படும் பணி மெச்சத்தக்கது. இந்த ஊர் மக்களின் சேவையைப் பாராட்டுவதுடன் இங்கு கடமையாற்றுபவர்கள் சேவை மனப்பாங்குடன் கடமையாற்ற வேண்டும்.

ஒரு மனிதன் இறக்கும்போது அவருக்கு இறுதி மரியாதை வழங்க வேண்டும். சேதமடைந்துள்ள சவச்சாலையைப் பார்க்கும் போது மிக வேதனையாக உள்ளது. எனவே இதனை உடனடியாகப் புனர மைத்து ஏற்ற வசதிகள் வழங் கப்பட வேண்டும் - என்றார்.

மருத்துவ மனை யில் சேதமடைந்துள்ள சவச்சாலையை புனரமைக்க வேண்டும் என்றும் அவசர சிகிச்சைப் பிரிவுக்கான கட்டடம் உள்ள போதிலும் உபகரணங்கள் இல்லாமை, பிரசவ விடுதியில் அடிப்படை வசதிகள் இல்லாமை, மருத்துவ ஆய்வு கூடம் இருந்தும் மருத்துவப் பரிசோதகர் (எம்.எல்.ரி) இல்லாதமை தொடர்பாக அமைச்சருக்கு சுட்டிக்காட்டப்பட்ட போது அவற்றை நேரடியாகப் பார்வையிட்டதுடன் இவ்வாறான பிரச்சினைகள் படிப் படியாகத் தீர்த்து வைக்கப் படும் என்றார் அமைச்சர்.

அமைச்சருடன் முன்னாள் அமைச்சர் அமரர் மகேஸ்வரனின் சகோதரர்களான தி.பரமேஸ்வரன், தி. ஞானகேஸ்வரன் ஆகியோரும் வருகை தந்திருந்தனர். (வ-250)

## 264 பேர் இரத்ததானம்

*சாதனை படைத்த ஹாட்லி*

யாழ்ப்பாணம், நவ.30

பருத்தித்துறைஹாட்லிக்கல்லூரியில் "ஹாட்லியின் மைந்தர்கள்" நினைவாக கடந்த 19, 20 ஆகிய திகதி களில் நடத்தப்பட்ட இரத்த தான முகாமில் மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாண வர்கள் உட்பட 264 பேர் இரத்ததானம் வழங்கி தேசிய ரீதியில் பாடசாலை மட்டத்தில் சாதனை படைத்துள்ளனர்.

தேசிய ரீதியிலான இந்தச் சாதனையை இதுவரை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி தக்க வைத்திருந்தது.

2010 ஆம் ஆண்டுநடைபெற்ற இரத்த தான முகாமில் 230 பேர் இரத்த தானம் செய்து சாதனையை நிலைநாட்டி இருந்தனர்.

இந்த நிலையில் ஹாட்லி புதிய சாதனை படைத்துள்ளது. கல்லூரி அதிபர் அ.தெய்வேந்திரராஜா தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. பருத்தித்துறை ஆதார மருத்துவமனை இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி மருத்துவர் ம.வாசுதேவன், மருத்துவர் ஜெனிபர் கார்த்திகா, தாதிய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், யாழ்.போதனா வைத்தியசாலை பிராந்திய இரத்த வங்கி பொது சுகாதார பரிசோதகர் த.றவினதாஸ் உட்பட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண் டனர் என்று யாழ்.போதனா வைத்திய சாலை இரத்த வங்கிப் பிரிவு தெரிவித்துள் ளது. (வ-4)

## கஞ்சா விற்றவருக்கு 50 ஆயிரம் அபராதம்



யாழ்ப்பாணம் . நவ.30

யாழ் . நகரில் 6 கஞ்சா மதுர மோதங்களை விற்பனை செய்து கொண்டிருந்தவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது யாழ். நீதிமன்றம்.

ஆறுகால்மடத்தைச் சேர்ந்த ஒருவருக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டது.

கஞ்சா மதுரமோதங்களைப் பிறருக்கு விற்பனை செய்து கொண்டிருந்த போது கடந்த 22 ஆம் திகதி பொலிஸார் அவரைக் கைது செய்தனர். அவரிடமிருந்து 6 கஞ்சா மதுர மோதங்களையும் பொலிஸார் மீட்டனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இவர் தொடர்பான வழக்கு புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது சந்தேக நபர் தன்மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அவருக்கு10 ஆயிரம்ரூபா அபராதம் விதித்தது நீதிமன்று. (த-4)

## திருவெம்பாவை விரத காலத்தில் ஆன்மிகப் பணிகள் முன்னெடுப்பு

*இந்து மகா சபையின் ஏற்பாட்டில்*

யாழ்ப்பாணம், நவ.30

இந்து மகா சபையால் திருவெம்பாவைக் காலத்தில் "தொண்டுகள் புரிவோம் அற நெறி வளர்ப்போம்" என்ற தொனிப் பொருளிலான ஆன்மிகப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

திருவெம்பாவை காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள ஆன்மிகப் பணிகள் தொடர்பான கலந்துரையாடல் கடந்த 21 ஆம் திகதி சித்தங்கேணி சிவசிதம்பரரேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்றது.

இதன்போது கலந்து கொண்ட இந்து சமய அமைப்புக்களைச் சார்ந்தவர்கள் இந்தத் தீர்மானத்தை முன்வைத்தனர். எதிர்வரும் டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதி தொடக்கம் தொடர்ந்து 3 தினங்களில் ஆன்மிகப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. குறிப்பாக அறநெறி மற்றும் சிவ மங்கையர்களின் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சி, அறநெறிப் பாடத்தை மறுசீரமைப்பதற்கான கருத்தரங்கு, அறநெறி ஆசிரியர்கள் கௌரவிப்பும் அறநெறி மாணவர்கள் பரிசில் வழங்கிக் கௌரவிப்பும், சிவதொண்டர் அமைப்பால் சம்புநாத ஈஸ்வரத்தில் நிர்மாணிக்கப்பட்ட சிவபெருமானின் 21 அடி உயரமான சிலை திறப்பு மற்றும் சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் இருந்து காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் ஆலயம் வரை பாத யாத்திரை போன்ற செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்து மகா சபை, சிவதொண்டர் அமைப்பு, சிவமங்கையர் அமைப்பு, கல்வி சுகாதார மேம்பாட்டுக் கழகம், ஆலயப் பரிபாலன சபைகள் என்பன இணைந்து இந்த ஆன்மிகப் பணிகளை முன்னெடுக்கவுள்ளன. (வ-14-86)

## தெல்லிப்பழை மருத்துவமனை வளாகத்தில் மேலும் கட்டடம்

*இரு வருட திட்டத்தில் அமைக்கப்படும்*

வலி.வடக்கு, நவ.30

தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனை வளாகத்தில் இருநூறு மில்லியன் ரூபா செலவில் மேலும் ஒரு கட்டடத் தொகுதி அரசால் இரண்டு வருட திட்டத்தில் அமைக்கப் படவுள்ளதாக கலாஸ் கோரேஜ் நிறுவனத்தின் பணிப்பாளர்களில் ஒருவரான நாதன் சிவகணநாதனால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2014 ஆம்ஆண்டு ஆரம்பிக்கப்படவுள்ள குறித்த வேலைத் திட்டம் இரண்டு ஆண்டுகளில்- 2016 ஆம் ஆண்டு- நிறை வடையவுள்ளது.



ஏற்கனவே கட்டப்படும் புற்றுநோய் மருத்துவமனை கட்டடத்தில் இருக் கும் வசதிகளுக்கு மேலதிகமாக நோயாளர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாகவும் மற்றும் சில சிகிச்சை வசதிகளை செய்வதற்கு வசதியாகவும் புதிய கட்டடம் அரசால் நிர்மாணிக் கப்படவுள்ளதாகவும்அவர் தெரிவித்தார். (வ-86)

# கடலுக்குள் வீசப்பட்டன 6,000 வெடிகுண்டுகள்

### தமிழகப் பொலிஸார் பரபரப்புத் தகவல்

சென்னை, நவ.30

தமிழகத்தின் இடிந்த கரைப் பகுதியில் பதுக்கி வைக்கப் பட்டிருந்த சுமார் 6 ஆயிரம் நாட்டு வெடிகுண்டுகள் கடலில் வீசப்பட்டுள்ளன என்று பரபரப்புத் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் கூடங்குளம் அணு உலைக்கு அண்மையில் அமைந்துள்ள இடிந்தகரைக் கிராமத்தில் நாட்டு வெடிகுண்டு ஒன்று வெடித்ததில் 6 பேர் உயிரிழந்தனர். அதையடுத்து அந்தப் பகுதியில் பொலிஸார் கண்காணிப்பை அதிகரித்துள்ளனர். அதையடுத்தே சுமார் 6 ஆயிரம் நாட்டு வெடிகுண்டுகள் கடலில் வீசப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது.

இதுகுறித்து மேலும் தெரிய வருவதாவது,

கூடங்குளம் அணு உலைக்கு எதிர்ப்பு தெரிவித்து இடிந்த கரையில் கடந்த 2 ஆண்டுக்கும் மேலாக மக்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அதற்கு அருகில் உள்ள கூத்தங்குழி கிராம மக்களும் இதற்கு ஆதரவு தெரிவித்து வந்தனர். இந்த நிலையில் தற்போது கூத்தங்குழியில் தாது மணல் அகழ்வில் ஆதரவாளர்கள், எதிர்ப்பாளர்கள் என இரு கோஷ்டிகள் உருவாகியுள்ளன. இருதரப்பினரும் எதிர்தரப்பினரை அச்சுறுத்தும் வகையில் நாட்டு வெடிகுண்டுகளைத் தயாரித்து வந்துள்ளனர். கூத்தங்குழி கிராமத்தில் இருந்து விரட்டப்பட்ட ஒரு கோஷ்டி இடிந்தகரை சுனாமிக் குடியிருப்பில் குடியேறி பெருமளவில் நாட்டு வெடிகுண்டுகளைத் தயாரித்துள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர் அங்கு ஏற்பட்ட வெடிவிபத்தை அடுத்து பொலிஸார் சோதனை நடத்தி ஏராளமான வெடிகுண்டுகள், அவற்றை தயாரிக்க பயன்படும் பொஸ்பரஸ், கந்தகம், அலுமினிய பவுடர், சிவப்பு பொஸ்பரஸ் ஆகியவற்றைக் கைப்பற்றினர். அதையடுத்து இடிந்த கரையிலும் பொலிஸார் சோதனை நடத்தக்கூடும் என்ற தகவல் பரவியது. உடனே அங்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்த நாட்டு வெடிகுண்டுகளை அங்குள்ளவர்கள் எடுத்துச் சென்று கடலில் வீசியுள்ளனர். இவ்வாறு 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வெடிகுண்டுகள் கடலில் வீசப்பட்டன என்று பொலிஸார் கூறுகின்றனர்.

இதுதொடர்பாக வெடிகுண்டு மற்றும் தடயவியல் நிபுணர்கள் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். அதில் மேலும் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகும் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ற)

# தி.மு.கவைக் கைகாட்டி தப்பிக்கொள்கிறார் 'ஜெ'

### கருணாநிதி விசனம்

சென்னை, நவ.30

தமிழக அரசுக்கு எப்போதெல்லாம் பிரச்சினைகள் வருகின்றதோ அப்போதெல்லாம் தி.மு.க. மீது முதல்வர் குற்றம் சாட்டுவது வாடிக்கையான ஒன்றாக மாறிவிட்டது என்று விசனம் தெரிவித்துள்ளார் தி.மு.க. தலைவர் கருணாநிதி.

ஏற்காடு இடைத்தேர்தல் பரப்புரைகளின்போது தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா "தமிழகத்தில் நிலவும் மின்வெட்டுக்கு தி.மு.க. மற்றும் மத்திய அரசின் கூட்டு சதியே காரணம்" என்று கூறியிருந்தார். அதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

"தமிழக அரசுக்குப் பிரச்சினை வரும்போதெல்லாம் தி.மு.க. மீது குற்றம் சாட்டுவதையே தமிழக முதலமைச்சர் வாடிக்கையாகக் கொண்டுள்ளார். தற்போது தமிழகத்தில் ஏற்பட்டுள்ள மின்வெட்டுக்கு தி.மு.க. ஒருபோதும் பொறுப்பேற்காது. தற்போதைய மின்வெட்டுக்கு தமிழக அரசின் அலட்சியமே காரணம்.


பேரறிவாளனை விடுதலை செய்ய, மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது மெரினா கடற்கரை அருகே இருக்கும் சிவாஜி சிலையை அகற்ற வேண்டும் என்று பொலிஸார் கூறுகின்றனர். சிவாஜி சிலைக்கு தற்போது எதிர்ப்பு தெரிவிக்கும் பொலிஸார் 7 ஆண்டுகளுக்கு முன்பு சிலை அமைக்கும்போது எங்கு சென்றனர்?" என்று கேள்வி எழுப்பியுள்ளார். (ற)

## ராஜஸ்தானில் பரப்புரைகள் முடிந்தன

பொக்ரன், நவ.30

ராஜஸ்தான் மாநில சட்டசபைத் தேர்தல் எதிர்வரும் 1ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் நேற்றுப் பிற்பகலுடன் அங்கு தேர்தல் பரப்புரைகள் நிறைவடைந்துள்ளன.

நேற்று அங்கு இறுதிக் கட்டப் பரப்புரைகள் முழுவீச்சில் நடைபெற்றன. காங்கிரஸ் மற்றும் பாரதிய ஜனதா கட்சிகளின் உயர்மட்ட தலைவர்கள் பரப்புரைகளில் ஈடுபட்டனர். பாரதிய ஜனதா கட்சியின் பிரதமர் வேட்பாளரான நரேந்திரமோடி சுமர்பூர், பொக்ரன், மற்றும் ஜோத்பூர் ஆகிய மூன்று இடங்களில் பரப்புரைகளை மேற்கொண்டார். (ற)



தேர்தல் பரப்புரைகளுக்காக மாகாராஷ்டிர மாநிலம் சென்றுள்ள பா.ஜ.கவின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி அங்குள்ள பிரசித்தி பெற்ற உஜ்ஜனி கோயிலுக்குச் சென்றார். அங்கு நடைபெற்ற விசேட பூசை வழிபாடுகளிலும் கலந்து கொண்டார்.

# திருமணம் செய்யாது இணைந்து வாழலாம்

### தப்பில்லை என்கிறது நீதிமன்றம்

புதுடில்லி, நவ.30

திருமணம் செய்யாமல் சேர்ந்து வாழ்வது குற்றம் அல்ல என்று இந்திய உயர் நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு வழங்கியுள்ளது.

திருமணம் செய்து கொள்ளாமல் சேர்ந்து வாழ்ந்து பிரிந்துவிட்ட ஒரு பெண், அந்த ஆணிடம் இருந்து ஜீவனாம்சம் கோரி உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கிலேயே நீதிமன்றம் மேற்குறிப்பிட்ட அதிரடித் தீர்ப்பை வழங்கியுள்ளது.

"திருமணம் செய்து கொள்வதோ, செய்துகொள்ளாமல் இருப்பதோ ஒருவரின் தனிப்பட்ட விருப்பம். திருமணம் செய்து கொள்ளாமல் சேர்ந்து வாழ்வது, இந்தியாவில் சமூகத்தாலோ, சட்டத்தாலோ அங்கீகரிக்கப்படவில்லை. அப்படி இருந்தும், திருமணம் செய்து கொள்ளாமல் சேர்ந்து வாழ்வது குற்றமோ, பாவமோ அல்ல. இந்த உறவு, திருமண உறவு போன்றது அல்ல. இத்தகைய உறவை பல நாடுகள் அங்கீகரிக்கத் தொடங்கி உள்ளன.

இந்த உறவில், ஏற்றத்தாழ்வுகள் இருப்பதை நாம் பார்க்காமல் இருக்க முடியாது. இந்த உறவு முறிவடைந்தால், பெண்களும், இந்த உறவின் மூலம் பிறக்கும் குழந்தைகளும் தான் பாதிக்கப்படுகிறார்கள். எனவே பெண்களையும், அவர்களது குழந்தைகளையும் பாதிப்பில் இருந்து பாதுகாக்க நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்ற வேண்டும். அல்லது சட்டத்தில் உரிய திருத்தம் செய்ய வேண்டும். திருமண உறவை அங்கீகரித்தது போல இந்த உறவையும் அங்கீகரிக்க வேண்டும். முறையற்ற தொடர்பு, பலதாரத் திருமணம் ஆகியவற்றை திருமணம் செய்து கொள்ளாமல் சேர்ந்து வாழ்தல் உறவில் சேர்க்க முடியாது" என்று தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது நீதிமன்றம். (ற)

## பிரணாப் சுற்றுப் பயணம்

புதுடில்லி, நவ.30

இந்தியக் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி அருணாசல பிரதேசம் மற்றும் நாகலாந்து மாநிலங்களில் சுற்றுபயணம் மேற்கொள்கிறார்.

இதுகுறித்து குடியரசு தலைவர் மாளிகை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

"குடியரசு தலைவர் பிரணாப் முகர்ஜி அருணசாசல பிரதேச தலைநகர் இடாநகரில் உள்ள சட்டசபை கூட்டத்தொடரில் கலந்து கொள்கின்றார். பின்னர் தோய்முக் நகரில் உள்ள ராஜிவ்காந்தி பல்கலைக் கழகத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவிலும் கலந்து கொள்கிறார். எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி நாகலாந்து மாநிலத்தின் 50ஆவது பொன்விழாவை முன்னிட்டு கோஹிமாவில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்" என்று கூறப்பட்டுள்ளது. (ற)

# இழிவாகப் பேசினால் கடும் நடவடிக்கை

### அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் ஆணையம் எச்சரிக்கை

புதுடில்லி, நவ.30

தேர்தல் பரப்புரைகளின்போது இழிவாகப் பேசினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்தியத் தேர்தல் ஆணையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மத்திய பிரதேசம், புதுடில்லி, சத்தீஸ்கர் உள்பட 5 மாநிலங்களில் சட்ட சபைத் தேர்தல் நடத்தப்படவுள்ளது. அவற்றுக்கான தேர்தல் பரப்புரைகள் அனல் பறக்கின்றன. தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் பிரதான இரு கட்சிகளான காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க. ஆகியவை ஒன்றை ஒன்று கடுமையாக விமர்சித்து வருகின்றன. இரு கட்சியினரும் வரம்பு மீறிப் பேசுகின்றனர் என்று தேர்தல் ஆணையத்துக்குத் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைத்த வண்ணம் இருந்தன. அதையடுத்தே தேர்தல் ஆணையம் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அனைத்து கட்சிகளுக்கும் தேர்தல் ஆணையம் அனுப்பியுள்ள கடிதத்தில்,

"தேர்தல் பரப்புரையின்போது ஏனைய கட்சியினரை இழிவாகப் பேசுவது தேர்தல் நடத்தை விதிகளை மீறும் செயல். நடத்தை விதிகளை மீறும் வகையில், தரக்குறைவான விமர்சனங்களை முன் வைக்க வேண்டாம். வரையறுக்கப்பட்ட பேச்சு சுதந்திரத்திற்கு உட்பட்டு பரப்புரைகளை மேற்கொள்ள வேண்டும். அரசியல் கட்சித் தலைவர்கள் பேச்சில் கண்ணியத்தையும், ஒழுக்கத்தையும் கடைப்பிடிக்க வேண்டும்." என்று கூறப்பட்டுள்ளது.

தேர்தல் பரப்புரைகளின்போது ஒருவரை ஒருவர் இழிவாகவும், தரம் தாழ்ந்த வார்த்தையாலும் பேசுவது வாடிக்கையாக உள்ளது. அதற்கு இந்தியத் தேர்தல் ஆணையம் தற்போது கடிவாளம் போட்டுள்ளது. (ற)

# தவறான சிகிச்சையால் பாதிக்கப்பட்ட குழந்தை; கருணைக் கொலை செய்யுமாறு பெற்றோர் மனு

நாகர்கோவில், நவ.30

தமது குழந்தையை கருணைக் கொலை செய்வதற்கு மாவட்ட ஆணையாளரின் அனுமதியைக் கோரிய பெற்றோரின் மனுவை விசாரித்த மதுரை உயர் நீதிமன்ற கிளை, அந்தக் குழந்தையை அரசு மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை அளிக்க உத்தரவிட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த டென்னீஸ் குமார்-மேரிசுஜா தம்பதிக்கு பிறந்த ஒரு வயது ஆண் குழந்தையான டேனி ஸ்டெனோ, மூளை வளர்ச்சி குன்றிய நிலையிலும் கண் பார்வையற்ற நிலையில் இருக்கிறான்.

இந்தநிலையில் குழந்தையின் தந்தை மாவட்ட ஆணையரிடம் மனு ஒன்றைக் கையளித்துள்ளார்.

"எனது மனைவிக்கு பிரசவம் நடைபெற்ற தனியார் மருத்துவமனை மருத்துவர்களின் தவறான சிகிச்சையால்தான் குழந்தைக்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட மருத்துவமனை மருத்துவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். குழந்தையை கருணைக் கொலை செய்ய அனுமதிக்க வேண்டும்" என்றும் அந்த மனுவில் கோரியிருந்தார். அதையடுத்து மாவட்ட ஆணையாளரின் உத்தரவின் படி, மருத்துவ அதிகாரிகள் இது குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிமன்றம், "குழந்தையை குமரி மாவட்ட அரச மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளிக்க வேண்டும், அதுபற்றி நீதிமன்றத்தில் அறிக்கை அளிக்க வேண்டும்" என்று உத்தரவிட்டுள்ளது. அதையடுத்து குழந்தை அரசு மருத்துவமனையில் குழந்தைகள் நலப் பிரிவில் சேர்க்கப்பட்டு உள்ளது. (ற)

# வெடித்துச் சிதறியது ஆயுதக் கிடங்கு

## 40 பேர் சாவு; லிபியாவில் பயங்கரம்

திரிபோலி, நவ.30
லிபியாவின் தெற்குப் பகுதியில் உள்ள அரச ஆயுதக் களஞ்சியம் ஒன்றில் ஏற்பட்ட வெடி விபத்தால் அந்த ஆயுதக் களஞ்சியம் வெடித்துச் சிதறியது. அதில் 40 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

லிபியாவில் கடாபியின் ஆட்சிக்குப் பின்னர் குறித்த ஆயுதக் களஞ்சியம் அடிக்கடி தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்காகி வருகின்றது. ஆயுதக் களஞ்சியத்தைத் தாக்கும் தீவிரவாதிகள் அங்கிருக்கும் ஆயுதங்களைக் களவாடிச் செல்வதும் வழமையான செயற்பாடாக மாறியுள்ளது. அந்த ஆயுதக் களஞ்சியத்தைப் பாதுகாப்பதற்கு லிபிய இராணுவத்தினர் படாதபாடு படுகின்றனர்.

இந்தநிலையில் நேற்றுமுன்தினமும் தாக்குதலுக்கு இலக்காகியது அந்த ஆயுதக் களஞ்சியம். அப்போது ஏற்பட்ட வெடி விபத்திலேயே ஆயுதக் களஞ்சியம் தீப்பற்றி வெடித்துச் சிதறத் தொடங்கியது.

அதில் 40 பேர் உடல் கருகி உயிரிழந்துள்ளனர். பலர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். காயமடைந்தவர்களில் பலரின் நிலை மோசமாக உள்ளது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விபத்தை அடுத்து அந்தப் பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன என்று லிபிய இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலில் ஈடுபட்டவர்கள் அன்சார் அல் ஷரியா தீவிரவாதிகள் என்றும் இராணுவத் தரப்பு கூறுகின்றது. (ற)

# ஈரானில் கடும் நிலநடுக்கம் 7 பேர் சாவு; 30 பேர் காயம்

தெஹ்ரான். நவ.30
ஈரானில் நேற்றிரவு ஏற்பட்ட கடும் நிலநடுக்கத்தால் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.



30க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

ரிச்டர் அளவுகோலில் 5.6 அலகுகளாகப் பதிவான நிலநடுக்கத்தின் மையம் ஈரானின் புஸ்ஷர் என்ற இடத்திலிருந்து 43 கிலோ மீற்றர் தூரத்தில் காணப்பட்டது என்று கூறப்படுகின்றது.

குறித்த பகுதியிலேயே ஈரான் தனது அணு சக்தித் திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது. நிலநடுக்கம்ஏற்பட்டமையப் புள்ளியை சுற்றி 60 கிலோ மீற்றர் தொலைவில் ஈரானின் மிகப் பெரும் அணு உலை அமைந்துள்ளது என்றும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் நிலநடுக்கத்தால் அணு உலைக்குப் பாதிப்புகள் ஏற்பட்டனவா என்பது குறித்து தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. (ற)


## சந்திரனில் துளசிச் செடி: திட்டமிடுகிறது நாஸா

வொஷிங்டன், நவ.30
சந்திரனில் மனிதன் கால் தடம் பதித்ததில் இருந்து அங்கு மனிதன் வாழ முடியுமா என்ற சோதனை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

அந்த வகையில் எதிர்வரும் 2015ஆம் ஆண்டளவில் நிலாவில் நூக்கல் மற்றும் துளசிச் செடிகளை வளர்த்து, மனிதன் நிலாவில் வாழ முடியுமா?, தொடர்ந்து தங்கியிருக்க முடியுமா? என்பது குறித்து சோதனை நடத்த நாசா விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர்.

நாசா விஞ்ஞானிகள் இரண்டு ஆண்டுகளில் நிலாவுக்குச் சென்று அங்கு தரைப் பகுதியில் 5 முதல் 10 நாள்களுக்குள் வேகமாக வளரும் செடிகளான துளசி, நூக்கல் விதைகளை மண்ணில் புதைத்து, அதற்கு தினமும் தேவையான அளவு தண்ணீர் கிடைக்கும் வகையில் ஏற்பாடு செய்து சோதனை மேற்கொள்ள உள்ளனர். இந்த விதைகளை சுற்றி கமராக்கள், உணர்வறியும் கருவிகள், செடியின் தன்மையை உடனுக்குடன் அளிக்கும் கருவிகள் போன்றவை வைக்கப்பட்டு பூமியில் இருந்து அவற்றைக் கண்காணிக்க் முடிவு செய்யப்பட்டுள்ளது.

செடிகள் வளரும் தன்மையை வைத்து மனிதன் நிலாவில் வாழ முடியுமா என்பது குறித்தும் அறிந்து கொள்ள முடியும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். (ற)



அமெரிக்காவில் வருடாந்தம் கொண்டாடப்படும் 'மேசி நன்றி தின' அணிவகுப்பு நேற்றுமுன்தினம் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. அதில் பெருந்திரளான மக்கள் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். பெற்றோர் குழந்தைகளைத் தோளில் சுமந்து சென்று தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். வழக்கம்போல் பலவித உருவங்கள் கொண்ட 16 வகையான பெரிய பெரிய பலூன்களும் இந்த ஊர் வலத்தின்போது பறக்க விடப்பட்டன. (ற)

# சிரிய இரசாயன ஆயுதங்களை கடலில் அழிக்க ஆலோசனை

நியூயோர்க், நவ.30
சிரியாவின் இரசாயன ஆயுதங்களை அமெரிக்கக் கப்பலில் எடுத்துச் சென்று மத்தியத் தரைக்கடல் பகுதியில் அழிக்க வாய்ப்பளிப்பதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சுற்றுச்சூழல் மற்றும் பாதுகாப்புப் பிரச்னைகளைக் கருத்திற் கொண்டு இந்த அணுகுமுறை ஆலோசிக்கப்படுகின்றது என்றும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

சிரிய இரசாயன ஆயுதங்கள் கணக்கெடுப்பு முடிவடைந்துள்ள நிலையில் அதனை எங்கு அழிப்பது என்பது குறித்து சிக்கல் நிலை தோன்றியுள்ளது. ஐரோப்பிய யூனியன் நாடுகள் அவற்றைத் தமது நாடுகளில் வைத்து அழிப்பதற்கு பின்னடித்து வருகின்றன. இந்தநிலையிலேயே அமெரிக்கா இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் இந்த முடிவு குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள நெதர்லாந்து, "எந்த நாடும், தனது சொந்த மண்ணில் இரசாயன ஆயுதங்களை அழிப்பதை விரும்பாது. எனவே கடலில் அழிக்க அமெரிக்கா வாய்ப்புக் கொடுத்துள்ளமை வரவேற்கத்தக்க விடயம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, சிரியா ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்புக் குழுவின் செய்தித் தொடர்பாளர் ஜொனாதன் லாலி கூறுகையில்,

"இரசாயன ஆயுதங்களை சிரியாவுக்கு வெளியே அழிப்பது தொடர்பாக எந்த முடிவும் எடுக்கவில்லை. வேறு வழியில் எவ்வாறு அழிப்பது என்பது தொடர்பாக தோழமை நாடுகளுடனும், வேறு சில நாடுகளுடனும் பேச்சு நடத்தி வருகிறோம். இரசாயன ஆயுதங்களை முற்றிலுமாக அழிக்க முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது" என்று தெரிவித்துள்ளார். (ற)

# 'நான் துறவி இல்லை'

## ஆங் சாங் சூகி கூறுகின்றார்

சிட்னி, நவ.30
"நான் துறவி அல்ல" என்று தெரிவித்துள்ளார் மியான்மார் எதிர்கட்சி தலைவர் ஆங் சான் சூகி.

மியன்மாரில் இராணுவ ஆட்சி நடைபெற்றபோது ஆங் சான் சூசி பல ஆண்டுகள் வீட்டுச் சிறையில் அடைபட்டிருந்தார். தற்போது விடுவிக்கப்பட்டிருக்கும் அவர் ஜனநாயகத்திற்காக பாடுபட்டு வருகிறார்.

ஆஸ்திரேலியாவுக்கு முதன் முறையாக பயணம் மேற்கொண்டுள்ள, சூகி, சிட்னி நகரில் நடந்த நிகழ்ச்சியில் ஒன்றில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"நான் ஓர் அரசியல் தலைவராகத்தான் சிந்திக்கிறேன்; என்னை நானே, ஓர் அரசியல் தலைவராகக் காண்கிறேன்; நான் ஒரு துறவியோ, சின்னமோ அல்ல. நேர்மையான அரசியல்வாதியாக இருக்க விரும்புகிறேன்" என்று தெரிவித்துள்ளார் அவர். (ற)

## எச்.ஐ.வியை ஒழிக்க கனடா நிதி ஒதுக்கீடு

ரொறண்ரோ, நவ.30
எச்.ஐ.வி. நோயை குணப்படுத்துவதற்காக கனடிய அரசு 10.7 மில்லியன் டொலரை ஒதுக்கீடு செய்துள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள கனடிய சுகாதாரத் துறை அமைச்சர் றொனா அம்ப்றோஸ், "எச்.ஐ.வியை குணப்படுத்துவதற்காக அரசு 10.7 மில்லியன் டொலரை ஒதுக்கீடு செய்துள்ளது. எச்.ஐ.வியை முற்றிலும் ஒழிப்பதற்கான நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று. 5 ஆண்டுத் திட்டங்களுக்கு இந்த தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆராய்ச்சி நிலையமானது கிட்டத்தட்ட 8.7 மில்லியன் டொலர் நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்ளும்" என்று தெரிவித்துள்ளார்.

கனடாவில் எச்.ஐ.வி. நோயால் 71,000 பேர் வரையில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். (ற)

# தொடர்கிறது ஆர்ப்பாட்டம்

## தாய்லாந்தில் அரச சேவைகள் முடக்கம்

பாங்ஹொக், நவ.30
தாய்லாந்தில் அந்தநாட்டுப் பிரதமருக்கு எதிராக நடைபெற்று வரும் ஆர்ப்பாட்டங்கள் உக்கிரமடைந்துள்ளன. பிரதமர் யிங்லக் ஷினவத்ரா பதவிவிலக வேண்டும் என்று போராட்டம் நடத்தி வரும் மக்கள் அரச அலுவலகங்கள், பொலிஸ்தலைமை அலுவலகம் என்பவற்றை முற்றுகையிட்டுள்ளனர்.

பொலிஸ்தலைமையகத்தைமுற்றுகையிட்டுள்ள ஆர்ப்பாட்டக்காரர்கள் தலைமையகத்துக்கான மின்சாரத்தைத் துண்டித்துள்ளனர்.

அதேவேளை, பிரதமருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியடைந்துள்ளது. நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர் "எதிர்க்கட்சியினர் போராட்டங்களை கைவிட வேண்டும்; பிரச்சினைக்கு தீர்வு காண அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்" என்று கோரிக்கை விடுத்துள்ளார். (ற)

# ஜேர்மன் அரண்மனையில் தீ விபத்து

பெர்லின், நவ.30
ஜேர்மன் நாட்டில் 1000 ஆண்டுகள் பழைமைவாய்ந்த றெனேசான்ஸ் அரண்மனையில் தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

றெனேசான்ஸ் அரண்மனை பல்லாயிரம் யூரோ செலவில் கட்டப்பட்ட மிகப்பழைமை வாய்ந்த அரண்மனையாகும். இந்த அரண்மனையானது சரியான முறையில் பராமரிக்கப்படாததால் 1956ஆம் ஆண்டு சோவியத் இராணுவத்தினரால் பாடசாலையாக மாற்றப்பட்டது.



அதன்பின்னர் 1971 ஆம் ஆண்டு அரண்மனையில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. சீரமைப்பின் பின்னர் அரண்மனை அருங்காட்சியகவும், நூலகமாகவும் செயற்பட்டு வருகிறது.

அங்கு நேற்றுமுன்தினம் திடீரென்று தீவிபத்து ஏற்பட்டுள்ளது. 1000 பேர் கொண்ட தீயணைப்பு வீரர்களின் நீண்ட நேர போராட்டத்திற்கு பின் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. தீயணைப்பு வீரர்கள் 11 பேர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று கூறப்படுகின்றது. தீவிபத்திற்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ற)

## கே.ஏ.சுப்பிரமணியத்தின் 24 ஆவது நினைவு தினம்

தோழர் கே.ஏ.சுப்பிரமணியத்தின் 24 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு கருத்துரைகளும், கலந்துரையாடலும் நடைபெறவுள்ளன. இல.405, யாழ்.ஸ்ரான்லி வீதி, பு.ஜ.மா.லெ. கட்சி பணிமனையில் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும். தோழர் கா.செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் 'சமகாலச் சூழலில் பொதுவுடைமை இயக்கத்தின் தேவையும் அவசியமும்' என்னும் தலைப்பில் தோழர் அ.சீவரத்தினமும், 'வெகுஜன இயங்கு தளங்களில் வேலைகளை முன்னெடுத்தல்' என்னும் தலைப்பில் தோழர் த.பிரகாஷ் ஆகியோர் உரையாற்றுவர். (ந)

## கலைவிழா நாளை

யாழ்ப்பாணம், நவ.30

பொற்பதி அறிவாலயம் நடத்தும் சரஸ்வதி முன்பள்ளி, பொற்பதி இந்து அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் கலைவிழா கொக்குவில் பொற்பதி அறிவாலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சரஸ்வதி முன்பள்ளித் தலைவி திருமதி கோமதி ரவிதாஸ் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை உலக சுகாதார ஸ்தாபன ஆலோசகர் மருத்துவர் என்.சிவராஜா, சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், யாழ்.வலய ஆரம்பக் கல்வி உதவிப் பணிப்பாளர் க.விமலநாதன், நல்லூர் பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் பொ.கமலேஸ்வரசர்மா ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

## இன்றும் நாளையும் கருத்தரங்கு

*வடமாகாண விஞ்ஞான சங்க ஏற்பாட்டில்*

யாழ்ப்பாணம், நவ.30

அடுத்த மாதம் இடம்பெறவிருக்கும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு பாடசாலைகளிலிருந்து தோற்றும் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான கலந்துரையாடல்கள் இன்றும், நாளையும் இடம்பெறவுள்ளன.

வடமாகாண விஞ்ஞான சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்தக் கலந்துரையாடல்கள் யாழ். வீரசிங்கம் மண்டபத்தின் நான்காவது மாடியில் அமைந்துள்ள வடமாகாண விஞ்ஞான சங்கத்தின் கேட்போர் கூடத்தில் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 3.45 மணி வரை இடம்பெறவுள்ளன.

இந்தக் கலந்துரையாடல்களின் போது விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான கருத்துரைகள் வழங்கப்படவுள்ளன.

மேலும் மாணவர்களின் பாடத்திட்டத்துடன் தொடர்புடைய அச்சிடப்பட்ட தகவல்கள் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுமென வடமாகாண விஞ்ஞான சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (க)

## 'கோப்சிற்றி'போட்டியில் கொடிகாமம் முதலிடம்

91 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் கூட்டுறவு நகர் (கோப்சிற்றி) விற்பனை நிலையங்கள் ரீதியாக நடத்தப்பட்ட போட்டிகளில் தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல கூட்டுறவு நகர் விற்பனை நிலையங்களின் செயற்பாடுகள், அவற்றின் வளர்ச்சி, வியாபார நடவடிக்கைகள் தொடர்பாக கூட்டுறவுத் திணைக்களத்தால் ஆராயப்பட்டன. அதனடிப்படையிலேயே முடிவுகள் வெளியிடப்பட்டதாக கூட்டுறவு உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் தெரிவித்தார்.

இந்தப் போட்டிகளில் உடுப்பிட்டிப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இரண்டாம் இடத்தையும், வலி.கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

அத்துடன் சிறிய கூட்டுறவு நகர் விற்பனை நிலையங்கள் மீது நடத்தப்பட்ட போட்டிகளில் பண்டத்தரிப்பு பலநோக்குக்கூட்டுறவுச்சங்கம், வலி. கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகியன முன்னிலையில் உள்ளன. சாதாரண விற்பனை நிலையங் களில் பண்டத்தரிப்பு, நல்லூர், தென்மராட்சி கிழக்கு கூட்டுறவுச் சங்கங்கள் முதல் மூன்று இடங் களில் உள்ளன.

மாவட்ட மட்டத்தில் முன்னிலை யில் கூட்டுறவு நகர் விற்பனை நிலையங்களுக்கு பரிசுகளும் வெற்றிக் கேடயங்களும் வழங்கப்படும். அதே நேரம் மேற்குறித்த சங்கங்களின் கிளை முகாமையாளர்களான க.சந்திரசேகரம், ம.வசந்தகுமார், இ.சசிகரன், மு.சிறிதரன், சி.சிவலிங்கம், க.சுகுந்தன், பொ.கமலேஸ்வரன், அ.யோகரட்ணம் இ.இராஜேந்திரன் ஆகியோருக்கும் பரிசுகள் வழங்கப்படவுள்ளன. (ந-17)

## புலமைப் பரிசில் மாணவர்களுக்கு சி.க.வ.சமாசம் கௌரவிப்பு

வலி. வடக்கு, நவ. 30

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் அமரர் ஞானப் பிரகாசத்தின் 23 ஆவது நினைவு தினமும் 2013 ஆம் ஆண்டு தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி யடைந்த அங்கத்தவர்களின் பிள் ளைகளைக் கௌரவிக்கும் நிகழ்வும் யாழ்ப்பாணம் கூட்டுறவாளர் வீர சிங்கம் மண்டபத்தில் இன்று சனிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு செ.இலகு நாதன் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானமும், சிறப்பு விருந்தினராக வட மாகாண சபையின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் இம்மானுவேல் ஆனல்ட்டும் கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட கூட்டுறவு ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன், மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் கே.சுசீந்திரன், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் தி.சுந்தரலிங்கம் முன்னாள் தலைவர் பெ.கனகசபாபதி, இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி கிருஷ்ணபிள்ளை கமலராணி, கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் பா.ஸ்ரீக்குமார் ஆகியோரும் கலந்து கொள்வர். (வ-86)




SMALL SOLAR ELECTRIC SYSTEM

Complete Set - 148,500/=
245w Solar Panal - 2
1500w Inverter - 1
86 A Battery - 2
Charger Controler - 1

7 Hours working
Tube light (40w)-5
Fan (75 w) - 2

KINGS ELECTRONICS
No.11-A, Stanley Road, Jaffna. (40106)
T.P: 021 222 3857 / 072 7949 242

84 ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கும்
வைத்திய கலாநிதி T.கெங்காதரன் அவர்களுக்கு
பிறந்தநாள் வாழ்த்துக்கள்
30 11 2013



நம் மண்ணில் பல இடர்களுக்கு மத்தியிலும் தொடர்ந்து 60 ஆண்டுகள் கடந்தும் சிறந்த வைத்திய சேவையை ஆற்றிவரும் எமது மதிப்பிற்கும் அன்பிற்கும் உரிய வைத்திய கலாநிதி
T.கெங்காதரன்
அவர்கள் மேலும் பல்லாண்டுகள் தேக ஆரோக்கியத்துடன் மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனிடம் வேண்டி நிற்பதுடன், இன்றைய தினத்தில் பிறந்தநாள் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:
வண்.மேற்கு வைத்தியசாலை, பணியாளர் மற்றும் அனைத்து ஊழியர்களும்.
(40629)(2.6.3)

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

ஜேர்மன் செப்பேட் 40 நாள் நிரம்பிய நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 947 5996 (40605) (12.3.6)

**வேலையாள்கள் தேவை**

JUKI தையல் நிலையத்துக்கு பெண் வேலையாள்கள் தேவை.
தொடர்பு: 077 618 0450 (சி/13668) (10.6.3)

IELTS A1 B1 B2 KU Education
ஸ்போக்கன் இங்கிலீஷ் வகுப்பும் Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
K.U Education,No 75,Temple Road,Jaffna. IELTS Centre

**காணி விற்பனைக்கு**

நெல்லியடி கிழக்கு, வைரவர் கோயிலடி, செட்டி குடியிருப்பு என்ற விலாசத்தில் உள்ள 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 174 0656, 077 334 8638 (40543)(4.6.3)

**மணமகன் தேவை**

யாழ்.இந்து குடும்பம், 1980, பூராடம், பாவம் இல்லை. A/L படித்த அழகிய மணமகளுக்கு லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி, கனடா போன்ற நாடுகளில் தொழில் புரிகின்ற மணமகன் தேவை.
தொடர்பு: 077 795 1010 (40630) (12.3.6)

**கடை வாடகைக்கு**

அல்லைப்பிட்டி, 2ஆம் வட்டாரம், பிரதான வீதியில் புதிதாகக் கட்டப்பட்ட 4 கடைகள் வாடகைக்கு உள்ளன. (சிகை அலங்கரிப்பு கடை (Saloon) நடத்துவதற்குரிய சகல வசதிகளும் உண்டு)
தொடர்பு: 077 974 9293/ 076 603 9334/021 491 9363 (40636) (12.3.6)

**விற்பனைக்கு**

ஒரு வயது நிரம்பிய அல்சேசன் ஆண், பெண் நாயும், பொமேரியன் ஆண், பெண் நாயும், டாசோன் ஆண், பெண் நாயும், 45 நாள் பூர்த்தியான பொமேரியன் ஆண், பெண் குட்டிகளும், மணித்தாரா, வான்கோழி, வண்டம், வெள்ளடியன் என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு: லி.மயூரன், (40640) (12.3.6)
புன்னாலைக்கட்டுவன் தெற்கு, ஆயக்கடவை பிள்ளையார் கோயில் முன்பாக, பூதராயர் கோயிலடி (டயலொக் ரவர் அருகில்)

**வாடகை**

Attached bathroom உடன் கூடிய அறைகள் வாடகைக்கு உண்டு. (ஒரு நாள் 500/=)
Hotel Villa City, 422 Galle Rd, Colo 6
இராமகிருஷ்ண வீதிக்கு அருகில்
0722 552 222

**விற்பனைக்கு**

கொங்கிறீற் கல் தயாரிக்கும் இயந்திரம் பருத்தித்துறைப் பகுதியில் உடன் விற்பனைக்குண்டு. விவரங்கள் நேரில் தொடர்பு கொள்ளவும்.
T.P. 077 436 6704 (சி/13666) (10.6.3)

**விற்பனைக்கு**

INDESIT (ITALY) WASHING MACHINE (புதியது) FRONT LOADING மற்றும் நீலநிற JIALING 125 MOTOR Cycle என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு: சயிரா (40639) (10.6.3)
101, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel: 077 196 1238

**காணி விற்பனைக்கு**

பொற்பதி றோட், அரசடிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் 3¼ பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 711 1400 (40703) (10.6.3)

**காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு**

பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகில் ஒரு பரப்பு 15.50 குழி விஸ்தீரணம் கொண்ட 5 அறைகள் உள்ள வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 711 1400 (40702) (4.6.3)

VACANCY
BCHS
WALK - IN - INTERVIEW

Our Institute is looking for self-motivated, ambitious and dynamics individuals to join our team.

1. English Lecturer (Female) - Full Time
2. Assistant English Lecturer (Female) - Full Time

Date : Open
Time: 10.00am between 4.00pm

For Further Details please contact,
British College of Higher Studies
No.15, Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
Tel : 021-2224550 or 0777730074 or 0714299935

தெய்வீகப் பணி
சிறப்புற வாழ்த்துகின்றோம்
இளவாலை சித்திரமேழி ஞானவைரவர் ஆலய குரு
பிரம்மஸ்ரீ இராம பாலச்சந்திர குருக்கள்



அவர்களுக்கு
அகில இன நல்லுறவு ஒன்றியத்தால் வழங்கப்பெற்ற தேசஅபிமானி விருதினைப் பாராட்டி சிவாச்சாரியாரை வாழ்த்துகின்றோம்.

அன்பு நிறை பூசை ஆராதனை
அர்ப்பணிப்புமிகு சிவாச்சாரியார்
உள்ளும் புறமும் தெய்வீகம்
ஊரெல்லாம் மதிக்கும் உத்தமர்
தேச அபிமானி விருதுபெற்ற
தெய்வீகம் கண்டு வாழ்த்துகின்றோம்

நிர்வாக சபை,
சித்திரமேழி ஞானவைரவர் கோவில்,
இளவாலை.
(40701)(10.6.3)

# 'புலி' என்ற சந்தேகத்தில் இளம் குடும்பஸ்தர் கைது

மன்னார், நவ.30

மன்னாரில் இளம் குடும்பஸ்தர் ஒருவரை முன்னாள் புலி உறுப்பினராக இருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக அவரது மனைவி மன்னார் பிரஜைகள் குழுவில் முறைப்பாடு செய்துள்ளார் என்று மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இம்மானுவேல் செபமாலை தெரிவித்தார்.

மன்னார் முருங்கன் வாழ்க்கைப்பெற்றான் கண்டல் கிராமத்தைச் சேர்ந்த இரண்டு குழந்தைகளின் தந்தையான திருச்செல்வம் கிறிஸ்துராசா (வயது-31) என்பவரே விசாரணைக்கென முருங்கன் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு பின்னர் வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 24 ஆம் திகதி முருங்கன் பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு இவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இவர் மறுநாள் முருங்கன் பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற போது கைது செய்யப்பட்டு வவுனியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும், இந்தக் கைதை உறுதிப்படுத்தும் சிட்டை ஒன்று வழங்கப்பட்டுள்ளதாகவும் அவரது மனைவி தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளரென மன் னார் பிரஜைகள் குழுவின் தலை வர் மேலும் தெரிவித்தார். (க-12)

# போக்குவரத்து பணியாளர்கள் பொறுப்புடன் நடக்க வேண்டும்

*இல்லையேல் சட்ட நடவடிக்கை என்கிறார் அமைச்சர்*

யாழ்ப்பாணம், நவ.30

தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் நடத்துநர்கள் நாகரிகமற்ற முறையில் பயணிகளுடன் நடந்து கொள்வதாக தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன. இவ்வாறான செயற்பாடுகள் உடன் நிறுத்தப்பட வேண்டும் என்றும் இல்லாவிட்டால் அடுத்த ஆண்டு ஆரம்பத்திலிருந்து சட்ட நடவடிக்கைகளுக்கு உட்பட வேண்டி வரும் என்று வட மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வயது வேறுபாடின்றி பயணிகளிடம் நடத்துநர்கள் மிகவும் தரக்குறைவான வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்துகின்றனர் என்றும் பெண் பயணிகளைக் கண்டபடி தொட்டு பஸ்ஸினுள் தள்ளிவிடுவதாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

மேலும் பஸ் தரிப்பிடம் இல்லாத இடங்களில் பஸ்ஸை நிறுத்தி பயணிகளை ஆடு மாடுகளைப் போல அதிகளவில் ஏற்றுவது, பணத்தை பெற்றுக்கொண்டு ரிக்கெற் வழங்காமல் விடுவது மீதிப் பணத்தை வழங்காமல் விடுவது போன்ற செயற்பாடுகள் தொடர்பில் தினமும் முறைப் பாடுகள் கிடைக்கப்பெறுகின் றன.

இந்த நடவடிக்கைகளை நிறுத்தா விட்டால் ஜனவரி முதல் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (ஐ-5-12)

## ஒளி விழா

வவுனியா முருகனூர் சாரதா வித்தியாலயத்தின் ஒளி விழா நிகழ்வு எதிர்வரும் 05 ஆம் திகதி இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபர் பி.நேசராசா தலைமையில் இந்த நிகழ்வு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறுமென பாடசாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

விருந்தினர் அழைப்புடன் ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் வவுனியா தெற்கு கல்வி வலய அதிகாரிகள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இதேவேளை இந்தப் பாடசாலையில் கல்வி பயின்று தரம் -5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவிக்கு கௌரவம் அளிக்கும் நிகழ்வும் இங்கு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (க-421)

# விளக்கேற்றிய விவசாயி படையினரின் விசாரணையில்

வவுனியா, நவ.30

வவுனியா நெளுக்குளம் பகுதியில் வயலுக்குள் விளக்கு வைத்த விவசாயியிடம் படையினர் விசாரணை மேற்கொண் டனர்.

மாவீரர் தினத்தன்று நெளுக்குளம் வயலொன்றுக்குள் விவசாயி ஒருவர் குப்பி விளக்குகளை ஏற்றியிருந்தார். இதேவேளை நெளுக்குளம் குளக்கட்டுப் பகுதியில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக சுடர் ஏற்றப்பட்டுள்ளதாக படையினருக்குத் தகவல் கிடைத்ததால் அந்தப் பகுதிக்கு வந்த படையினர் வயல் பிரதேசத்தல் விளக்குகள் எரிந்து கொண்டிருப்பதைக் கண்டனர்.

இது தொடர்பாக படையினர் குறிப்பிட்ட வயல் உரிமையாளரிடம் விசாரணைகளை மேற்கொண்டனர். அன்றைய தினம் வயலில் நெல் விதைப்பை மேற்கொண்டிருந்ததால் நெல் மணிகளை குருவிகள், பறவைகளிடம் இருந்து பாதுகாப்பதற்கு இந்த விளக்குகளை ஏற்றியதாக அந்த விவசாயி கூறினார். இதனையடுத்து படையினர் அந்த இடத்தை விட்டு விலகினர்.

இந்தச் சம்பவத்தால் வயலைச் சுற்றியுள்ள பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (க-402)

# பாடசாலையின் கடித விவகாரம் கற்பூரச் சத்தியத்தில் முடிந்தது

*பத்துக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பாதிப்பு*

வவுனியா, நவ.30

வவுனியாவிலுள்ள பாடசாலை ஒன்றில் கடிதம் ஒன்று தொடர்பான உண்மைகளை வரவழைப்பதற்கு மாணவர்களின் கையில் கற்பூரம் ஏற்றப்பட்டதால் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின் றது.

வவுனியா சுந்தரபுரம் பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. மாணவரொருவரின் மேசையில் தகாத வார்த்தைகள் அடங்கிய கடிதமொன்று வைக்கப்பட்டமை தொடர்பாக வகுப்பாசிரியர் விசாரணைகளை மேற்கொண்டார். ஆனால் எவரும் உண்மையை ஒப்புக்கொள்ளவில்லை. இந்த நிலையில் அந்த ஆசிரியர் சந்தேகத்துக்கிடமான மாணவர்கள் சிலரின் கையில் கற்பூரத்தை ஏற்றி வைத்து சத்தியம் செய்யுமாறு கேட்டுள்ளார். இதனால் பத்துக்கும் மேற்பட்ட மாணவர்களின் கைகளில் கொப்புளங்கள் ஏற்பட்டுள்ளன. இதற்கு அங்குள்ள பெற்றோர் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக உண்மைத் தன்மையை அறியும் பொருட்டு பாடசாலை அதிபருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது. நடந்த சம்பவத்தை ஏற்றுக் கொண் டார்.

மேலும் நேற்று பாடசாலையில் தம்மால் நடத்தப்பட்ட கலந்துரையாடல் மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப் பட்டுள்ளதாக வும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு பாடசாலை நிர்வாகம் உரிய மருந்துகளை இட்டதாகவும் தெரிவித் தார்.

மேலும் வவுனியா வடக்கு கல்விப் பணிப்பாளரிடம் இது தொடர்பாக கேட்டபோது: தமக்கு இந்தச் சம்பவம் தொடர் பாகத் தெரிவிக்கப்படவில்லையெனவும் தாம் உடன டியாக உரிய விசார ணைகளை மேற் கொண்டு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித் தார். (க-402)

# சட்ட விரோதமாகச் சாராயம் வைத்திருந்தோருக்கு அபராதம்

கிளிநொச்சி, நவ.30

கிளிநொச்சி வட்டக்கச்சி பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி சாராயம் மற்றும் கசிப்பு வைத்திருந்த இருவருக்கு 65 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வட்டக்கச்சி பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சுமார் 10 ஆயிரம் மில்லிலீற்றர் அரச சாராயத்தை அனுமதிப் பத்திரமின்றி தனது உடமையில் வைத்திருந்த ஒருவரை கிளிநொச்சி பொலிஸார் கைது செய்தனர். குறித்த சந்தேக நபர் கடந்த 27 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் எம்.ஐ.வகாப்தீன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார். இவருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

இதேபோன்று கிளிநொச்சி பகுதியில் 250 மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண் ணொருவர் கைது செய்யப் பட்டு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட் டார்.

குறித்த பெண்ணுக்கு 15 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)


## மரண அறிவித்தல்

### கந்தையா செல்வரத்தினம்



உசன், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தோப்பு மற்றும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்வரத்தினம் 25.11.2013 திங்கட் கிழமை லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- பாறுப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு புத்திரனும், காலஞ்சென்றவர்களான கதிரேசு - சின்னாச்சி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற செல்வபாக்கியம் (இளைப்பாறிய பிரதம தாதி-யாழ்.போதனா வைத்திய சாலை) அவர்களின் அன்புக் கணவரும் பகீரதன், ஜீவகன், பார்த்தீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான குணரத்தினம், நவரத்தினம் மற்றும் அரியரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கதிரேசு, முருகேசு ஆகியோரின் மைத்துனரும், சோபனா, காலஞ்சென்ற பிறேமலதா மற்றும் சிந்துஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், சௌமியா, நந்திகா, லதிக்கா, ஹரிஷனன், வசீகன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(30.11.2013) சனிக்கிழமை மு.ப.11.00-ந.ப. 12.00 மணிவரை லண்டனிலுள்ள Indian Funeral Directors இல் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, நாளை (01.12.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு Hendon Crematorium இல் இறுதிக் கிரியைகள் நடைபெற்று, பி.ப.1.00 மணிக்கு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பகீரதன்-லண்டன் +447944101431
ஜீவகன்-லண்டன்+447878401676
பார்த்தீபன்-லண்டன்+447748106567 (40628)(3.6.4)

தகவல்:
க. அரியரத்தினம்(சகோதரன்)
உசன், மிருசுவில்.

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் பசுபதி

ஓய்வுபெற்ற இ.போ.ச.சாரதி (மாமா)



ஊரெழுவைப் பிறப்பிடமாகவும், வயாவிளானை வதிவிடமாகவும், உரும்பிராய் கிழக்கு, சிவன் வீதியில் வசித்து வந்தவருமான சுப்பிரமணியம் பசுபதி கடந்த 28.11.2013 வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தங்கம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - அன்னபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், இராசமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சபாரத்தினம், காலஞ்சென்ற இராசையா (இ.போ.ச) மற்றும் சிங்கராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், யோகமணி (பிரான்ஸ்), பத்மினி (இந்தியா), பதிதாஸ் (சுவிஸ்), சந்திரதாஸ் (சுவிஸ்), பகவதாஸ் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரவீந்திரன் (பிரான்ஸ்), சுரேஸ்குமார் (சுவிஸ்), சுலோசினி (சுவிஸ்), சுபேந்தினி (சுவிஸ்), சாந்தினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், நிரோஜன் (பிரான்ஸ்), நிவேதா, நிஷானா (இந்தியா), பிரவின் (சுவிஸ்), சஹானா, சகீசனா, சஞ்ஜித் (சுவிஸ்), அதின், அதிஷன், அதினவன், அதினன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், உதயகுமார் (பிரசாத் நகையகம், யாழ்ப்பாணம்), ராஜ்குமார் (பிரான்ஸ்), அதிரூபா (உரும்பிராய்) புஸ்பரூபா (பிரான்ஸ்) ஆகியோரின் தாய் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.12.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில்அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள்
ச.உதயகுமார்
(மருமகன் - பிரசாத் நகையகம்)

சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். (சி/13867) (2.6.3)

## மரண அறிவித்தல்



### திருமதி செல்லம்மா ஆறுமுகம்

காரைநகர், களபூமியைப் பிறப்பிடமாகவும், நாவலடிக்கேணி, காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா ஆறுமுகம் (29.11.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்திப்பிள்ளை (ஆங்கில ஆசிரியர்) - வள்ளியம்மை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா - முத்தாச்சி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற ஆறுமுகம் (London B.A - முன்னாள் உப அதிபர், உரும்பிராய் இந்துக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான யோகாம்பிகை, யோகநாதன் மற்றும் பாலசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர்), அம்பிகை (பல் வைத்தியர், பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி), தவமணி தேவி (நீர்ப்பாசனத் திணைக்கள லிகிதர், வவுனியா), நல்லநாதன் (பேராசிரியர், லண்டன் பல்கலைக்கழகம்) ஆகி யோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற சண்முகநாதன் (உதவி அரசாங்க அதிபர் - மன்னார்), நீற்றா (கனடா), ஞானாம்பிகை, வைகுந்த வாசன் (உதவி வைத்திய அதிகாரி), தவராஜசிங்கம், திருமகள் ஆகியோரின் அன்பு மாமியும், சாந்திராஜ் (பொறியியலாளர், கனடா), சக்திராஜ் (கனடா), ஹாரணி (கனடா), ஷாமினி (கனடா), சற்குணராஜ் (கனடா), சுந்தரேஸ்வரி (ஆசிரியர்), மங்கையர்க்கரசி (ஆசிரியர்), சிவனேஸ்வரி, யோகமலர் (ஆசிரியர்), லோகேஸ்வரம் (கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், மன்னார்), குகநேசன், குகப்பிரியன் (பொறியியலாளர், சிங்கப்பூர்), அபிராமி, பிரசன்னா, ஜனகன், ஆரூரன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.12.2013) ஞாயிற்றுக்கிழமை இல.11, வவுனியா, நீர்ப்பாசனத் திணைக்கள விடுதியில் நடைபெற்று , பூதவுடல் பிற்பகல் 4 மணியளவில் வவுனியா, தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

வவுனியா. (சி/40637)(2.6.3) தகவல்: ஆ.பாலசுப்பிரமணியம் (மகன்)



காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்

# ஸ்ரீமனோன்மணி அம்பாள் மண்டபம்

# திறப்பு விழா

**நாளை (01.12.2013) ஞாயிற்றுக்கிழமை**
**காலை 7.00 மணிக்கு ஆரம்பம்**

தலைமை : லயன் E.S.P. நாகரத்தினம் (P.M.J.F) அவர்கள்
(மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை ஆயுட்காலத் தலைவர்)

மங்கல விளக்கேற்றல்: ஆதீனகர்த்தாக்களான சிவத்திரு.ஆ.அம்பலவி முருகன்,
சிவத்திரு.மு. சுந்தரலிங்கம்

ஆசியுரை : ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் (நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்)
ஸ்ரீவேத வித்யாசாகரர் சுவாமிகள் (8ஆவது குருபீடாதிபதி ஸ்ரீ சிவகுருநாத குருபீடம் வேதாந்தமடம்)
பிரம்மஸ்ரீ வி.ஈஸ்வரக்குருக்கள் (கோயில் பிரதம சிவாச்சாரியார்)
ஸ்ரீலஸ்ரீ மோகனதாஸ் சுவாமிகள் (தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரமம்)

சிறப்புப்பேருரைகள் : **"தானங்களிற் சிறந்தது அன்னதானம்"**
செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன்
(தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், சிவபூமி அறக்கட்டளை தலைவர்)
**"ஈழத்து மடாலயங்கள்"** சிவத்திரு ந.விஜயசுந்தரம் (வலம்புரி ஆசிரியர்)

பாராட்டும் விருதுவழங்கலும்: ஸ்ரீ மனோன்மணி அம்பாள் மண்டபம் உருவாக்கித் தந்த திரு. திருமதி சிவஞானம் உமாதேவி தம்பதி வள்ளல்களுக்கு பாராட்டுவைபவமும் **"அறக் கொடைச் செம்மல்"** விருது வழங்கலும் நடைபெறும்.

## *கலை நிகழ்ச்சிகளாக*

காரைநகர் கிழவன்காடு கலாமன்ற மிருதங்க இசையும்,
காரைநகர் யாழ்ரன் கல்லூரி மாணவிகளின் குழு இசையும்,
பாலர் பூங்கா (Kids Park) கரகம் ஆடுதலும்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்களின் *"பத்மாசுரன் மோகினி"* நாட்டிய நாடகமும் இடம்பெறும்.

நன்றியுரை: அ.நா. பாலகிருஷ்ணன் (மாணிக்கவாசகர் மடாலய செயலாளர்)

**ஐம்பொன்னால் உருவான திரு அவதாரத் தெய்வமாம் சிவமைந்தன் மாணிக்கவாசக சுவாமிகளுக்கு சிறப்புப் பூசை வழிபாடுகள் நடைபெற்று மாகேசுர பூசையும் (அன்னதானம்) நடைபெறும்.**

குறிப்பு: **01.12.2013 புதிய மண்டபத் திறப்புவிழாவை முன்னிட்டுக் காரைநகர் செல்லும். அனைத்து தனியார் பஸ்களும் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் வரை செல்லும்.**

ஆதீனகர்த்தாக்கள்: சிவத்திரு.ஆ.அம்பலவி முருகன்,
சிவத்திரு.மு. சுந்தரலிங்கம்

**மாணிக்கவாசகர் மடாலய**
**அன்னதானசபை.**

(சி.14202) (45.6.3)

60 ஆவது
# அகவை நிறைவில் மனம் நிறைந்த வாழ்த்து
30.11.2013



# திருமதி
# புஸ்பவதி வரதராஜா
(யாழ். இந்து மகளிர்
ஆரம்ப பாடசாலை-
பகுதித்தலைவர்)

முகத்தில் பண்பும்
அகத்தில் அன்பும்
இதவழி காட்டிடும்
இதழோரப் புன்னகையும்
சுறுசுறுப்பும் மலர்முகமும்
சுவாரசியப் பேச்சழகும்
வளமெழில் தீவில் (புங்குடுதீவு)
வளர்ந்த நல் ஆசான்
நல்லைக்கந்தன் அருளால்
பல்லாண்டுகாலம்
சீரும்சிறப்புடனும் வாழ
வாழ்த்துகின்றோம்

வாழ்த்துகள்

வாழ்த்துபவர்கள்:
திரு.திருமதி தனபாலசிங்கம் குடும்பம் (ஜேர்மனி),
திரு. திருமதி இலங்கைநாதன் குடும்பம் (ஜேர்மனி),
திருமதி புஸ்பராணி சிவபாலசுப்பிரமணியம் (பிரான்ஸ்),
திரு.திருமதி சிவகுமார் குடும்பம் (சுவிற்சர்லாந்து)
திரு.திருமதி வசீகரன் குடும்பம் (ஜேர்மனி)
செல்வி குணரஞ்சினி தாமோதரம்பிள்ளை.

**27/2, வைமன் வீதி, யாழ்ப்பாணம்.**

(40509)(45.6)

# நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில்
## வழிபடுநர் சபை, உறுப்புரிமை
## விண்ணப்பம் கோரல் - 2014

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் வழிபடுநர் சபை உறுப்புரிமைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. எனவே விண்ணப்பிக்க விரும்புபவர்கள் ஆலய முகாமைத் திட்டத்தில் கூறப்பட்ட தகைமைகளை உடையவர்கள் முகாமைத் திட்டத்திற்கு அமைய விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்களை செயலாளர், நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் எனும் முகவரிக்குத் தபாலிலோ அல்லது ஆலயத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள தபாற் பெட்டியிலோ நேரடியாகவோ செலுத்த இயலும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:
2013.12.01 தொடக்கம் 2013.12.31 பி.ப 5 மணிவரை ஆகும்.

விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய காசுக் கட்டளை, தபாற் கட்டளை விவரங்கள் தேவைப்படும் இடத்தில் 021 321 3024, 021 320 7785 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு விவரங்களை அறிந்துகொள்ளலாம்.

விண்ணப்பப் படிவங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதற்கு அமைவாகத் தயாரித்துக் கொள்ளலாம். 2013ஆம் ஆண்டு வழிபடுநர் சபை அங்கத்தவர்களாக இருப்பவர்கள் விண்ணப்பத்தை விண்ணப்பிக்க விரும்பின் வழிபடுநர் சபையின் புதுப்பிப்பதற்கான விண்ணப்பத்திலும் (2ஆவது அட்டவணை) அவ்வாறு இல்லாது புதிதாக விண்ணப்பிக்க விரும்புபவர்கள் வழிபடுநர் சபை புதிய உறுப்புரிமைக்கான விண்ணப்பம் (முதலாவது அட்டவணை) விண்ணப்பிக்க வேண்டும்.

குறிப்பு:
விண்ணப்பங்கள் பின்வருவோர்களில் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும்.
* சமாதான நீதிவான்
* இந்துமத குரு
* இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்
* கிராமசேவை உத்தியோகத்தர்
* அரசாங்கப் பாடசாலை அதிபர்

அத்தாட்சிப்படுத்துபவரின் பெயருடன் கூடிய இறப்பர் முத்திரை பொறிக்கப்பட வேண்டும்.

நன்றி

அன்னையின் சேவையில் : ந.மோகனரூபன் - செயலாளர்
அறங்காவலர் சபை, நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில்.

# நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில்
## முதலாவது அட்டவணை
## வழிபடுநர் சபை புதிய உறுப்புரிமைக்கான விண்ணப்பம் - 2014

1. விண்ணப்பதாரியின்முழுப்பெயர் :....................
2. முகவரி :....................
3. பிறந்த திகதி : ....................
4. நீர் ஓர் இந்துவா:....................
5. நீர் நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் வழிபடுநரா?....................
6. விளம்பர வாசகம் 2 (அ) அல்லது (ஆ) வின் பிரகாரம் உறுப்புரிமையைத் தகுதியுடையவராயின் பின்வரும் விவரங்களைத் தரவும்.
   அ. இவ் ஆலயத்தில் ஏதாவது உபயங்களுக்கு உரிததுடையவராய் இருக்கின்றீரா? ....................
   ஆ. நித்திய பூசையா / உற்சவமா ....................
   (நித்திய பூசையாயின் திகதியையும் உற்சவமாயின் அதன் விவரத்தையும் தருக)
   இ. உபயப் பணம் செலுத்தப்பட்டிருப்பின் ப.சீ.இல: .................... திகதி: ....................
7. நீர் ஏதாவது குற்றத்தின் பேரில் எந்த ஒரு நீதிமன்றத்தாலேனும் தண்டிக்கப்பட்டுள்ளீரா?
8. இக்கோயில் மாத வேதனம் பெறும் அல்லது கொடுப்பனவைப் பெறும் ஒரு ஊழியராகவோ / குருவாகவோ உள்ளீரா?....................
9. இக்கோயிலில் நீர் ஏதாவது ஒப்பந்தம் செய்துள்ளீரா? ....................
10. விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள காசுக்கட்டளை / தபாற் கட்டளை பற்றிய விவரம்
    கட்டளை இல: .................... திகதி: .................... தொகை: ....................

எனக்குத் தெரிந்த வகையிலும் நம்புகின்ற வகையிலும் மேலே என்னால் கூறப்பட்டுள்ள விவரங்கள் யாவும் சரியானவையென்றும் உண்மையானவை என்றும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். வழிபடுநர் சபையின் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு நான் இத்தால் விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

....................                    ....................
திகதி                    விண்ணப்பதாரியின் ஒப்பம்

இவ்விண்ணப்பத்தில் உள்ளவை யாவும் இதில் சொல்லப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் வாசித்து விளக்கப்பட்டன. இவரை எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரியும். இவர் இவற்றை நன்கு விளங்கிக் கொண்டு என் முன்னிலையில் 20...... வருடம் மார்கழி மாதம்..... ஆம் திகதியே இன்று கையொப்பமிட்டார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

பெயரும் பதவி முத்திரையும்
....................                    என் முன்பாக
....................
.................... அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்

குறிப்பு : அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர் பதவிக்கான 'றபர் ஸ்டாம்' இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. 31.12.2013ஆம் திகதி மாலை 5 மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக விண்ணப் பங்கள் அனுப்பப்படவேண்டும்.

# நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில்
## இரண்டாவது அட்டவணை
## வழிபடுநர் சபை உறுப்புரிமையைப் புதுப்பித்தலுக்கான விண்ணப்பம் - 2014

கௌரவ செயலாளர்,
அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில், நயினாதீவு.

அன்புடையீர்,
2014ஆம் வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து ஆரம்பிக்கும் ஆண்டிற்கான எனது வழிபடுநர் சபைச் சந்தாவைப் புதுப்பிப்பதற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றேன். இத்துடன் ரூபா பத்து ஐம்பதுக்கான இலக்கம் ............... உடைய காசுக் கட்டளை, தபாற் கட்டளை இணைத்துள்ளேன். வழிபடுநர் சபை உறுப்புரிமை வேண்டிய எல்லாத் தகைமைகளையும் நான் தொடர்ந்து பெற்றிருக் கிறேன் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

1. எனது பெயர் : ....................
2. முகவரி :....................
3. ஆலயத்தில் எனக்கு இருக்கும் உபயம்: ....................
   (உபயம் நித்திய பூசையாயின் திகதியையும், உற்சவமாயின் அதன் விவரத்தையும் தருக)
4. உபயப் பணம் செலுத்தப்பட்டுள்ள ப.சீ.இல :.................... திகதி : ....................
5. எனது முன்னைய உறுப்புரிமை இல : 2011இல் :...............
   2012இல் :...............
   2013இல் :...............

....................                    ....................
திகதி                    விண்ணப்பதாரியின் ஒப்பம்

இவ்விண்ணப்பத்தில் உள்ளவை யாவும் இதில் சொல்லப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் வாசித்து விளக்கப்பட்டன. இவரை எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரியும். இவர் இவற்றை நன்கு விளங்கிக் கொண்டு என் முன்னிலையில் ........... வருடம் மார்கழி மாதம் ...... ஆம் திகதியே இன்று கையொப்பமிட்டார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

பெயரும் பதவி முத்திரையும்
....................                    என் முன்பாக
....................
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்

குறிப்பு : அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர் பதவிக்கான 'றபர் ஸ்டாம்' இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. 31.12.2013ஆம் திகதி மாலை 5 மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.

(சி/13525)(7.8.3)

# கேப்பாபிலவில் காணிகள் படையினரால் அபகரிப்பு

## நாடாளுமன்றில் ஒப்புக்கொண்டது அரசு

கேப்பாபிலவு கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள சீனியாமோட்டை கிராமத்தில் மட்டுமே மீளக்குடியேற்றம் இடம்பெற்றுள்ளது. ஏனைய கிராமங்களில் படையினரின் தேவைகளுக்காகக் காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளன என மீளக்குடியேற்ற அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாவின்போது ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரோஸி சேனநாயக்கவின் கேள்விக்கான பதில ளிக்கையிலேயே மீளக்குடியேற்ற அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.

சீனியாமோட்டை பிரதேசத்தில் மீளக்குடியேற்றம் இடம்பெற்றுள்ளதா? இப்பிரதேசத்திற்குத் தேவையான நீர் மற்றும் சுத்திகரிப்பு ஏற்பாட்டு வசதிகள் வழங்கப்பட்டுள்ளனவா? சீனியாமோட்டையில் உள்ள மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை என்ன? இவர்களின் ஆரம்பக் கிராமங்கள் எவை? மேற்படி குடும்பங்களை மீளக்குடியமர்த்தும் திகதி என்ன? முதலான கேள்விகளை ரோஸி சேனாநாயக்க எழுப்பியிருந்தார். இதற்கு மீள்குடியேற்ற அமைச்சு வழங்கிய பதிலில்,

கேப்பாபிலவு கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள சீனியாமோட்டைக் கிராமத்தில் மட்டும் மீளக்குடியேற்றம் நடைபெற்றுள்ளது. இக்கிராமத்திற்குத் தேவையான நீர், சுத்திகரிப்பு ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன. சீனியாமோட்டையில் மீள்குடியேற்றப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை 15. கேப்பாபிலவு கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள மீளக்குடியேற்றம் செய்யப்பட்ட முழுக் குடும்பங்களின் எண்ணிக்கை 323. இவர்களின் ஆரம்பக்கிராமங்களாக கேப்பாபிலவு, சூரியபுரம், புதுக்குடியிருப்பு, சீனியாமோட்டை ஆகியன உள்ளன. இக்குடும்பங்களை மீண் டும் ஆரம்பக் கிராமங்களில் குடியமர்த்தும் திகதியைக் குறிப்பிடமுடியாது.

ஏனெனில், பாதுகாப்புப் படையினரின் தேவைக்காக காணி கையேற்றல் நியதிச் சட்டத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குப்பைக்குள் இருந்த பொருள் வெடித்து ஒருவர் பரிதாபச் சாவு



தபுத்தேகம முசல்பிட்டிய பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற வெடிப்பு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குப்பை கூட்டி தீயிடும் போது அதில் இருந்ததாகக் குறிப்பிடப்படும் பொருள் ஒன்று வெடித்தமையின் காரணமாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வெடித்த பொருள் என்ன என்பது குறித்த விசாரணைகளை தபுத்தேகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## போரில் இறந்தவர்கள் தொடர்பில்

# மஹிந்த அரசின் கணக்கெடுப்பை ஒருபோதும் வரவேற்கமாட்டோம்

உள்நாட்டுப் போரில் இறந்தவர்கள் மற்றும் இழந்த உடைமைகள் குறித்த நாடாளாவிய கணக்கெடுப்பு ஒன்றை நடத்த மஹிந்த அரசு முடிவு செய்திருப்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் வரவேற்காது என்று அக்கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

பி.பி.ஸி. தமிழோசைக்கு அளித்த செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் 1982 முதல் 2009 வரை உள்நாட்டுப் போரில் இறந்தவர்கள் மற்றும் இழந்த உடைமைகள் குறித்த நாடாளாவிய கணக்கெடுப்பு ஒன்றை நடத்த இலங்கை அரசு முடிவு செய்திருப்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவென்று பி.பி.சி. தமிழோசை நேற்று முன்தினம் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவரிடம் வினவியது.

இதன்போது அவர் தெரிவித்தவை வருமாறு:-

'இந்தக் கணக்கெடுப்பு எவ்வாறு நடக்கும்? இதன் செயற்பாடுகள் எப்படி இருக்கும்? ஏற்பட்ட இழப்புகளை உண்மையாக கணக்கெடுக்கும் வகையில் இருக்குமா? அல்லது மூடி மறைக்கும் முயற்சியாக இருக்குமா? என்பதையெல்லாம் பார்த்துத்தான் ஒரு கருத்தைத் தெரிவிக்க முடியும்.

போரின்போது வன்னியில் சிக்கியிருந்த பொது மக்களின் எண்ணிக்கையை இலங்கை அரசு முதலில் மிகவும் குறைத்தே காட்டிவந்தது. சுமார் 30 ஆயிரம் பேர்தான் அங்கே சிக்கியிருக்கிறார்கள் என்றே கூறி வந்தது. ஆனால், போரின் முடிவில் அப்பகுதியிலிருந்து சுமார் மூன்று இலட்சம் பேர் வரை வெளியே வந்தார்கள்.

போரில் பொதுமக்கள் இருந்த இடங்கள் ஷெல் தாக்குதலுக்கு உள்ளாகின. மருத்துவமனைகள் கூட குண்டுத் தாக்குதலுக்கு உள்ளாகின என்றெல்லாம் கூறப்படுகையில், போரில் இறந்த மக்களின் எண்ணிக்கை பெரிதாகத்தான் இருக்கும். இதை ஐ.நா. சபைத் தலைமைச் செயலருக்கு ஆலோசனை வழங்க அமைக்கப்பட்ட நிபுணர் குழுவே சுட்டிக்காட்டியது.



எனவே, மஹிந்த அரசு தொடங்கியிருக்கும் இந்த முயற்சியை இப்போது வரவேற் பது என்ற பேச்சுக்கே இடமில்லை. அந்த முயற்சியை நாங்கள் அவதானிப்போம் - என்று நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் ளளபதிலளித்துள்ளார்.

## துப்பாக்கி முனையில் கிருலப்பனை எரிபொருள் நிலையத்தில் கொள்ளை

### மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் கைவரிசை

கொழும்பு ஹைலெவல் வீதியில் கிருலப்பனை பாலத்துக்கு அருகாமையிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு மோட்டார் சைக்கிள்களில் வந்த இருவர் அங்கிருந்த இரு ஊழியர்களைத் துப்பாக்கி முனையில் மிரட்டி அவர்களிடமிருந்த 92 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக வெள்ளவத்தைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவதினம் வியாபாரம் முடிந்து இரவில் எரிபொருள் நிலையத்தை மூடப்போன சமயமே இந்தக் கொள்ளை நடந்துள்ளதால் இது ஏற்கனவே திட்டமிடப்பட்டு செய்யப்பட்ட கொள்ளை எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். எரிபொருள் நிலையத்தில் கடமையில் இருந்த இரு ஊழியர்களும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் வெள்ளவத்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

## பயணிகளுக்கு ரிகெற் வழங்காத பஸ் நடத்துநருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம்

நடத்துநர் அனுமதிப்பத்திரம் இல்லாமல் கடமையில் இருந் தமை, பயணிகளுக்கு ரிக்கெற் வழங்காமல் பணம் சேகரித் தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் நுகேகொட நீதிமன்றத்தில் முன்னிலை செய்யப்பட்ட தனியார் பஸ் நடத்துநருக்கு நுகேகொட பிரதம நீதி வானும் மேலதிக மாவட்ட நீதிவானுமான அஜித் எம். மாசிங்க 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

ஹெட்டியாவத்தை - கரகம்பிட்டிய 176 ஆம் இலக்க மார்க்கத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் நடத்துநர் ஒருவருக்கே இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

(சி)

## ஸ்கேன் இயந்திரங்களை சிறைச்சாலைகளுக்கு வழங்க பாதுகாப்பு அமைச்சு இணக்கம்

பொதுநலவாய மாநாட்டுக்கு வருகை தந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளைப் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திலும் ஏனைய முக்கிய கேந்திர நிலையங்களிலும் பொருத்தப்பட்டிருந்த அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய விசேட 'ஸ்கேன்' இயந்திரங்களில் சிலவற்றை முக்கிய சிறைச்சாலைகளின் பாவனைக்கு அனுப்ப பாதுகாப்பு அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளது.

பலத்த சோதனை நடவடிக்கைகளையும் தாண்டி சிறைச்சாலைகளுக்குள் சட்டவிரோதப் பொருள்களின் புழக்கம் அதிகரித்துள்ளதால் அவற்றைக் கட்டுப்படுத்த இந்த விசேட 'ஸ்கேனர்கள்' பேருதவியாக இருக்குமென சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சந்திரசேன பல்லேகம, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் கவனத்துக்குக் கொண்டுவந்ததையடுத்து இந்த இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

# பேக்கரி தயாரிப்புகளின் விலையும் உயரும் அறிகுறி

## வரவு - செலவுத்திட்டத்தின் எதிரொலி

2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் பேக்கரிகளில் பாவிக்கப்படும் பதார்த்தங்களின் செஸ் மற்றும் வற் வரிகள் அதிகரிக்கப்பட்டுள்ளதால் பாண், பணிஸ் உட்பட ஏனைய பேக்கரித் தயாரிப்புகளின் விலைகளை உயர்த்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பேக்கரித் தயாரிப்புகளுக்குத் தேவையான மாஜரீன், ஈஸ்ட், பாம் ஓயில் போன்றவற்றின் விலைகள் இம்முறை வரவு - செலவுத்திட்டத்தில் குறைக்கப்படும் என எதிர்பார்த்திருந்த வேளையில் அவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டதால் பேக்கரி உரிமையாளர்கள் சட்டியிலிருந்து அடுப்பில் விழுந்த நிலைக்கு வந்துள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன விசனம் தெரிவிக்கிறார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு: -

வரவு - செலவுத்திட்டத்தின் பின் பேக்கரி பதார்த்தங்களின் விலைகள் கணிசமாக உயர்ந்துவிட்டன. உதாரணமாக மாஜரீனின் விலை கிலோவுக்கு 50 ரூபாவால் அதிகரித்துள்ளது. பேக்கரித் தயாரிப்புகளின் விலைகளை உயர்த்தி மக்கள் மீது மேலும் சுமைகளை ஏற்ற நாங்கள் விரும்பவில்லை. எனவே, எமக்கு அவசியமான பதார்த்தங்களின் விலைகளைக் குறைத்து எங்களுக்கு நிவாரணம் வழங்குமாறு அரசிடமும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் வேண்டுகோள் விடுத்திருக்கிறோம்.

எங்களது கோரிக்கைக்கு சாதகமான பதில் கிடைக்காவிட்டால் விலைகளை உயர்த்துவதைத் தவிர வேறு வழியில்லை. ஏற்கனவே சில பேக்கரி உரிமையாளர்கள் தங்களது பதார்த்தங்களின் விலைகளை உயர்த்திவிட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

- இவ்வாறு கூறினார் என்.கே.ஜயவர்தன.

## விபத்துகளில் இருவர் சாவு!




இருவேறு இடங்களில் இடம்பெற்ற இரு விபத்துகளில் மூதாட்டி ஒருவர் உட்பட இருவர் சாவடைந்தனர்.

குருந்துவத்தை பொலிஸ் பிரிவின் கன்னங்கர மாவத்தைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஒரே திசையில் பயணித்த பஸ் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தின் போது மோட்டார் சைக்கிள் சாரதி பஸ்ஸின் முன் சக்கரத்தில் சிக்கி படுகாயமடைந்த நிலையில், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபின்னர் உயிரிழந்துள்ளார்.

இவர் சரிக்காமுல்லை - பாணந்துறை பகுதியைச் சேர்ந்த மொஹமட் அஷ்ரப் (வயது - 42) எனத் தெரியவந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, கணேமுல்லை பொலிஸ் பிரிவின் கடுவாலமுல்லை சந்தியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் 68 வயதான மூதாட்டி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வீதியைக் கடக்க முற்பட்ட மூதாட்டி மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது படுகாயமடைந்த அவர் ராகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். சம்பவத்துடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிள் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## தொலைபேசி மீள்நிரப்பு அட்டைகள் திருட்டு: ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் மாட்டினர்

சியம்பலாண்டுவ, மாகலுகொல்ல பிரதேசத்தில் இயங்கிவரும் தொலைத்தொடர்பு நிலையத்தில் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான தொலைபேசி மீள்நிரப்பு அட்டைகளைத் திருடிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் சியம்பலாண்டுவ பொலிஸாரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர்.

தாய், மகள் மற்றும் மகன் ஆகிய மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பதியதலாவை பகுதியை வசிப்பிடமாகக்கொண்ட இவர்கள், மாகலுகொல்ல பிரதேசத்தில் தற்காலிகமாக வசித்து வருகின்றார்கள் என்று விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மக்கள் மனங்களை புண்படுத்த வேண்டாம்

**கோ**யில்கள், பாடசாலைகள் போன்றவை மக்களின் உணர்வுகளோடு தொடர்புடையவை.

அவைகளை எவர் உடைத்தழித்தாலும் சம்பந்தப்பட்ட மக்களின் உணர்வுகளை அது புண்படுத்துவதாகவே இருக்கும்.

குறிப்பாக இந்துக் கோயில்கள் அமைக்கப்படுவதற்கும் அவைகளை உடைத்து அழிப்பதற்கும் வரன் முறைகள் உண்டு. சடங்கு சம்பிரதாயங்கள் உண்டு. அவைக்கென்று விசேட மந்திர உச்சாடனங்கள் உண்டு. அவைகளைப் பிழையின்றியும் முறை தவறாமலும் கற்ற நிந்த–அனுபவமிக்க சிவாச்சாரியார்களைக்கொண்டு செய்விப்பது சைவசமய மரபு. அவ்வாறு செய்யாது விடின் அதனால் பெரும் தீய விளைவுகள் ஏற்படும் என்பது இந்து சமய வாதிகளின் நம்பிக்கை.

இந்த நிலையில் வலிகாமம் வடக்கில் படையினர் உயர் பாதுகாப்பு வலயமாக வரித்துக் கொண்டுள்ள பகுதிகளில் இருந்த பொதுமக்களுக்கு சொந்தமான வீடுகள், கட்டடங்கள் மட்டுமன்றி ஒரு கல்லூரிக் கட்டடத்தையும் நான்குக்கு மேற்பட்ட கோயில்களையும்கூட அடித்துடைத்து அழித்திருக்கிறார்கள் என்று முறைப்பாடுகள் வந்திருந்தன. சமய சம்பிரதாயங்களை பின்பற்றாமல் கோயில்கள் உடைத்தழிக்கப்பட்டிருப்பதனால் அதில் சம்பந்தப்பட்டவர்கள் தெய்வ சீற்றத்துக்கும் சாபத்துக்கும் உள்ளாக நேரும் என்று மக்கள் அஞ்சுகிறார்கள். அது அப்பிரதேசத்தையே பாதிப்பதாகவும் அமைந்துவிடும் என்பது நம்பிக்கை. அது மட்டுமன்றி கோயில்களில் இருந்த சிலைகள், சிலைகளுக்கடியில் வைக்கப்பட்டிருந்த பெறுமதியான பொருள்கள் மற்றும் புனிதமான மந்திரத் தகடுகளுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிய மக்கள் ஆவல் கொண்டுள்ளார்கள்.

அதனால்தான், வடக்கு மாகாண சபை முதல் அமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அழிக்கப்பட்டு விட்டதாகக் கூறப்படும் கோயில்களின் இரு குருக்கள்மாருடன் நிலைமைகளை நேரில் ஆராய்வதற்காக அந்தப் பகுதிக்கு செல்ல விரும்பியுள்ளார். முதலமைச்சரின் வாகனம் காங்கேசன்துறை நோக்கி செல்கையில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலைக் கடந்து சென்றவேளை அங்கு வீதியில் அமைந்துள்ள சோதனைச்சாவடியில் இருந்த இராணுவத்தினரால் அதற்கு மேல் செல்லவிடாது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர்.

திரு விக்னேஸ்வரன் சாதாரண மனிதராக ஏதோ வேடிக்கை பார்ப்பதற்காக அங்கு செல்லவில்லை. அவர் இந்தப் பிரதேச மக்களில் பெரும்பான்மையானவர்களாலும், மாகாணசபை உறுப்பினர்களாலும் முதலமைச்சர் பதவியில் முறையாக அமர்த் தப்பட்டுள்ள, உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசர்களில் ஒருவராவார். இந்த நாட்டின் செயல்முறைகள், சட்ட திட்டங்கள் போன்றவை அனைத்தும் அத்துப்படியானவர். இருந்தும் தாம் அந்தப் பகுதிக்கு செல்வதன் நோக்கம் பற்றி இராணுவத்தினருக்கு அவர் விரிவாக எடுத்துக்கூறியுள்ளார். ஆனால் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின்றி உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் செல்ல அனுமதிக்கமுடியாதென்றுகூறி அவரையும் அவருடன் சென்றவர்களையும் படையினர் திருப்பி அனுப்பியிருக்கிறார்கள்.

ஒரு பிரதேசத்தின் முதலமைச்சரால் அப் பிரதேச மக்களின் காணிகள் அழித்தொழிக்கப்படுவதாக முறைப்பாடு வந்த நிலையில் அவைகளை நேரில் சென்று பார்க்கவும் கூட உரிமையில்லாமல் இருப் பது கவலைக்குரியது. முதலமைச்சர் இந்த சம்பவம் பற்றி பின்வருமாறு கருத்து வெளியிட்டார். நாம் சட்டத்தை மீறி எதனையும் செய்யவில்லை. எமது மண்ணில் எமது காணிகளை, எமது கோயில்களை, எமது பாடசாலைகளைப் பார்வையிடுவதற்கு எமக்கு உரிமையுண்டு. எமது இந்த உரிமையை எவராலும் பறித்தெடுக்க அனுமதிக்க முடியாது. அரசு இராணுவத்தைப் பாவித்து எமது பிரதேசத்தைப் பார்வையிடும் உரிமைக்கு தடைபோட்டுள்ளது. நாம் இன்று பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதை இதன் மூலம் உணர்கின்றோம்.

முதலமைச்சரின் இவ்வாறான ஆதங்கம் நிறைந்த குரல் சர்வதேச மட்டத்தில் எதிரொலிக்கும் என்பதைக் கூறத்தேவையில்லை. அது வரவிருக்கும் ஜெனிவா மனித உரிமை மாநாட்டிலும் பிரதிபலிக்காமல் போகாது. இந்த நேரத்திலாவது அரசின் உயர் மட்டத்தில் வீற்றிருப்பவர்கள் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளில் கைவைப்பதை–பாதுகாப்பின் பேரால் இராணுவத்தைக் கொண்டு தகர்த் தெறிவதை கைவிட வேண்டும். அதுவே நாட்டின் சேமத்துக்கு நல்லது.

# புலிகளுக்கு நோர்வேயைப் போல மஹிந்தவுக்கு தென்னாபிரிக்கா?

பொதுநலவாய மாநாடு இலங்கை அரசு எதிர் பார்த்தளவுக்கு வெற்றியைத் தரவில்லை என்பதுடன், எதிர்மாறான விளைவுகள் பலவற்றையும் ஏற்படுத்தியுள்ளது. சர்வதேச சமூகம், இந்த மாநாட்டைப் பயன்படுத்தி கிட்டத்தட்ட இலங்கையை ஒரு வட்டத்துக்குள் சிக்க வைத்துள்ளதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

தொல்காப்பியன்

நவநீதம்பிள்ளையின் தாய் நாடான தென்னாபிரிக்கா, அண்மைக்காலத்தில் இலங்கையின் மனிதஉரிமைமீறல்களுக்கு எதிராக அதிகம் வாய்திறக்காமல் இருந்து வருகிறது. மொறிசியசைப் போன்றே தமிழர்கள் உள்ளிட்ட இந்திய வம்சாவழியினர் அதிகளவு வாழும் தென்னாபிரிக்கா, ஒருகாலத்தில் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுவதாக, அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்துள்ளதாக அரசால் விமர்சிக்கப்பட்ட நாடு. எனினும் அந்த நாடு, இலங்கையின் போர்க் குற்றங்கள் மீது கடும் போக்கை வெளிப்படுத் தாதது ஏன் என்ற கேள்வி இப்போது நீடிக்கவே செய்கிறது. புறக்கணிக்கும் அழைப்புகளுக்கெல்லாம் அகப்படா மல், தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமா, கொழும்பு வந்து, மாநாடு தொடங் கியதில் இருந்து முடியும் வரை இலங்கையுடன் நின்றிருந்தார். ஒரு பக்கத்தில், இலங்கைக்கு காலக்கெடு விதித்து, பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் பரபரப்பை கிளப்பி விட்ட போது, தென்னாபிரிக்க அதிபர் ஜேக் கப் சூமா அமைதியாக இருந்தார். ஆனால், அவரும் இலங்கையை வளைப்பதற்கான ஒரு கருவியாகவே செயற்பட்டுள்ளார் என்றே தெரிகிறது.

### இலங்கைமீது மென்போக்கைக் கடைப்பிடிக்கும் சர்வதேசம்

பொதுவாகவே, சர்வதேச இராஜதந்திர அரங்கில், இரண்டு விதமான அணுகுமுறைகள் கடைப்பிடிக்கப் படுவதுண்டு. முதலாவது கடும்போக்கு அணுகுமுறை, இரண்டாவது மென் கடும் போக்கு அணுகுமுறை. ஒரு நாட்டை முற்றாக ஓரம்கட்டி, ஒதுக்கித் தள்ளி, அதன் ஆட்சியை மாற்ற, வல்லமை மிக்க நாடுகள் திட்டமிட்டால், அதற்காக கடும் போக்கை கடைப் பிடிக்கத் தவறுவதில்லை. பொருளாதாரத்தடை, ஆயுத ஏற்றுமதித் தடை என்று அடுக்கடுக்கான தடைகளை விதித்து, உச்சக்கட்டமாக படைகளை அனுப்பி தமது இலக்கை அடைவது அவற்றின் வழக்கம். ஈரான், வட கொரியா, கியூபா போன்ற நாடுகள் இத்தகைய தடைகளை இப்போதும் எதிர்கொள்கின்றன. ஈராக், லிபியா, போன்ற நாடுகளில் இத்தகைய தடைகள், படைத் தலையீடு வரை விரிந்தது.


இத்தகைய கடும்போக்கை இலங்கை மீது செலுத்தும் திட்டம் ஏதும், தற்போது வல்லமை மிக்க நாடுகளின் கையில் இல்லை. ஆனால், இலங்கை மீது மென் கடும்போக்கு அணுகுமுறையை கடைப்பிடிக்கும் திட்டத்தை மேற்குலக நாடுகள் கொண்டிருப்பது உண்மை.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட இரண்டு தீர்மானங்களும் இதற்குச் சாட்சி. அதுமட்டுமன்றி, இலங்கைக்கு எதிராக அமெரிக்காவும், ஏனைய அதன் சார்பு நாடுகளும் கொண்டுள்ள அல்லது வெளிப்படுத்தி வரும் கருத்துகள், இந்த நிலைப்பாட்டை வலுப்படுத்துகின்றன. அதாவது இலங்கையில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தும் அளவுக்கு, செயற்பாடுகளை நேரடியாக மேற்கொள்ளாது போனாலும், இலங்கையை ஒரு வட்டத்துக்குள் கொண்டு வருவதற்கு - தமது பிடிக்குள் சிக்கவைத்துக் கொள்வதற்குமேற்கு நாடுகள் முனைகின்றன என்பதில் சந்தேகமில்லை.

### வெவ்வேறு தொனிகளில் மேற்கின் குரல்

பொதுநலவாய மாநாட்டில்,மேற் குலகின் ஆதிக்கம் குறைவு முக்கியமாக அமெரிக்கா அதில் இல்லை. அதன் கூட்டாளிகளான பிரான்ஸ் போன்ற ஏனைய பல ஐரோப்பிய நாடுகளும் இல்லை. ஆனால், பிரிட்டன், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, கனடா போன்ற மேற்குலக நாடுகள் இதில் உள்ளன. கனடாவும், பிரிட்டனும், இலங்கைக்கு எதிராக பொது நலவாய மாநாட்டில் வரிந்து கட்டிக் கொண்டு செயற்பட்டன. ஆனாலும், இந்த மாநாட்டில், மேற்குலக நாடுகள் ஒன்று பட்டு ஒரே குரலாக ஒலிக்கவில்லை.

சர்வதேச அரங்கில், வழக்கமாக ஒரே குரலில் ஒலிக்கும்– செயற்படும் மேற்குலக நாடுகள், பொதுநலவாய மாநாட்டில் இலங்கைக்கு சார்பாகவும் எதிராகவும் நடந்து கொண்டமை புதிரான விடயம் தான். இந்த விடயத்தில், இலங்கைக்கு முற்றிலும் சார்பாக நடந்து கொண்டது ஆஸ்திரேலியா–அதற்கு முக்கியமான காரணம், அகதிப் படகுகளை தடுப்பதற்கு இலங்கைக் கடற்படையின் உதவி தேவை. அதற்காக, இலங்கையின் மனிதஉரிமை மீறல்களையெல்லாம் கண்ணை மூடிக் கொண்டு ஆதரிக்கத் தயாரானது. ஆனால் நியூசிலாந்து, போர்க்குற்றங்களுக்கு சர்வதேச விசாரணையெல்லாம் தேவையில்லை என்று குத்துக்கரணம் அடித்ததன் பின்னணி மர்மமாகவே உள்ளது. இவ்வாறு மேற்குலகம் முரண்பட்டுக் கொண்டிருக்க, இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், மாநாட்டிற்கு வராமல் தனது எதிர்ப்பைப் பதிவு செய்தார். எத்தகைய சூழலில் அவர் வராது போயிருந்தாலும், அதற்குக் காரணம் அடிப்படை, மனித உரிமை மீறல்கள் தான் என்பதில் சந்தேகமில்லை. அந்தவகையில், அவரது எதிர்ப்பு இலங்கைக்கு சார்பானதாக கருதப்பட்டத்தக்கதல்ல. அதுமட்டுமல்ல, கனடாவைப் போலவே, வெளிப்படையான புறக்கணிப்பை வெளிப்படுத்திய ஒரே நாடு மொறிசியஸ் தான். கனேடியப் பிரதமரைப் போன்றே, மொறிசியஸ் பிரதமர், நவீன் சந்திர ராம் கூலம், பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணிப்பதாக அறிவித்தார். இலங்கையின் மனிதஉரிமை மீறல்களைச் சுட்டிக்காட்டி அவர் கொழும்பு மாநாட்டை புறக்கணித்தமை முக்கியமானது. மொறி சியஸ் பிரதமர், இந்த மாநாட்டைப் புறக் கணித்ததால், அடுத்த மாநாட்டை நடத்தும் வாய்ப்பை இழக்க நேரிட்டது. அரச தலைமை கொழும்புக்கு வந்தால் தான், அடுத்த மாநாட்டை நடத்த முடியும் என்று பொதுநலவாய செயலர் கமலேஸ் சர்மா மிரட்டிப் பார்க்க, கொழும்புக்கு வந்து தான், மாநாட்டை நடத்தும் வாய்ப்பை பெற வேண்டும் என்றால் அத்தகைய வாய்ப்புத் தமக்கு வேண்டாம் என்று அந்த வாய்ப்பையே தூக்கி வீசியி ருந்தார் மொறிசியஸ் பிரதமர் நவீன் சந்திர ராம்கூலம். அதாவது, குறிப்பிட்ட சில நாடுகள் பொதுநலவாய மாநாட்டைப் பயன்படுத்தி இலங்கைக்கு அழுத்தம் கொடுத்தன. சில நாடுகள் ஆதரவு தெரிவித்தன. இன்னும் சில நாடுகள், எதிர்க்காமலும், ஆதரிக்காமலும் வந்து போயின. அவ்வாறு வந்து போன நாடுகளில் ஒன்று தான் தென்னாபிரிக்கா.



### உள்ளக விசாரணை இன்றேல் சர்வதேச விசாரணை

ஜெனிவா தீர்மானத்தை இலங்கை நடைமுறைப் படுத்தாதுவிடின் அடுத்த ஆண்டு இன்னும் கடினமான முடிவுகளை எடுக்க நேரிடும் என்று அமெரிக்கா ஏற்கனவே எச்ச ரிக்கை செய்துள்ளது. இந்த நிலையில், நான்கு மாதங்களுக்குள் சுதந்திரமான உள்ளக விசாரணையை நடத்தாவிடின், ஐ.நா மனிதஉரிமைகள் பேரவை மூலம் சர்வதேச விசாரணைக்கு முயற்சிகள் எடுக்கப்படும் என்று பிரித்தானியப் பிரதர் டேவிட் கமரூன் எச்சரித்துள்ளார். அது மட்டுமன்றி இலங்கை விவகாரம் பிரித்தானிய வெளிவிவகாரக் கொள்கையின் ஒரு பகுதியாகியுள்ளதாகவும், சகல சர்வதேச அமைப்புகளிலும் இது எழுப்பப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். இலங்கையின் மனிதஉரிமை விவகாரத்தில், ஒன்றுபட்டு செயற்படுவோம் என்று கொழும்பு வரமுன்னர் புதுடெல்லியில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்குடன் ஓர் இணக்கப்பாட்டைக் கண்டிருந்தார் டேவிட் கமரூன்.

நம்பகமான உள்ளக விசாரணைக்கு இலங்கை இணங்காது போனால், சர்வதேச விசாரணை உறுதி என்ற கருத்து வலுவாக பரப்பப்பட்டு வருகின்ற சூழலில், ஏதாவதொன்றை செயற்படுத்தியாக வேண்டிய கட்டாயம் இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது. அதிலும் பொதுநலவாய அமைப்பின் தலைமை இப்போது இலங்கையிடம் வந்துள்ளது. அந்தப் பொறுப்பையும் நிறைவேற்றியாக வேண்டும். இத்தகைய அழுத்தங்களின் ஊடாக, சுதந்திரமானதொரு உள்ளக விசாரணைப் பொறிமுறையை நோக்கி இலங்கையை நகர்த்த முனைகிறது சர்வதேச சமூகம். அதற்கான கருவியாகத் தான் தென்னாபிரிக்கா பயன்படுத்தப்படுவதாகத் தெரிகிறது. தென்னாபிரிக்காவில், இன முரண்பாடுகளைக் களைய, உண்மை நல்லிணக்க ஆணைக்குழு எவ்வாறு உதவியதோ, அதுபோன்றதொரு ஆணைக் குழுவை அமைப்பது குறித்து இலங்கை ஆலோசிப்பதாகத் தகவல்கள் கசிகின்றன. இதுகுறித்துப் பேசவே தென்னாபிரிக்க அதிபர் ஜேக்கப் சூமா பொதுநலவாய மாநாட்டுக்கு வந்திருந்தார். அந்தக் காரணத்தை அவர் வெளிப்படையாகவும் கூறினார். தென்னாபிரிக்காவின் உதவியுடன், உண்மை நல்லிணக்க ஆணைக் குழுவை அமைத்து, தற்போதைக்கு சர்வதேச அழுத்தங்களில் இருந்து விடு பட அரசு எத்தனிக்கலாம். அதற்கான பொறிமுறையை உருவாக்குவது குறித்து தென்னாபிரிக்கா திட்டங்களை முன்வைத்துள்ளது.

முன்னர் விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்திப் பொறிக்குள் தள்ளுவதற்கு நோர்வேயை சர்வதேச சமூகம் எவ்வாறு பயன்படுத்திக் கொண்டதோ, அது போன்றே இலங்கை அரசை வளைத்து ஒரு வட்டத்துக்குள் கொண்டு வருவதற்கு தென்னாபிரிக்கா களமிறக்கப்பட்டுள்ளது. இது எந்தளவுக்கு சாத்தியமாகும் என்று கூறமுடியாது. ஆனால், அடுத்த சில மாதங்களுக்குள் இலங்கை இந்த வட்டத்துக்குள் சிக்கிக் கொள்ள மறுத்தால், அடுத்த கட்டமாக மேற்கு நாடுகள், இலங்கையை பெட்டிக்குள் அடைக்கும் முயற்சிகளைத் தான் முன்னெடுக்கும்.

# பலவீனமற்ற சமூகத்தை கட்டியெழுப்புவோம்



சி.நற்குணலிங்கம்
நெல்லியடி

எம்மை அழிவுக்கு இட்டுச் செல்லும் பலவீனங்கள் எமக்குள் காணப்படுகின்றதென நாம் உணர்ந்தால் அவற்றை முடியுமான அளவு அகற்றிக்கொள்ள முயற்சிக்க வேண்டும். இல்லையேல் பாதகமான விளைவுகளையே எதிர்நோக்க வேண்டிவரும்.

திடீர் கோபம், சந்தேகம் கொள்ளல், சிறிய விடயங்களுக்கும் கவலைப்படல், சிறிய கவலைகளைப் போக்கவென மது அருந்துதல், புகைத்தல், விரைவில் முரண்படுதல், பதற்றமடைதல், ஏதேனும் விடயத்தினை செய்ய முன்வராமை, மறைந்திருக்க முயற்சித்தல் இவை எம்மிடத்தில் காணப்படும் பலவீனங்களாகும். இப்பலவீனங்களால் பலவீனம் உடையவர்க்கு மட்டுமன்றி ஏனையோர்க்கும் எவ்வித நன்மையும் கிடையாது. இது பலவீனமான ஒரு சமூகத்தையே தோற்றுவிக்கும்.

**பலத்தை வெளிப்படுத்தினால் பலவீனம் பறந்துவிடும்**

மனிதனது பலவீனங்கள் அவனது மனதிலிருந்தே பிறக்கின்றன. மனதிலே புதைந்து கிடக்கும் விரக்தியின் காரணமாகவே பலவீனங்கள் தோன்றுகின்றன. தனிமனித சிந்தனையே தனிமனித வளர்ச்சிக்குக் காரணம். மனித மனம் வெற்றிடமாக இருக்கும்போதே அதில் நல்ல சிந்தனைகளை நிரப்ப வேண்டும். தவறின் பலவீனமான அம்சங்கள், பழக்கங்கள், சிந்தனைகள் அந்த இடத்தை நிரப்பிக் கொள்ளும்.

நம்பிக்கையான சிந்தனைகளே மனதை உறுதிப்படுத்தும். எல்லா மனிதரிடமும் பலம், பலவீனம் என்பன உள்ளன. பலத்தை முதலில் உணருங்கள். இருக்கும் பலவீனங்களை அலட்சியப்படுத்துங்கள். பலத்தை செயற்படுத்தும்போது பலவீனம் பலவீனமடைந்துவிடும். இவ் விடயத்தில் சிரத்தை கொள்ளத் தவறின் எம்மிடத்தில் காணப்படும் பலவீனங்களால் நாம் பலவீனமடைவோம்.

**சமுதாயத்தில் இருந்து புறமொதுக்கப்படுவார்கள்**

பலவீனங்கள் குடும்ப மகிழ்ச்சியை, குடும்ப உறவை, சமூக உறவை, சமூக நேசிப்பை, உறவினர் உறவை, நல்ல நண்பர்கள் உறவை, உடல் ஆரோக்கியத்தை, உள வளத்தை பாதிக்கும். நாம் பயன்படுத்தும் வார்த்தைகள் ஆயுதங்களைவிட கூர்மையானவை. சரியாகப் பயன்படுத்தினால் வெல்வது நிச்சயம். தவறாகிவிட்டால் வீழ்வது நிச்சயம். இதன் மூலம் முரண்பாடுகள், பதற்றமடைதல் ஆகிய பலவீனங்கள் தோற்றம்பெறும். எடுத்ததற்கெல்லாம் துள்ளிக்குதிப்பதும், கடுமையான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்வதும், மற்றவர்களால் வெறுக்கப்படும் செயற்பாடுகளாகும். பலவீனங்களை தம்வசம் வைத்திருப்போர் தமது சக்திகள் அனைத்தையும் இழந்துவிடுவார்கள். கொஞ்சம் கொஞ்சமாக அவை நம்மை அழித்துவிடும். இவ் உணர்வுகள் மனதில் தோன்றினாலும் அதன் பாதிப்புக்கள் உடலிலும் ஏற்படுகின்றன. இதயத் துடிப்பு, அல்சர், வாய் உலர்தல், நீரிழிவுபோன்ற நோய்கள் ஏற்படும். நோய் எதிர்ப்புச் சக்தியும் குறைவடையும். இதுமட்டுமல்ல இவர்கள் ஒட்டுமொத்த சமுதாயத்திலிருந்து புறமொதுக்கப்படும் ஏதுநிலை உருவாகும்.

**நற்பண்புகளின் பங்களிப்பு முக்கியம்**

எடுத்ததற்கெல்லாம் கவலைப்படுவது உடைந்த பானையில் தண்ணீரை நிரப்புவதற்கு ஒப்பானது. கவலை உயிரோடு கூடிய உடலையே எரிக்கக்கூடியது. தன்னையும் கெடுத்து பிறரையும் கெடுத்து தற்காலத்தில் மட்டுமன்றி பின்னரும் துன்பத்தை நீடிக்கச் செய்யும். இது பசியின்மை, உறக்கமின்மை, விரக்தித்தன்மை, தனிமை என்பவற்றைத் தோற்றுவிக்கும். பதற்றத்தைப் பொறுத்தவரை செயலும் அதுவே விளைவும் அதுவே. காரணமும் காரியமும் அதுவே. பதற்றம் மனநோய்க்கு வித்தாகிவிடும். நாளுக்குநாள் வளர்ந்துவரும் சமூகத்துக்கு நற்பண்புகளின் பங்களிப்பு மிகமுக்கியம். நற்பண்புகள் குறைந்து செல்லும்போது சமூகச்சூழலும் சீரழிந்துபோவது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

**எப்படித் தவிர்க்கலாம்?**

எமக்கு பலவீனங்கள் ஏற்படும்போது நாம் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும். இவற்றுக்கு எந்நேரமும் நாம் ஆளாகக்கூடாது. உணர்ச்சிவசப்படாமல் நிலைமையைப் புரிந்துகொண்டு செயற்படும் சக்தியை வளர்த்துக்கொள்ள வேண்டும். இதன் மூலம் நாட்டுக்கு பயனுள்ள குடிமகனாக வளர முடியும்.

முரண்பாடுகள் வாய்ச்சண்டையாக மாறி பல உயிரிழப்புகளையும் தோற்றுவிக்கும். விட்டுக்கொடுத்தல், பொறுமை, சகிப்புத்தன்மை, நயமான வார்த்தைப் பிரயோகம் போன்ற பண்புகளை வளர்த்துக் கொள்வதன் மூலம் முரண்பாடுகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

மனநோயாளியாக்கும் மதுப் பாவனையையும், தற்காலிக இன்பத்தைத் தரும் புகைத்தலையும் பகைக்க வேண்டும். இவற்றைப் பகைப்பதன் மூலம் நிரந்தர இன்பத்தை அடையலாம். அத்துடன் மனதை எப்போதும் உற்சாகத்தோடும், நட்புணர்வோடும் வைத்திருக்கப் பழகிக்கொள்ளவேண்டும் உற்சாகத்தை உருவாக்கிக்கொள்ள மனிதன் எப்போதும் மகிழ்ச்சியான தருணங்களையே எண்ணவேண்டும். இதன்மூலம் மதுப்பாவனை, புகைத்தலைக் கைவிடமுடியும்.

சமூகத்தில் வாழும் ஒவ்வொருவருக்கும் கருத்துக்களை பரிமாறிக் கொள்ள வேண்டிய தேவைஉள்ளது. அப்போது சரியாக செவிமடுத்து , பொருத்தமான கருத்துக்களை வெளியிடல் முக்கியம். தேவையானதை மட்டும் பேசுதல், இன்மொழி பேசுதல், அன்பாகப் பேசுதல், குறைகளை பேசாதிருத்தல் போன்றவற்றின் மூலம் பலவீனம் ஏற்படுவதைத் தவிர்த்து சமூக உறவை வளர்த்துக் கொள்ள முடியும்.

ஓய்வு வேளைகளில் உடலுக்கு மட்டுமன்றி மனதுக்கும் பயனுள்ளவற்றை மேற்கொள்ள வேண்டும். பஜனையில் ஈடுபடல், சிறந்த நூல்களை வாசித்தல், ஆன்மிகத்தில் ஈடுபடல், நல்ல நண்பர்களுடன் உரையாடுதல் மூலம் பலவீனங்களைக் களைந்து உங்கள் முன்னேற்றத்துக்கு மட்டுமன்றி சமூக அபிவிருத்திக்கும் பங்காற்ற முடியும்.

**சந்தேகம் - முதல் எதிரி**

சந்தேகம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அவர்களுடன் அமர்ந்து பேசி தமது அன்பையும், ஒழுக்கத்தையும் விளக்கி புரிய வைக்க வேண்டும். அவரவர்களுக்கு உள்ள எல்லைக்குள் இருந்து கொண்டால் சந்தேகச் சிக்கல் வராது.

நம்பிக்கையான சிந்தனைகளே மனதை உறுதிப்படுத்தும். எல்லா மனிதரிடமும் பலம், பலவீனம் என்பன உள்ளது. பலத்தை முதலில் உணருங்கள். இருக்கும் பலவீனங்களை அலட்சியப்படுத்துங்கள். பலத்தை செயற்படுத்தும் போது பலவீனம் பலவீனமடைந்துவிடும். இவ் விடயத்தில் சிரத்தை கொள்ளத் தவறின் எம் மிடத்தில் காணப்படும் பலவீனங்களால் நாம் பலவீனமடைவோம்.

ஒருவரை ஒருவர் முழுமையாக நம்புங்கள். எப்போ, எதை, எப்படிப்பேச வேண்டும்? பேசத்தான் வேண்டுமா? என்பதைச் சிந்தித்துப் பேசவேண்டும். பின்புல சம்பவங்களை அசை போட வேண்டும். அநாவசியமான வார்த்தைகளை வெளிவிடாதீர்கள். நிதானமாகப் பேசுங்கள். எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருளா என சிந்திக்க வேண்டும். சந்தேகம் கொள்ளாமல்லால் குடும்பத்தின் நிம்மதி இழக்கப்படும். எனவே இதனை அவதானமாகக் கையாள வேண்டும்.

நேரிடையான எண்ணம் கொள்ளுங்கள், உணர்வுகளை அமைதியாகப் பகிர்ந்து கொள்ளுங்கள், மன்னிக்கப் பழகுங்கள், உங்கள் எண்ணங்களைத் தேக்கி வைக்காதீர்கள், உங்கள் நிலையில் உறுதியாக இருங்கள், பொழுதுபோக்குக்கு நேரம் ஒதுக்குங்கள், நல்ல நேரிடைச் சிந்தனையுள்ள நண்பர்களைத் தெரியுங்கள், பிரச்சினைகளை எளிதாகக் கையாளுங்கள், மக்களிடம் அன்பு கொள்ளுங்கள், வாழ்க்கை என்பது இன்பமும் துன்பமும் கலந்த ஒன்றே. அதனை திருப்திகரமாக ஆக்கக்கூடிய திறன் எம் மனதிலும், நமது செயலிலும் உள்ளன என்பதை சிந்திக்க மறக்காதீர்கள். இவற்றில் நீங்கள் அக்கறை செலுத்தினால் பலவீனம் ஏற்படுவதைத் தனியாக நிர்வகிப்பதன் மூலம் உங்களது பலவீனங்களை நீக்கி ஒளிமயமான எதிர்காலத்தினை நோக்கி பயணிக்கவும் முடியும். பலவீனமற்ற சமுதாயம் உருவாக்கம்பெறும்.

# நீங்கள் மழை நேரத்தில் வாகனம் ஓட்டுபவரா ?

அனுஜன்



மழையை விரும்பாதோர், ரசிக்காதோர் யாரும் இருக்க முடியாது. ஆனால், இன்று நகரப் போக்குவரத்து நெரிசலில், மேடு பள்ளமான சாலையில் வாகனம் ஓட்டுவதே சிரமம் என்ற நிலையில், மழை நேரத்தில், கூடுதல் அசௌகரியங்களும், விபத்து அபாயமும் சேர்ந்து கொள்கின்றன.

மழை நேரத்தில், வாகனம் ஓட்டும்போது, கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்...

மழை பெய்யத் தொடங்கும் முதல் சில மணி நேரங்கள் வாகன ஓட்டிகளுக்கு மிகவும் ஆபத்தானவை. சாதாரண நாள்களில், இயந்திர ஓயில், கிரீஸ் ஆகியவை வீதியில் சிந்தி, படிந்திருக்கும். அதனுடன், மழைநீரும் சேரும் போது, வீதி மிகவும் வழுக்கலாகிவிடும். தொடர்ந்து மழைபெய்யும்போது, இந்த வழுக்கல் நீங்கிவிடும் என்றாலும், ஆரம்பத்தில், கவனமாக இருப்பது அவசியம்.

ஈரமான வீதிகளில் சறுக்கி விழுவதற்கான வாய்ப்பு அதிகம் இருப்பதால், மிதமான, சீரான வேகத்தில் செல்வதுடன், சாதாரண நாள்களைப் போல், மழை நேரத்தில், பிரேக் சிறப்பாகச் செயல்படுவதில்லை என்பதையும் ஞாபகத்தில் வையுங்கள்.

சற்று முன்பாகவும், வழக்கமான அழுத்தத்தை விட மெதுவாகவும், 'பிரேக்'கை அழுத்துவது நல்லது. அது, உங்களுக்கும், உங்களுக்கு முன் உள்ள வாகனத்துக்கும் தூரத்தை அதிகரிப்பதோடு, உங்களுக்குப் பின் வரும் வாகன ஓட்டிக்கு, நீங்கள், வண்டியை நிறுத்தப் போகிறீர்கள் என்ற எச்சரிக்கையைத் தரும்.

முன் செல்லும் வாகனத்துக்கும், உங்கள் வாகனத்துக்கும், 20-30 மீற்றர் இடைவெளி இருக்கட்டும். நெருக்கமாகச் சென்றால், அடுத்த வாகனத்தில் இருந்து அடிக்கும் தண்ணீர், உங்கள் பார்வையை மறைக்கக் கூடும்.

தண்ணீர் தேங்கிய வீதியில், போக்குவரத்து நெரிசலில் மாட்டிக்கொண்டால், வாகனத்தை நிறுத்தாதீர்கள். இயந்திரம் ஓடிக்கொண்டே இருக்கட்டும்.

தேங்கியிருக்கும் தண்ணீரின் அளவு தெரியாத நிலையில், சீராக, மெதுவாக வாகனத்தை ஓட்டுங்கள். இடையில் நிறுத்தாதீர்கள். நிறுத்தினால் 'எக்சாஸ்ட்' குழாய்க்குள் தண்ணீர் புகுந்துவிடும்.

வளைவில் திரும்பும்போதும், சாலையில் ஒரு புறமாக ஒதுங்கும்போதும் சமிக்ஞை விளக்குகளை ஒளிரவிடுவதுடன், வழக்கமான வேகத்தை விட, மெதுவாகத் திரும்புங்கள்.

பாதசாரிகள் மீது, தண்ணீரைச் சிதறடித்துச் செல்லாதீர்கள். இரக்கத்தோடு நடந்துகொள்ளுங்கள்.

## பிரியாவிடை பெற்றார் பிரதிப் பொலிஸ் மா அதிபர்

*கிளிநொச்சியில் சிறப்பான நிகழ்வு*



வடமாகாண முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி டீ சில்வாவுக்கான பிரியாவிடை நிகழ்வு கிளிநொச் சியில் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.
கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் கிளிநொச்சி மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி சரத் தெனியகே தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.
இதில் பொலிஸ் அணிவகுப்பு மரியாதையுடன் காமினி டீ சில்வா வரவேற்கப்பட்டு, நினைவுப் பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.
இதன்போது பொலிஸ் உயரதிகாரிகள், பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (க-6)

## பொன்தீவுக்கண்டல் கிராமத்தில் 46 குடும்பங்களுக்கு வீடுகள்

*மாகாண சபை உறுப்பினர் றிப்கான் தெரிவிப்பு*

மன்னார், நவ.30
ஏற்கெனவே தீர்மானம் மேற்கொண்டதன் பிரகாரம் மன்னார் பொன்தீவுக்கண் டல் கிராமத்தில் 46 குடும்பங்களுக்குமான வீடுகள் அமைக்கப்படும் - இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினரான றிப்கான் பதியுதீன் இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:
நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பொன்தீவுக் கண்டல் கிராமத்தில் இரு தரப்பினருக்கு இடையில் ஏற்பட்ட பிரச்சினைக்கு சமரசப் பேச்சு வார்த்தை மூலம் இணக்கம் காணப்பட்டுள்ளது.
பொன்தீவுக்கண்டல் கிராமத்தில் 46 குடும்பங்களுக்கு நானாட்டான் பிரதேச செயலகத்தினூடாக காணிகள் ஒதுக்கப்பட்டதால், அந்த மக்கள் தமது காணிகளில் வீடுகளை அமைக்கும் ஆரம்பப் பணியில் ஈடுபட்டுவந்தனர்.
ஆனால் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த சில மக்களின் எதிர்ப்புக் காரணமாக அந்த வேலைகள் கைவிடப்பட்டிருந்தன.
இதனைத் தொடர்ந்து நானாட்டான் பிரதேச செயலர், மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் மற்றும் கிராம மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண அமைச்சர், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு இடையில் இவ்விடயம் தொடர்பாக தொடர்ச்சியாகக் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.
குறித்த 46 குடும்பங்களுக்கும் வீடு அமைப்பதற்கென ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அந்த மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர்.
இந்த நிலையில் பொன்தீவுக் கண்டல் கிராம மக்களுடன் மேற்கொண்ட பேச்சு வார்த்தையின் பயனாக ஓர் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது. எனினும் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஒரு சிலர் தொடர்ந்தும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.
எனினும் ஏனைய மக்களின் ஆதரவோடு அந்த 46 குடும்பங்களுக்குமான வீட்டுத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.
பொன்தீவுக் கண்டல் கிராமத்தில் தமிழ், முஸ்லிம் என்ற பாகுபாடுகள் எவையும் இன்றி அந்த மக்களுக்கு சகல உதவிகளும் மேற்கொள்ளப்படும் -என்றார். (க-12)

## சுற்றாடலை பேணுமாறு வேண்டுகோள்

தற்போது மழைகாலம் என்பதால் தொற்றுநோய்களைத் தடுக்கும் வகையில் சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருக்குமாறு சுகாதாரப் பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது.
இது தொடர்பாக வவுனியா சுகாதாரப் பிரிவினர் விடுத்துள்ள அறிவிப்பில், தற்போது மழைக்காலம் என்பதால் பொது மக்கள் வசிக்கும் இடங்களில் உள்ள நீர் நிலைகள் மற்றும் கைவிடப்பட்ட பொருள்களால் நுளம்புகளின் பெருக்கம் அதிகரிக்கும் சாத்தியம் உள்ளது.
இதனால் பல்வேறு நோய்கள் பரவக்கூடிய ஏதுநிலை உருவாகும்.
மேலும் கைவிடப்பட்ட பொருள்களை அகற்றித் துப்புரவு செய்வதுடன் நோய்த் தாக்கத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதனை மீறுவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-421)

## பட்டியலில் ஒருவிலை; விற்பனையே வேறுவிலை

*போதனா வைத்தியசாலை உணவகத்தில்*

யாழ்ப்பாணம், நவ.30
யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள உணவகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள விலைப் பட்டியலை விட அதிக விலைக்கு உணவுப் பொருள்கள் விற்பனை செய்யப்படுவதாக நோயாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.
யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளரைப் பார்வையிடுவதற்காக பாஸ் நடைமுறை கொண்டுவரப்பட்ட பின்னர் வைத்தியசாலைக்குள் உள்ள உணவகத்திலேயே அதிகமான நோயாளர்கள், பார்வையாளர்கள் உணவுப் பொருள்களை கொள்வனவு செய்து வருகின்றனர்.
இந்த நிலையில் உணவுப் பொருள்களின் விலைப்பட்டியல் காட்சிக்கு வைக்கப்பட்ட போதும் குறித்த விலைகளில் பொருள்கள் விற்பனை செய்யப்படுவதில்லை. இதனால் நுகர்வோர் உணவகத்தில் உள்ள ஊழியர்களுடன் மீதிப் பணம்கேட்டு முரண்படவேண்டிய நிலையில் உள்ளனர்.
இது தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகம் அவதானித்து உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என நோயாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-14-122)

## திருநெல்வேலி ஹற்றன் நஷனல் வங்கிக் கிளையில் பற்றியது தீ

*பெரியளவில் சேதம் இல்லை*

யாழ்.திருநெல்வேலியிலுள்ள ஹற்றன் நஷனல் வங்கிக் கிளையில் நேற்றுமுன்தினம் காலை 'எயார் கண்டிசனில்' (ஏசியில்) ஒழுக்கு ஏற்பட்டு அங்கு புகை மூட்டத்துடன்தீ பரவியதாகத் தெரிவிக் கப்பட்டது. உடனடியாகவேதீ அணைக்கப்பட்டுவிட்டது.
பலாலி வீதியில் அமைந்துள்ள வங்கிக் கட்டடத்தில் இருந்து அதிகாலை வேளை புகை மண்டலம் பரவியதைக் கண்ட வங்கிக் காவலாளி மற்றும் பொது மக்கள் உடனடியாக யாழ்.மாநகர சபை தீயணைக்கும் பிரிவினருக்கு அறிவித்தனர் என்றும் விரைந்து வந்த தீயணைப்புப் பிரிவினர் தீயை அணைத்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
பொதுமக்களின் விழிப்புணர்வினால் உடனடியாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மூலம் தீ அணைக்கப்பட்டதால் பெரும் சேதம் தவிர்க்கப்பட்டுள்ளது. பெரியளவில் சேதம் ஏற்படாததால் நேற்றைய தினம் வங்கியின் வழமையான செயற்பாடுகள் இடம்பெற்றன என்று வங்கிக் கிளையின் முகாமையாளர் தெரிவித்தார். (ஒ-14-7-86)

## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**நாளை**

கார்த்திகை-15 ஞாயிற்றுக்கிழமை 01.12.2013
திதி: திரயோதசி மு.ப.09.49 வரை
நட்சத்திரம்: சுவாதி மு.ப.08.20 வரை
சுபநேரம்: 09.14 - 10.44 வரை
இராகுகாலம்: 04.44 - 06.14 வரை


**மேடம்:** பிறர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வர். வியாபாரத்தில் புதிய முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைகள் தருவார்கள். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.


**இடபம்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். தைரியமாக சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். நட்பு வட்டம் விரிவடையும். தாழ்வு மனப்பான்மை நீங்கும்.


**மிதுனம்:** உறவினர்களின் அன்புத் தொல்லைகள் விலகும். எதிர்பாராத பணவரவு உண்டு. வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.


**கடகம்:** பழைய கடன் தீரும். வெளிவட்டாரத்தில் கௌரவம் கிட்டும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.


**சிங்கம்:** அரசால் அனுகூலம் உண்டு. உங்கள் பலம், பலவீனத்தை உணர்வீர்கள். வியாபார ரீதியாக பிரபலங்களை சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.


**கன்னி:** சில விடயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் இருக்கும். யதார்த்தமாக நீங்கள் பேசுவதைக் கூட சிலர் தவறாகப் புரிந்து கொள்வார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் பனிப்போர் வந்து நீங்கும்.


**துலாம்:** விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர், நண்பர்களுடன் மனத்தாங்கல் வரும். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியால் சங்கடங்கள் ஏற்படும்.


**விருச்சிகம்:** இங்கிதமாகப்பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். பிரபலங்களின் நட்புக் கிடைக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்குமாறு நடந்து கொள்வீர்கள்.


**தனுசு:** எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.


**மகரம்:** புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். நல்ல நண்பர்களைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். மாணவர்கள் பரபரப்புடன் காணப்படுவார்கள்.


**கும்பம்:** அவமானங்கள், மனக்கலக்கங்கள் ஏற்படும். மற்றவர்களைச் சார்ந்து இருக்க வேண்டாம். உங்களின் திறமையை சிலர் குறைத்து மதிப்பிடுவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.


**மீனம்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்திகள் வந்து சேரும். ஆன்மிக நாட்டம் அ[illegible]ரிக்கும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்க[illegible]

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 3 | 2 | 5 | 9 | 6 | |
| | 6 | | | | | | | 8 |
| 9 | | 2 | 7 | | 8 | 3 | 1 | |
| 8 | | | | | | 5 | | |
| 7 | | | 2 | | 4 | | | 1 |
| | | 5 | | | | | | 9 |
| | 7 | 3 | 9 | | 6 | 8 | | 2 |
| 4 | | | | | | | 3 | |
| | 1 | 6 | 4 | 8 | 3 | | | |


*நேற்றைய சுடோக்கின் விடை*

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 4 | 3 | 9 | 1 | 7 | 8 | 5 | 2 |
| 7 | 9 | 2 | 8 | 5 | 6 | 1 | 4 | 3 |
| 1 | 5 | 8 | 4 | 2 | 3 | 7 | 6 | 9 |
| 8 | 3 | 4 | 5 | 9 | 1 | 6 | 2 | 7 |
| 9 | 2 | 7 | 6 | 8 | 4 | 5 | 3 | 1 |
| 5 | 6 | 1 | 7 | 3 | 2 | 4 | 9 | 8 |
| 2 | 1 | 5 | 3 | 6 | 8 | 9 | 7 | 4 |
| 4 | 8 | 9 | 2 | 7 | 5 | 3 | 1 | 6 |
| 3 | 7 | 6 | 1 | 4 | 9 | 2 | 8 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட் டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# பிக்குவின் அட்டகாசத்தைக் கண்டித்து போராட்டம்

## மட்டு. பிரதேச செயலகங்களுக்கு முன்னால்; பொலிஸார், படையினர் பாதுகாப்பு கடமையில்





களுவாஞ்சிக்குடி,நவ.30
மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரையில் அமைந்துள்ள பட்டிப்பளை பிரதேச செயலகத்துக்குள் அத்துமீறி புதன் கிழமை புகுந்த மட்டக்களப்பு மங்கள ராமய விகாராதி பதியான அம்பிட்டியே சுமணரத்னதேரர், பிரதேச செய லரை தகாத வார்த்தைகளால் ஏசியது மட்டுமல்லாமல், அரச சொத்துக்களையும் சேதப்படுத்தியுள்ளார்.
இந்தச் சம்பவத்தை மட்டக்க ளப்பு மாவட்ட அனைத்து பிர தேச செயலக உத்தி யோகத் தர்களும் கண்டித்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை போராட்டத்தி லும் ஈடுபட்டனர்.
மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள பட்டிப்பளை மற்றும் வெல்லாவெளி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உட்பட ஏனைய பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நண்பல் 12 மணி யிலிருந்து பணிப் புறக்கணிப் பில் ஈடுபட்டனர்.
குறித்த பிக்குவைக் கைது செய்யுமாறு கோரி உத்தியோகத்தர்கள் பதாகைகளை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பிரதேச செயலக உத்தியோ கத்தர்கள் 'தேசியக் கொடியைக் காலால் உதைத்த தேரரே, இது தான் உனது தேசப்பற்றா? , கைது செய்; கைது செய்அம்பிட்டிய சுமணரெத்திர தேரரைக் கைது செய், பிக்குவின் அட்ட காசம் ஒழிக, பிரதேச செயல ருக்கே இந்த நிலை என் றால் சாதாரண ஊழியர்களுக்கு என்ன கதி" போன்ற வாசகங்கள் பொறிக் கப்பட்ட பதாகைகளைத் தாங்கிய வாறு கோஷங்களை எழுப்பிய படி ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டனர்.
"எமது பிரதேச செயலரையும் அலுவலக உத்தியோகத்தர்களையும் அவமதித்து பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுத்த பௌத்த பிக்குவை உடனடி யாக சட்டத்தின்முன் நிறுத்தி சட்ட நடவடிக்கை எடுக்கும் வரை வேலை நிறுத்தப் புறக் கணிப்பைத் தொடருவோம்" என்று பட்டிப்பளை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.
பிரதேச செயலர் மற்றும் உத்தியோகத்தர்களிடம் பிக்கு மன்னிப்புக் கேட்கும் வரை எமது வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெறும் என்று அவர்கள் கூறினர்.
இதேவேளை பட்டிப் பளை, வெல்லாவெளி பிரதே செயலகங்களுக்கு முன்னால் பொலிஸாரும் இராணுவத்தினரும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ச-32)

# கிழக்குப் பல்கலையில் மாணவர் ஆர்ப்பாட்டம்

## பீடாதிபதி நீக்கத்தைக் கண்டித்து



மட்டக்களப்பு,நவ.30
கிழக்கு பல்கலைக்கழகத்தின் சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானபீடப் பீடாதிபதியை அங்கிருந்து வெளி யேற்றுவதற்கு சிலர் முயற்சி செய்கின்றனர்.
அதனைத் தடுத்து நிறுத்தி பல்கலைகழகத்தில் கடமையாற்றும் தகமையற்ற கல்விசார் ஊழியர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கு மாறு கோரி மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
இந்த ஆர்ப்பாட்டம் மட்டக்களப்பு, அரசடியில் அமைந்துள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடத்துக்கு முன்பாக வியாழக் கிழமை நடைபெற்றது.
கிழக்கு பல்கலைக்கழகத்தின் சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடத்தின் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த ஆர்ப் பாட்டத் தில் சகல சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடத்தின் மாணவர்களும் கலந்து கொண்டனர்.
இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் "எதிர்ப்புப் போராட்டம் அல்ல உரிமைக்கான விண்ணப்பம், சதா என்னும் பீடை பீடத்தில் எதற்கு,எங்கள் எதிர்காலம் பீடாதிபதிகளின் கைகளில், பீடைகளை ஒழிப்போம்; பீடத்தினைக் காப்போம், தொல்லை கொடுப்பவனே தொலைந்து போ" போன்ற தமிழ், சிங்கள மொழிகளில் எழுதப்பட்ட பல்வேறு பதாகைகளை ஏந்திக் கோஷமிட்டனர். (ச)



கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்கும் நிகழ்வு கல்லூரியில் இடம்பெற்றபோது. கல்லூரி அதிபர் மாணவனொருவனுக்கு தென்னங்கன்றொன்றை வழங்கினார்.

# விகாரை அமைப்பதில் பிக்குகள் முனைப்பு

## தமிழர் பிரதேசத்தை ஆக்கிரமிக்கும் செயல் என்கிறார் கலையரசன்



மட்டக்களப்பு,நவ.30
போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் இன்னமும் சொந்த இடங்களில் மீள்குடியமர்வு செய்யப்படாமல் இருக்கும் நிலையில் தமிழர்களுடைய பூர்வீக நிலங்களை ஆக்கிரமித்து அதில் பெரும்பான்மை இனத்தவர்களுக்கான வீடுகளையும் விகாரைகளையும் கட்டுவதில் பிக்குகள் முனைப்புக்காட்டி வருகின்றனர்.
இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் த.கலையரசன் குற்றம் சாட்டியுள்ளார்.
பிக்கு ஒருவர் பட்டிப்பளை பிரதேச செயலகத்துக்குள் புகுந்து அங்குள்ள உயர் அகாரிகளுடன் முறைகேடான வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தி அங்குள்ள பொருள்களையும் சேதப்படுத்தியமை தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-
மனிதர்களை நல்வழிப்படுத்தி சமூகத்தை ஒற்றுமைப்படுத்த வேண்டிய பிக்கு அதற்கு மாறாக நாட்டிலே இனரீதியான பிரச்சினையை தோற்றுவித்து வருகின்றார்.
நாட்டில் உண்மையான சாந்தியும் சமாதானமும் நிலவுவதாக கூறும் அரசு மக்களால் என்றும் ஏற்றுக்கொள்ள முடியாத சம்பவங்களை கண்டும் காணாமலும் இருப்பதன் மர்மம் என்ன என்று புரியவில்லை.
இந்தப் பிக்கு , தமிழர்களினது போராட்ட வரலாற்றில் உயிரிழந்த அனைவரையும் நினைவு கூரும் தினத்திலேயே குறித்த சம்பவத்தை மேற்கொண்டுள்ளார். அந்த வகையில் இதனை முன்பே திட்டமிட்ட செயற்பாடாகவே பார்க்க வேண்டி இருக்கின்றது.
இவ்வாறான திட்டமிட்ட செயற்பாடுகள் வட,கிழக்கை பொறுத்தவரையில் தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இவற்றின் சமாதானத்தை விரும்பும் அனைத்து இன மக்களும் நம்பிக்கை இழக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவதனை யாராலும் தடுக்கமுடியாது.
நாட்டில் பிக்குகள் சமூகங்களுக்கிடையே ஒற்றுமையை சீர்குலைக்கும் செயற்பாடுகளையே

"-"

**நாட்டில் பிக்குகள் சமூகங்களுக்கிடையே ஒற்றுமையை சீர்குலைக்கும் செயற்பாடுகளையே பிக்குமார் மேற்கொண்டு வருகின்றனர்.**

மேற்கொண்டு வருகின்றனர்.
மதத் தலைவர்கள் என்று தம்மை அடையாளப்படுத்தும் இவர்போன்ற தேரர்கள் இனி வரும் காலங்களிலாவது தமது மதப் போதனைகளை பின்பற்றி நடப்பதன் மூலம் அனைத்து இனங்களையும் ஒற்றுமைப்படுத்த முடியும்.- என்றார். (ச-31)

# கடல் கொந்தளிப்பு; மீன்பிடி பாதிப்பு

மட்டக்களப்பு,நவ.30
மட்டக்களப்பு மாவட்டத்தில் கடுமையான கடல் கொந்தளிப்புக் காணப்படுவதால் மீன்பிடி நடவடிக்கைகள் நேற்று வெள்ளிக் கிழமை பாதிக்கப்பட்டன.
புதிய காத்தான்குடி, ஏத்துக் கால், நாவலடி, பூநொச்சி முனை உட்பட பல இடங்களில் கடல் கொந்தளிப்புக் காணப்படுகிறது என்று மீனவர்கள் தெரிவித்தனர்.
மட்டக்களப்பு, காத்தான்குடிப் பகுதிக் கடலில் புதன்கிழமை அதிகாலை ஏற்பட்ட கடல் கொந்தளிப்பைத் தொடர்ந்து மீனவர் ஒருவர் படுகாயமடைந்தது டன், 5 மீன்பிடிப் படகுகளும் முழுமையாகச் சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பாதிக்கப்பட்ட மக்களின் புள்ளி விவரம் திரட்டு


ஏறாவூர்,நவ.30
போரால் ஏற்பட்ட உயிரிழப்புகள்,சேதவிவரங்கள் தொடர்பில் கணக்கெடுப்பை புள்ளி விவரத் திணைக்களம் மேற்கொள்ளவுள்ளது என்று மட்டக்களப்பு மாவட்டப் புள்ளி விவரவியலாளர் ஏ.அபுல்ஹூதா தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
1983 ஆம் ஆண்டிலிருந்து உள்நாட்டுப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட 2009 மே வரைக்குமான காலப்பகுதி வரை இடம்பெற்ற சகலவிதமான அழிவுகளும் இழப்புக்களும் புள்ளி விவரக் கணக்கெடுப்பில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளன -என்றார். (ச)

# கல்முனை தனியார் பஸ் நிலையம்; 2 கோடி ரூபாவில் நவீனமயமாகும்

அம்பாறை,நவ.30
கல்முனை நகரில் அமைந்துள்ள தனியார் பஸ் நிலையத்தை நவீனமயப்படுத்தும் திட்டத்துக்கு கொரிய நாட்டு கொய்கா நிறுவனம் உதவ முன்வந்துள்ளது.
இதற்காக கொய்கா திட்டத்தின் கீழ் இரண்டு கோடி ரூபா ஒதுக்கீடு செய்வதற்கு கொய்காவின் இலங்கைக்கான பிரதிவதிவிடப் பிரதிநிதி பார்க் சூக் இணக்கம் தெரிவித்துள்ளார்.
ஆசிய மன்றத்தின் வழிகாட்டலில் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் சபையின் முஸ்லிம் காங்கிரஸ் குழுத் தலைவருமான ஏ.எம்.ஜெமீலின் ஒருங்கிணைப்புடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இந்த அபிவிருத்தி திட்டத்துக்கு உதவுவதற்கான இணக்கத்தைத் தெரிவித்துள்ளார்.
இந்தச் சந்திப்பு கொழும்பிலுள்ள கொரிய நாட்டு தூதரகத்தில் அமைந்துள்ள கொய்கா தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்தச்சந்திப்பில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத், மாகாண சபை உறுப்பினர் ஏ.எம். ஜெமீல், கல்முனை மாநகர முதல்வர் சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் ஆகியோர் கலந்து கொண்டு கல்முனை மாநகரப் பிரதேசத்தின் பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர்.
இதன்போது முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை சாதகமாகப் பரிசீலிப்பதாக உறுதியளித்த கொய்காவின் இலங்கைக்கான பிரதி வதிவிடப் பிரதிநிதி, கல் முனை தனியார் பஸ் நிலையத்தை நவீனமயப்படுத்தும் திட்டத்துக்கு இந்த ஆண்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2 கோடி ரூபாவை ஒதுக் கீடு செய்து தருவதாக உறுதியளித்தார்.
இதன் மூலம் பயணிகளினதோ, பஸ் நடத்துநர்களினதோ பயன் பாட்டுக்கு உதவாத ஒன்றாகக் காணப்படுகின்ற கல்முனை தனியார் பஸ் நிலையத்தை சகல வசதிகளும் கொண்டதாக அபிவிருத்தி செய்து 'ஒற்றுமைச் சதுக்கம்' என்ற பெயரில் வியாபார மற்றும் பொழுது போக்கு வசதிகளை ஏற்படுத்தி இரவு நேரத்திலும் கல்முனை நகரை இயங்கச் செய்வதற்கு திட்டமிடப் பட்டுள்ளது என்று கல்முனை மாநகர முதல்வர் நிஸாம் காரியப்பர் தெரிவித்தார். (ச-104)

# 30ஆம் ஆண்டு நினைவு நாளில்

அமரர் எஸ். சந்திரகாந்தன்



தோற்றம் 28.10.1957
மறைவு 07.03.2007



தோற்றம் 04.01.1933
மறைவு 30.11.1983

அமரர் கே.வி. சண்முகநாதன்

அமரர் எஸ். விஜயநாதன்



தோற்றம் 21.03.1968
மறைவு 05.06.2009

குடும்பத்தின் குலவிளக்கே குறையற்ற மகுடமே
காரிருளில் எமைவிட்டு காலனுமை அழைத்தானோ

ஆனந்தம் அற்றுப்போய் ஆண்டுகள் முப்பதிலும்
அடுத்தடுத்து இழப்புக்கள் ஆறாது எம்துயர்கள்

தனயன்மார் இருவரும் தந்தையுடன் வந்தனரோ
தவிப்பினால் எம்கண்ணில் தாரையாய் கண்ணீரையா

கோலங்கள் மாறிடவே கோரவிபத்தில் ஒருவனையும்
கொடியவியாதியில் ஒருவனையும் அழைத்தானோ காலனவன்

பேர்த்தியொருத்தி பின்செல்ல பேரிடிதான் விழுந்ததுவே
பேரெல்லாம் நிலைத்திடவே பேச்செல்லாம் அவள்தானே

மூன்றாந் தலைமுறையில் மூர்க்கமான விபத்ததுவில்
மூத்தபேரனவன் சாலையிலே மூச்சிழந்தான் ஐயகோ

போட்டியிட்டே உங்களுடன் போனாளோ பெரியமருமகள்
போதுமையா துயரங்கள் போய்விடுமோ இவையாவும்

எல்லையற்ற ஏக்கங்கள் எம்மிதயமதை வாட்டுதே
எம்முயிர் உள்ளவரை என்றென்றும் உம்நினைவுகள்...

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

38, பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

(40388) (7.6.3)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

வடமாகாண ஆங்கிலதினப் போட்டிகளில் மொழி மற்றும் நாடகப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும்4ஆம்திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு இராமநாதன் கல்லூரியிலுள்ள அருணாசலம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வராஜாதலைமையில் நடைபெறும் இந்த நிகழ் வில் பிரதம விருந்தினராகக் கல்வி அமைச்சின் ஆங்கிலம் மற்றும் பிறமொழி கல்விப் பிரிவு பணிப்பாளர் திருமதி மகேஸி வீரசூரிய கலந்து கொள்வார். (ந-422)

## மாற்று ஆற்றலுடையோர் தின விழா

யாழ்ப்பாணம், நவ.30

வலிகாமம் கல்வி வலய விசேட கல்வி வள நிலையம் நடத்தும் மாற்று ஆற்றலுடையோர் தின விழா இணுவில் இந்துக் கல்லூரியில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது. வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.சிறுவர் நீதிவான் நீதிமன்ற நீதிபதி கே.ஜீவராணி, சிறப்பு விருந்தினராக சட்டத்தரணி ஏ.எஸ். அற்புதராஜ் ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

# 10 ஆம் ஆண்டுநினைவஞ்சலி



அமரர் சின்னத்தம்பி தம்பிப்பிள்ளை

தோற்றம் :- 03.08.1936
மறைவு :- 22.11.2003
திதி: 30.11.2013

ஆண்டுகள் பத்து ஓடி மறைந்தாலும்
உம் நினைவு எம் மனதில்
என்றென்றும் நிலைத்திருக்கும்

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் பூட்டப்பிள்ளைகள்.

அச்செழு, நீர்வேலி.

# 6 ஆம் ஆண்டு நினைவு

## ஆனந்தராஜா நிதர்ஷன்





பிறப்பு
20.04.1994

இறப்பு
06.12.2007

மலர்முகம் பார்த்து மகிழ்ந்திருந்து
வளர் திறம் நோக்கி விளைந்திருந்து
வளரும் கனவுகளை நினைவில் தேக்கியே
புலரும் பொழுதுகளில்
இணைந்திருந்தோம் உன்னோடு
கனவு நனவாகும் வசந்தம் பொய்த்து
நினைவும் கனவாகிப் போனதே - நிதர்ஷா


வியாபாரிமூலை,
புளியடி பாதி,
பருத்தித்துறை.

ஆறாத் துயர் சுமந்து:
குடும்பத்தினர்

# கண்ணீரில் கரைந்த ஓராண்டு.....

திருமதி

## அரியரட்ணம் சிவகற்பிறகரசி (கற்பு)



மலர்வு
10.09.1957

உதிர்வு
11.12.2012

திதி:- திரயோதசி (30.11.2013)

ஈரவிழிகள் இன்னமும் காயவில்லை
இதயத்தின் வேதனையும் குறையவில்லை
இருந்தும் இவ்வுலகைவிட்டு நீங்கள் அகன்று
இன்றுடன் ஆண்டொன்று ஆனதுவோ!
வையகத்தில் நீங்கள் வாழ்ந்தபோது வாழ்வு
எமக்கு வசந்தமாய் ஆனது
வானுறையும் தெய்வத்துள் கலந்தபோது
வாழ்வே எமக்கு இல்லை என்றாகியது
தரணியில் உமக்கு இணையாருமில்லை
தவிக்கின்றோம் உம் வழிகாட்டல் ஏதுமின்றி.
என்றும் நாம் சிறக்கத் தந்தருள்வாய் ஆசீர்வாதம்
தாயே! நின் பாதம் சரண் அடைவோம்.

**- குடும்பத்தினர்.**

i). A.Veluppillai & Son ஊழியர்கள்.
ii). V.Ariaratnam & Co ஊழியர்கள்.
iii). PERA Engineering Construction ஊழியர்கள்.
iv). ASMC (pvt) Ltd.ஊழியர்கள்.
v). V.A.Management Associates ஊழியர்கள்.

(40187)(2.6.3)

# சிறந்த வீட்டுத் தோட்டத்துக்கு பரிசு வழங்கும் திட்டம் அறிவிப்பு

வடமாகாணத்தின் உள்ள சகல மாவட்டங்களில் இருந்தும் சிறந்த வீட்டுத் தோட்டச் செய்கையாளரைத் தெரிவு செய்து பரிசு வழங்கும் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துமாறு வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இது தொடர்பாக வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

வீட்டுத் தோட்டப் போட்டியானது முதலில் மாவட்ட ரீதியாக விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் நடத்தப்படும். அதில் மூன்று இடங்களை பெறும் வெற்றியாளர்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியான போட்டிக்குச் செல்வர். இதில் முதலிடங்களைப் பெறும் போட்டியாளர்களிடையே மாவட்ட மட்ட மதிப்பீடு நடைபெறும். இறுதியாக மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறும் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப் படவுள்ளனர். இந்தப் போட்டியில் சகல வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களும் பங்கு பற்றலாம். போட்டி பற்றிய மேலதிக விவரங்களை அந்தந்தப்பகுதி விவசாயப் போதனாசிரியர் அலுவலகத்தில் பார்வையிடலாம்.

விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னதாக தமது விண்ணப்பப் படிவங்களை விவசாய போதனாசிரியருக்கு அனுப்பி வைக்கலாம்.

மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் வெற்றியாளர் களுக்கு தைப்பொங்கல் தினத்தையொட்டி நடைபெறும் உழவர் விழாவில் வைத்து பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும் என அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## 3ஆம் ஆண்டு நினைவு தினம்

### டானியல் தேவகுமார் (தேவன்)



மலர்வு
1976 . 10 . 26

உதிர்வு
2010 . 11 . 30

"அஞ்சாதே
நான் உன் பெயரைச்
சொல்லி அழைத்தேன்
நீ எனக்கு உரியவன்"

ஆண்டுகள் மூன்று ஆனதையா
ஆறவில்லை உம் பிரிவுத்துயர்
நீண்ட தூரம் சென்று விட்டாய்
நீங்கவில்லை உன் நினைவு

கச்சாய் றோட்,
சாவகச்சேரி. (33018)(12.3.6.)

மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### மருதப்பு சிவகுரு

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், நில அளவைத் திணைக்களம்)



நவாலியைப் பிறப்பிடமாகவும், மாவிட்டபுரம், வாளித் தொழிற்சாலை வீதியை நிரந்தர வதிவிடமாகவும், சுன்னாகம் கிழக்கு, சுன்னாகத்தைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட மருதப்பு - சிவகுரு 26.11.2013 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மருதப்பு-அன்னமுத்து தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - அன்னலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான முருகேசு, தெய்வானைப்பிள்ளை, வேலாயுதம், சண்முகம், கணேசு மற்றும் தங்கலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்லம்மாவின் அன்புக் கணவரும், சிவனேஸ்வரி, சித்திராதேவி, சிவனேசன் (ஜேர்மனி), சிவானந்தன் (நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை - வவுனியா), சிவகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் சந்திரலேகரன், சீதாரூபி, தயாவாணி (வலிகாமம் வடக்கு பிரதேசசபை - மல்லாகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், மதூசன் (கொமர்ஷல் கிறடிட்), தர்சாந் (T.N.T கொரியர் சேவிஸ்), துளக்ஷிகா (மாணவி - இராமநாதன் கல்லூரி), விதுர்ஷனா, பபித்திரா, வாகீசன், கிசோபன், சங்கீர்த்தன், அபிராம், அகீபன், அனோபன், ஆராதனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.12.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மாவை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"குமாரபவனம்",
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம். (40633) (12)(3.6)

தகவல்:
குடும்பத்தினர்.
0776030024

## சமையற் கூடம் இன்று திறப்பு

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் புதிய சமையற் கூடம் திறப்புவிழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பிரதேச வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் கு.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும்.

விழாவுக்கு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினராக வலி.கிழக்கு பிரதேச செயலர் எம்.பிரதீபனும், கௌரவ விருந்தினராக கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி த.ஜெயசீலனும் கலந்து கொள்கின்றனர். அச்சுவேலி மத்திய கல்லூரியின் கனடா வாழ் பழைய மாணவர்களின் நிதி உதவியில் 20 லட்சம் ரூபா செலவில் புதிய சமையற் கூடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. (ஓ-11)

## கட்டுரைப் போட்டி

ஒளிவிழாவை முன்னிட்டு யாழ். மாநகரசபையின் கலாசாரப் பிரிவினால் பாடசாலை மாணவர்கள் மட்டத்தில் நடத்தப்படும் கட்டுரைப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும். விண்ணப்பித்த மாணவர்கள் தவறாது சமுகமளிக்குமாறு யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோ.பற்குணராசா தெரிவித்துள்ளார். (ந)

## மரண அறிவித்தல்

### திருமதி குணமணி பாலசுந்தரம்

முதலாம் வட்டாரம், மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், இல.20, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குணமணி பாலசுந்தரம் நேற்று (29.11.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான மரகதம், சின்ராசா மற்றும் கனகசுந்தரம், ஜெயலட்சுமி ஆகியோரின் சகோதரியும், காலஞ் சென்ற பாலசுந்தரத்தின் பாசமிகு மனைவியும், ரவிதாஸ் (ஜேர்மனி), சிவதாஸ் (பிரான்ஸ்), ரனதாஸ், பத்மரஞ்சினி ஆகியோரின் அன்புத் தாயும், வஜிதா (ஜேர்மனி), சசி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சுந்தரதாஸ் ஆகியோரின் மாமியும், காலஞ்சென்ற பரஞ்சோதி மற்றும் சிவபாதலிங்கம், திருப்பதி, திலவதி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற கஜமுகன் மற்றும் றஜிதா, நஜிதா, கஜிதா (ஜேர்மனி), அருண்தாஸ், அகில்தாஸ், அருந்தனா (பிரான்ஸ்), விவேகாஜினி, சுஜிதாஸ், விஜிதாஸ் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.11.2013) சனிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 20, வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம். (40704) (10.6.3)

தகவல்:
குடும்பத்தினர்,

# மரண அறிவித்தல்

## கனகராசா முகுந்தன்

## (மதன்)



விசுவமடுவைப் பிறப்பிடமாகவும் பிரான்சைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கனகராசா முகுந்தன் (மதன்) கடந்த 17.11.2013 அன்று பிரான்சில் அகால மரணமாகிவிட்டார்.

அன்னார் கனகராசா-புஸ்பராணி (வாணி விலாஸ்) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம்- இராஜேஸ்வரி தம்பதியரின் மருமகனும், சுதீசின் அன்புக் கணவரும், சஜிதா (விசுவமடு ம.வி), சஞ்சிகா (விசுவமடு ம.வி), சயன் (விசுவநாதர் ஆரம்பபாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அரவிந்தன் (குயிலன், வாணி ரவல்ஸ்), சுகந்தன் (ஜெகன், வாணிவிலாஸ்), காலஞ்சென்ற வசிகரன் (வசி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.12.2013 திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப 1.00 மணியளவில் 12ஆம் கட்டை இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி/13881)(10.6.3)

76/1, விசுவமடு மேற்கு,
விசுவமடு,
077 8380 154,
077 074 3072

தகவல்:
குடும்பத்தினர்.

## பதின்மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் அருணாசலம் ஆறுமுகம்

(முன்னாள் உப அதிபர், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை, சமாதான நீதிவான்)

திதி: ஏகாதசி

மண்ணில் 17★09★1921

விண்ணில் 22★11★2000

அன்பின் தெய்வமாய் பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளி விளக்காய் வாழ்ந்து எம்மை
விட்டுப் பிரிந்து ஆண்டுகள் பதின்மூன்று
சென்றாலும் உங்கள் நினைவுகள்
என்றும் எம் மனதை விட்டு நீங்காதையா

"ஜெயபதி"
தாமோதரம் வீதி,
சாவகச்சேரி. (சி/13865)(3.6.4)

ஜெயபதி குடும்பத்தினர்.

## இணையவழி கருத்தரங்கில் சிவானந்தன்

அமெரிக்க பௌதிகவியல் கழகம் மாதாந்தம் நடத்திவரும் இணையவழி பௌதிகவியற் கருத்தரங்கத் தொடரில் எதிர்வரும் 3ஆம் திகதி இலங்கை நேரப்படி பிற்பகல் 4.30 - 5.30 மணி வரை இலங்கையரான பேராசிரியர் சிவலிங்கம் சிவானந்தன் கலந்து கொள்ளவுள்ளார்.

பௌதிகவியற்றுறை ஆய்வுகளுக்கான வர்த்தக வாய்ப்புக்கள், மற்றும் வர்த்தக மயப்படுத்தத் தக்க ஆய்வுகளை முன்னெடுப்பது தொடர்பான விளக்கங்களை மையமாகக் கொண்டு இந்த இணைய வழிக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது. அத்துடன் பௌதிகவியற்றுறை ஆய்வாளர்களின் சந்தேகங்களுக்கு விடையளிப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியற்றுறையின் பௌதிகக் கழகம் இந்த இணையவழிக் கருத்தரங்கில் ஆர்வமுடையவர்கள் நேரடியாகக் கலந்து கொள்ளக்கூடிய ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றது.

இணையத்தில் ஒளிபரப்பப்படும் கருத்தரங்கில் பங்கு பற்றவிரும்புபவர்கள் http://www.aps.org/careers/guidance/webinars/commercialize.cfm என்ற இணைய முகவரியில் பதிவு செய்வதன் மூலம் நேரடியாகவோ அல்லது யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியற்றுறை விரிவுரை மண்டபம், கருத்தரங்கு மண்டபம் ஆகிய இரு இடங்களில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள நேரடி ஒளிபரப்பின் மூலமோ பங்கு பற்ற முடியும்.

அண்மைக்காலமாக உலகின் மிகச் சிறந்த பௌதிகவியலாளர்களுள் ஒருவராக மிளிரும் இலங்கையரான பேராசிரியர் சிவானந்தன் மற்றும் கலாநிதி யூனிஸ் பெரேரா ஆகியோர் இந்த இணையவழிக் கருத்தரங்கின் மூலமாக பௌதிகவியற்றுறையில் தாம் பெற்ற அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வார்கள். (ந)

## கண்ணீர் அஞ்சலி

கடந்த 28.11.2013 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது சபையின் சக ஊழியர்
திருமதி சித்திரா இராசலிங்கம் அவர்களின் அன்புத்தாய்

திருமதி பத்மாவதி சீவரத்தினம்

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம், வலி.வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை (மல்லாகம்) (சி13870)(12.3.6)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி





சிவராசா சியாமளா

உதிப்பு 08.10.1979

மறைவு 14.12.2009

அன்பின் சியாவே!
எம்மைப் பிரிந்து நான்காண்டுகள் போயும்
நாளிலும் பொழுதிலும் கண்ணீர்தான் சொந்தமாகிறது
அன்று எம் அருகில் நீ நின்ற பொழுது
கண்ணீர் கூட சுகமானது
ஏன் என்றால் துடைக்க நீ இருந்தாய்
இன்று சிரிப்புக் கூட வேதனையாகிறது
ஏன் நீ இல்லாத காரணம்
நாம் உம்மில் அன்பு வைத்தது போல்
இறைவனும் அன்பு வைத்து விட்டான் போலும்
அதனால் தான் எங்களிடம் இருந்து உம்மைப்
பிரித்து எங்களிடம் வந்து சேராத
தூரத்தில் கொண்டு சென்று விட்டான்.

இல.35. மகாத்மா வீதி.
நெல்லியடி. (C13864)(12.3.6)

சிவராசா குடும்பத்தினர்.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 23 + 08 + 1934

உதிர்வு 24 + 11 + 2011

அமரர் நல்லதம்பி செல்லத்துரை

(முன்னாள் உரிமையாளர் கமலா ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்)


திதி: 01.12.2013

ஆண்டுகள் இரண்டு கரைந்து போனாலும்
எம்முடன் வாழ்ந்த நாள்களை நினைத்து
உங்கள் நினைவுகளைச் சுமந்து வாழும்
எங்கள் கண்ணீர் அஞ்சலி தினமும் உங்கள்
திருப்பாத மலர்களுக்கு
சமர்ப்பணம்....

"செல்வமஹால்",
இல.09,சப்பல் வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர். (40499)(2.6.3)

## நெஞ்சை நெருடும் நினைவுகளோடு

நிலை தளர்ந்த பதின்மூன்றில் வழி நெகிழ்ந்த பதினேழில்





கருணைக்கடலாய் பண்பின் இருப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
ஊர் போற்றும் உத்தமராய்
பணிவுள்ளம் கொண்டு வாழ்ந்தீர்களே!
கவிதைக்கு அழகு சேர்க்கும்
காவிய நாயகர்கள் நீங்கள்
பாவிகள் நாம் பாதியிலே உமையிழந்து
இப் பாரினிலே வாழ்வதுவோ - நீவீர்
செய்த அறப்பணியை யாமும் தொடர்வதற்கோ
கதி கலங்கிய வேளை செவிதனில்
உம் ஓசை கேட்போமே
யாருண்டு எமக்கினி நின்பால் துணை நிற்க
உங்கள் ஆத்மா சாந்திபெற அன்னை வீரமாகாளியின்
திருப்பாதங்கள் பணிந்து பிரார்த்திப்போமாக.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

- குடும்பத்தினர்.

மண்ணுலகில் 03.08.1942

விண்ணுலகில் 30.11.2000

அமரர் இராசு செல்வரட்ணம்

(அம்பாள் மரக்காலை உரிமையாளர்)

புவித்தாய் 19.10.1976

மறைத்தாய் 21.08.1996

செல்வி செல்வரட்ணம் ரஜனி

(யாழ்.இந்து மகளிர் கல்லூரி,
A/L 1995 வர்த்தகப் பிரிவு மாணவி)

"செல்வபதி", 256, நாவலர் வீதி, இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம்.

(C/13878)(2.6.3)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி சோ. ஏகாம்பரநாதன்
Best Wishes சிறந்த ஆசிரியருக்கான
குருபிரதீபா பிரபா
விருது பெற்றதனையிட்டு மகிழ்வுறுவதுடன் அவர் மேலும் பல சிறப்புகள் பெற்று உயர்வு பெற வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்தியகல்லூரி

(33019)(12.2.6)

## இல்லத்தரசிகளே!

டிசெம்பர் 1ஆம் திகதி வெளிவரவுள்ள

அரசியல், பாலியல் கலக்காத ஒரு பரிணாமப் படைப்பு

# ஒளி அரசி இல்

- பெண் எனும் தெய்வம்
- இல்லத்தரசியின் வெற்றி
- நட்சத்திர இல்லத்தரசி
- இம்மாத முஸ்லிம் மங்கை
- குழந்தை பராமரிப்பில் உணவூட்டலின் பங்கு
- பெண் பிள்ளைகள் மீதான வன்முறையை குறைக்க வழியுண்டு
- தந்தை ஒருவர் குழந்தை மீது செலுத்தவேண்டிய கடப்பாடுகள்
- ஆசிரியரின் மனதை புண்படுத்திய மாணவன்
- தாய் - ஒரு விளக்கம்
- தரமான கணவருக்காக 6ஆம் மாடி வரை சென்ற பெண்
- அகத்தியர் வாழ்வு காட்டும் பாடம்
- **Face Book** - வியக்க வைக்கும் தகவல்கள்
- காதலி தேடி கொடுத்த மனைவி
- ஆட்டிப்படைக்கும் ஆட்ட நிர்ணயம்
- அம்முவின் கேள்வி - பதில்
- சிரிப்பு ஒரு மருந்து
- மருத்துவ ஆலோசனைகள்
- இராசி பலன்
- சிறுவர் விருந்து
- நேரடியான கல்விசார் விடயங்கள் (5, O/L, A/L)

**ரூபா 15,000 பெறுமதியான பரிசுகளைப்பெற்றுக்கொள்ள அறிவியல் ரீதியான 5 போட்டிகள்**

மழலைகளுக்கான வர்ணம் தீட்டும் போட்டி, இல்லத்தரசிகளுக்கான கட்டுரைப் போட்டி, ஏனைய குடும்ப அங்கத்தவர்களுக்கான கவிதைப் போட்டி, குறுக்கெழுத்துப் போட்டி, விளையாட்டுப் புதிர் போட்டி.

**பிரதிகளுக்கு இப்போதே அருகில் உள்ள முகவர்களிடம் பதிவு செய்யுங்கள்.**

விநியோகப் பிரிவு: **011 5737593 / 071 8628379**

## கேள்வி மனுக்கோரல்
### சிற்றுண்டிச் சாலை/துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம்

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அமைந்துள்ள சிற்றுண்டிச் சாலையையும் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையத்தையும் 2014 ஆம் ஆண்டு நடத்துவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

மீளளிப்புச் செய்யப்படாத ரூபா 1000/= (ஆயிரம்) கேள்விக் கட்டணமாக செலுத்துவதன் மூலம் 01.12.2013 முதல் விண்ணப்பப் படிவங்களை ஆதார வைத்தியசாலை பருத்தித்துறையில் நோயாளர் நலன்புரி சங்க பொருளாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி (15.12.2013) நண்பகல் 12.00 மணி வரை முத்திரையிடப்பட்ட விண்ணப்பங்கள் நேரடியாக காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினமே பி.ப 3.30 மணிக்கு விண்ணப்பங்கள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்வி மனுதாரர்கள் மட்டும் கலந்துகொள்ளலாம்.

தலைவர்,
மந்திகை நோயாளர் நலன்புரி சங்கம்.

ஆதார வைத்தியசாலை,
பருத்தித்துறை.

(சி/13879) (10.8.3)

## யாழ். இந்து ஆரம்ப பாடசாலை பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.30

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணி முதல் இரு அமர்வுகளாக குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் நா. மகேந்திரராசா தலைமையில் இடம்பெறும் முதல் அமர்வில் பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலை சத்திர சிகிச்சை நிபுணர் சி. இராஜேந்திரா கலந்து கொள்ளவுள்ளார்.

பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அமர்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் க.க. அருள்வேல் கலந்து கொள்ளவுள்ளார்.

பரிசில்களை திருமதி ஸ்ரீ ரமணி அருள்வேல் வழங்கவுள்ளார். (ஒ-400)

## கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் மூதாட்டியின் சடலம்

யாழ்ப்பாணம், நவ.30

கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த அக்கராயன், கொங்காதரன் குடியிருப்பைச் சேர்ந்த திருமதி மணி சுந்தரி (வயது -70) என்பவர் கடந்த 27 ஆம் திகதி உயிரிழந்து விட்டார்.

கிளிநொச்சி வைத்திய சாலை பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளது. சடலத்தை உறவினர்கள் அடையாளம் காட்டி எடுத்துச் செல்லுமாறு மாவட்ட வைத்தியசாலை அத்தியட்சகர் கேட்டுள்ளார். (ஒ-400)


## இன்று ஒளிவிழா

தென்மராட்சி, நவ. 30

சாவகச்சேரி அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் தூய தோமஸ் முன்பள்ளி சிறார்களின் ஒளி விழா இன்று சனிக் கிழமை பி.ப. 3.00 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் இடம்பெறும். (ஒ-9)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

*"Death leaves a heartache no one can heal,*
*Love leaves a memory no one can steal."*



*We mourn the demise of*
## Mr. R. I. T. Alles
*Father of the Gateway Family*

*Chairman of the Gateway Group*

Gateway College · GATEWAY graduate school · GATEWAY · GATEWAY · CfiCI · GATEWAY Language Centre · GATEWAY · GATEWAY · GATEWAY

*The remains of Mr. R I T Alles, lie at his residence No. 345/33 Kuruppu Lane, (off Kuruppu Road), Colombo 8. Cortege will leave for D S Senanayake College on Monday 2nd December and will be there from 9.00 am till 12 noon and thereafter to Gateway College, Rajagiriya from 1.00 pm to 4.00 pm. The funeral procession will leave Gateway College at 4.00 pm for cremation at 5.00 pm at General Cemetery Kanatte.*

## மரண அறிவித்தல்

### உயர்திரு. சோமசுந்தரம் கனகசபாபதி

(சின்னமணி- கல்வியங்காடு, யாழ்ப்பாணம்)

(முன்னாள் உரிமையாளர்/ ஸ்ரீ சபா ஸ்ரோர் ரெக்ஸ்ரைல்ஸ் - மாணிக்கம் ரேடர்ஸ்- இந்தியா)



யாழ்ப்பாணம் - திருநெல்வேலி கிழக்கு, பூதவராயர் வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும், இந்தியா வேலூர் அணைக்கட்டைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் கனகசபாபதி நேற்று முன்தினம் (28.11.2013) வியாழக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்- மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிஐயா (வெள்ளைப்பிள்ளையார் குருக்கள்)- மாணிக்கம் தம்பதியரின் ஆகியோரின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் (இந்தியா) பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான புனிதவதி, மனோன்மணி, மங்கையர்க்கரசி மற்றும் நாகம்மா, நடராசா, தேவதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, மயில்வாகனம், சின்னத்துரை, நடராசா மற்றும் மனோன்மணி, அழகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும், சபாநாயகி (இந்தியா), சபாலினி (இலங்கை), சற்குருநாதன் (பிரான்ஸ்), சபாநந்தினி (கனடா), காலஞ்சென்ற சபாநாதன், லம்போதரன் (இந்தியா), சபாராஜன் (இலங்கை), தனுஷன் (இலங்கை) ஆகியோரின் அன்புத் தந்தையும், சரவணப்பிரபாலன் (இந்தியா), சசிகரன் (இலங்கை), முருகவேள் (கனடா), ஞானகீதா (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனும், கிருபாகரன் (இந்தியா), சசிகரன் (இந்தியா), அபிநயா (இந்தியா), ஆதித்தியன் (இலங்கை), சேந்தன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி **புவனேஸ்வரி**
(மனைவி - இந்தியா)

தொ.பே. +919 442 357 762,
+919 976 535 926

(சி.14209) (45.3.6)

## வாழ்த்து



எமது வைத்தியசாலையின்
கண் சத்திரசிகிச்சை
நிபுணராகக் கடமையாற்றும்
வைத்திய கலாநிதி

**மு.மலரவன்**

அவர்களுக்கு வடமாகாணத்தில் இன மத பேதமின்றி மருத்துவ சேவையாற்றியமைக்காக அகில இன நல்லுறவு ஒன்றியத்தினால் சமாதான நல்லுறவுக்கான அதியுயர் தேசிய விருது (சாமசிறி தேசமானிய) 23.11.2013 அன்று வழங்கப்பட்டமையிட்டு அவரை மனமார வாழ்த்துவதுடன், அவர் மேன்மேலும் சகல சிறப்புகளும் பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

பணிப்பாளரும்,
உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்,
யாழ் போதனா வைத்தியசாலை.

(C/13874)(10.14)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
01.11.1925

மறைவு
11.12.2012

அமரர் அன்னம்மா
இராமலிங்கம்

ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறவில்லை உங்கள் நினைவுகள்
என்றும் எம்மை விட்டகலாத தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

45/1, நாயன்மார் வீதி,
நல்லூர்.

(40712)(10.14)



## மரண அறிவித்தல்

### திருமதி சின்னம்மா நாகமுத்து



கட்டுவன் தண்ணீர் தாழ்வைப் பிறப்பிடமாகவும் ஏழாலை கிழக்கை (சந்தி) வசிப்பிடமாகவும் கொண்ட சின்னம்மா நாகமுத்து நேற்று (29.11. 2013) வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு நாகமுத்துவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சற்குணநாதன் மற்றும் சின்னத்தம்பி (பிரான்ஸ்), புனிதவதி, புவனேஸ்வரி, புஸ்பராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், சிவமணி, பவாநிதி (பிரான்ஸ்), ஞானரஞ்சன் (வர்த்தகர்-வவா), மனோகரன் (ரெயில்வே), சண்முகராசா (ஜேர்மனி) ஆகியோரின் மாமியும், கிரிஷாந் (பிரான்ஸ்), கிரிஷாந்தி (பிரான்ஸ்), கஜன் (பிரான்ஸ்), ஜங்கரன் (பிரான்ஸ்), ஆதவன், அபினாஷா (பிரான்ஸ்), அனோஜன்(பிரான்ஸ்), அபிராஜ் (பிரான்ஸ்), சஜித்தா (பிரான்ஸ்), சதீபன், சஜித்தனன் (பிரான்ஸ்), மதுரா (லண்டன்), தாரகா (லண்டன்), கார்த்திக் (பிரான்ஸ்), மேனன் (அமெரிக்கா), கவிதா, பர்மிளா (ஜேர்மனி), சுகன்ஜா (ஜேர்மனி), அக்சலா (ஜேர்மனி), சிவசோதி (லண்டன்), பிரதீபன் (லண்டன்), சதீஸ் (பிரான்ஸ்), சமந்தா (பிரான்ஸ்), கோபு (பிரான்ஸ்), தினேஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சாயிசியாம் (லண்டன்), சாயிவைஷா (லண்டன்), தீபிகா (லண்டன்), அஸ்விகா (லண்டன்), கிருத்திகா (லண்டன்), ஜென்சிகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.12.2013) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனத்துக்காக ஏழாலை ஒசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

தகவல்: குடும்பத்தினர்.
075 0713061, 021 2059338



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னையின்
மடியில்
08.01.1932

ஆண்டவன்
அடியில்
31.10.2013



திருமதி
சரஸ்வதி இராசையா

என்றும் பௌர்ணமியாய் - பிள்ளைகள்
வாழ்வில் ஒளியேற்றிய அன்னையே - இன்று
வானகத்தில் தேவர்கள் வணங்கும் இறையடியில்
நீங்கள் என்றும் சங்கமித்திருக்க வேண்டுகின்றோம்.

*கிளி/கனகபுரம் மகாவித்தியாலய ஆசிரியர் திரு. கி. நாகநாதன் அவர்களின் அன்புத்தாயாரின் 31 ஆம் நாள் நினைவு நாளில் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

பாடசாலை சமூகம்
கிளி/கனகபுரம் மகாவித்தியாலயம் கிளிநொச்சி


# தொழிற்சாலைகளுக்கு சுற்றாடல் அதிகாரி

அடுத்த ஆண்டிலிருந்து நாட்டிலுள்ள அனைத்துப் பிரதான தொழிற்சாலைகளுக்கும் சுற்றாடல் அதிகாரியொருவரை நியமிப்பதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபை தீர் மானித்துள்ளது.

சுற்றாடலைப் பாதுகாக்கும் நோக்கை முதன்மைப்படுத்தி இந்தத் தீர்மானம் மேற் கொள்ளப்பட்டுள்ளது என்று மத்திய சுற்றாடல் அதிகார சபைப் பணிப்பாளர் சாரங்க அழகப் பெரும தெரிவித்தார்.

தொழிற்சாலைகளை நடத்தி வருவோரின் அறியாமை காரணமாக சுற்றாடலுக்கு கேடு விளைவிக்கும் செயற்பாடுகளை அவதானிக்க முடிகிறது. அதனால் அவர்களுக்கு அறிவூட்டும் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது- என்று அவர் கூறினார் (ச-22)

## பல்கலைக்கு தெரிவாகாத மாணவர் குறித்து கவனம்

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களிலும் 'ஏ' பெறு பேறுகளுடன் சித்தியடையடைந்தும், மாணவர்களுக்கு பல் கலைக்கழக அனுமதி கிடைக் காமை தொடர்பில் பல்கலைக் கழமானியங்கள் ஆணைக் குழு கவனம் செலுத்தியுள்ளது.

இந்த விடயம் குறித்து பரீட்சைகள் திணைக்களத்துடன் கலந்துரையாடப்படும் என்று பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஷனிகா ஹிரிம்புரகமகே தெரிவித்தார். வர்த்தகப் பிரிவில் நல்ல பெறுபேறு பெற்ற பெரும்பாலான மாணவர்களுக்கு பல்கலைக் கழகத்துக்கான அனுமதி கிடைக்கவில்லை என்று அவர் குறிப்பிட்டார். (ச)

## வருதுகளுக்கு விண்ணப்பிக்குக

ஈழம் மற்றும் புலம்பெயர் படைப் பாளிகளை ஊக்குவிக்கும் நோக்குடன் பேனா பதிப்பகத்தால் வழங்கப்படவுள்ள கலை இலக்கிய விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2013 ஆம் ஆண்டு வெளிவந்த சிறுகதை, கவிதை, நாவல், சிறுவர் இலக்கியம் போன்ற சிறந்த நூல்களுக்கும் மற்றும் உயர் கலை இலக்கிய விருது என்பன வழங்கப்பட வுள்ளன. ஆர்வமுடைய படைப்பாளிகள் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னதாக போட்டிக்குரிய இரண்டு நூல் பிரதிகளை பேனா கலை இலக் கிய விருது-2013, பணிப்பா ளர், பேனா பதிப்பகம், 92/4 உமர் அலி வீதி, முகாறப் நகர், கிண் ணியா-03 எனும் முக வரிக்கு அனுப்பி வைக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-14-40)

## முன்பள்ளிக் கலை விழா

இணுவில் பொதுநூலக முன்பள்ளி மாணவர்களின் கலை விழா நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை நூலக கலாசார மண்டபத்தில் மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டச் செயலக முன்பிள்ளைப் பருவ இணைப்பாளர் ஆர்.அமலனும், சிறப்பு விருந்தினர்களாக உடுவில் பிரதேச செயலகதிறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்.சி.பீஸ்மன் கிருபா சாரதி பயிற்சி கல்லூரி உரிமையாளர் .அ.கிருபாகரன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக கு.கனகரத் தினம், த.பராபரம், த.சோமசுந்தரம் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ங-400)


## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.



## விற்பனை பிரதிநிதி தேவை

வடமாகாணத்தில் இரண்டு வருடங்களுக்கு குறையாத விற்பனை அனுபவம் நிறைந்த (உணவு உற்பத்தி பொருள்கள் FMCG ) விற்பனை பிரதிநிதி தேவை.
வயது : 26 - 35
சம்பளம் : கவர்ச்சிகரமான சம்பளம் கொமிஸன் போனஸ் வழங்கப்படும்
தொ.பே : 077 9059548



## மரண அறிவித்தல்

### திருமதி நாகேஸ்வரி இராசையா



மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகேஸ்வரி இராசையா நேற்று (29.11.2013) வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராசையாவின் அன்பு மனைவியும் சச்சிதானந்தன் (ஜேர்மனி), கருணாகரன் (ஜேர்மனி), ரோகினி, நித்தியானந்தன் (ஆசிரியர்-யா/சாவ.இந்து கல்லூரி), அருளானந்தம் (கனடா), சுபாதினி, (விரிவுரையாளர்-யா/தேசிய கல்வியியற் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயும், குமாரிலதா, நந்தினி, சிவராசா, நந்தரூபி (ஆசிரியை-யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி), கிருபாலினி, காலஞ்சென்ற தயாபரன் ஆகியோரின் மாமியும், கருணாகரன் (ஆசிரியர், பூநகரி ஸ்ரீவிக்கினேஸ்வரா வித்தியாலயம்), பிரியா, ரதீஷ், தீபகன், பிரகாஷ், அஸ்வினி, பிரதீப், சங்கவி, சாரங்கா, சங்கீதா, சகானா, சௌமியா ஆகியோரின் பேர்த்தியும், ஆஜிஷன், அபிஷன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30,11.2013) சனிக் கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை மேற்கு, மீசாலை.
077 711 2098

(சி/13877)(10.14)

தகவல்:
குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### திருமதி நல்லம்மா தர்மலிங்கம்



புதிய செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா தர்மலிங்கம் 28.11.2013 வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்து தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை-இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னம்மா மற்றும் தங்கலட்சுமி, தனபாலசிங்கம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற மார்க்கண்டுவின் அன்பு மைத்துனியும், கேதீஸ்வரன் (கனடா), விவேகானந்தன் (கிரிஷா இரும்பகம், நிரோ பார்மசி), யோகநாதன் (யோகா மில்), காலஞ் சென்ற திலகேஸ்வரி மற்றும் சுந்தரலிங்கம் (கனடா), காலஞ்சென்ற கணேசலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயும்,அருள்மொழி, சுபலட்சுமி, றஞ்சினி, இரத்தினசபாபதி, தாரணி ஆகியோரின் அன்பு மாமியும், நிரோசன், சாஜிசன், அனுஷன், கிரிஷா, துஷாரா, நிரோஷா, தர்சனா, யக்சன் (ஆஸ்திரேலியா), பிரசாந், விதுஷனா, றாஜீவன், தனுசன், தீபிகா, பிரணவன், துவாரகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.12.2013) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதிய செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு.
077 220 8170

(40704)
(10.8.3)

தகவல்:
குடும்பத்தினர்.



## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியர் **இராசையா நித்தியானந்தன்** அவர்களின் பாசமிகு தாய்

**திருமதி நாகேஸ்வரி இராசையா**

அவர்கள் 29.11.2013 வெள்ளிக் கிழமை இறைபதமடைந்ததையிட்டு அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் சகோதரத்துவம்,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

(33020)
(10.8)



## துயர் பகிர்கின்றோம்



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நடனத்துறை விரிவுரையாளர் **திருமதி சுபாதினி தயாபரன்** அவர்களின் பாசமிகு தாய்

**திருமதி நாகேஸ்வரி இராசையா**

அவர்கள் 29.11.2013 வெள்ளிக் கிழமை காலமானதையிட்டு மீளாத் துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்ப உறவுகளின் துயரோடு நாமும் இணைகின்றோம். அன் னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.

(40706)
(10.6)



## காணி விற்பனைக்கு

பெரியவிளான் இளவாலையில் பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட பத்துப் பரப்புக் காணி உடனடி விற்பனைக்கு.

077 8689 500

(40647)
(10.8.3)

# மாவீரரை அஞ்சலித்தோர் பழிவாங்கப்படக் கூடாது

## புலிகளை நினைவுகூர தமிழ் மக்களுக்கு உரிமை உண்டு என்கிறது கூட்டமைப்பு

கொழும்பு, நவ 30

விடுதலைப் புலிகள், இராணுவத்தினர், பொதுமக்கள் என எவர் உயிரிழந்தாலும் அவர்களை நினைவு கூரும் உரிமை அந்தந்த மக்களுக்கு இருக்கிறது. இந்நிலையில், மாவீரர் தினத்தை அனுஷ்டித்த மக்கள் பழி வாங்கப்படுகின்றனர். இதை ஏற்றுக் கொள்ள முடியுமா? இந்தப் பழி வாங்கல் நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் யார்? இதற்கு அரசால் பதிலளிக்க முடியுமா?"

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கேள்விகளை எழுப்பினார்.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது. இதன்போது இடம்பெற்ற வரவு - செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான ஏழாம் நாள் விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித் தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 26ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் நாடாளுமன்றில் உரையாற்றியிருந்தார். அதனைத் தொடர்ந்து இரண்டு நாள்கள் இங்கு உரையாற்றியவர்கள் தமது கருத்துகளை முன் வைத்திருந்தனர். அவர்களின் உரைகளில் ஒரு பழிவாங்கல், ஆக்ரோஷத் தன்மையை நான் உணர்ந்தேன். தமிழ்க் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உரையை எவரும்தடுக்கவில்லை. ஆனால், நேற்று (நேற்று முன்தினம்) கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மிகவும் இத மான உரையை நிகழ்த்தினார். பெரும்பான்மைச் சமூகத்துக்கு வேண்டுகோள் விடுத்தார். ஆனால், அவரின் அந்த மிதவாதப் போக்குடைய உரைக்கு இடையூறுகள் விளைவிக்கப்பட்டன. இது எமக்குக் கவலையளிக்கிறது.

நல்லிணக்கம் வேண்டும் எனக் கேட்போரிடம் ஏன் ஆக்ரோஷம் கொள் கிறீர்கள்? சிறுபான்மையினர் சபையில் இவ்வாறு நடத்தப்படுகின்றனர் என் றால், நாட்டில் எவ்வாறு நடத்தப்படுவர்?

வரவு - செலவுத்திட்ட விவாதம் இடம்பெறும்போதுதான் மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. தமது இறந்த உறவுகளை ஞாபகப்படுத்தும் உரிமை மக்களுக்கு உண்டு. உயிரிழந்தவர்கள் விடுதலைப் புலிகளோ, இராணுவத்தினரோ அல்லது பொதுமக்களோ எவராக இருந்தாலும் அவர்களை நினைவுகூரும் உரிமை அந்தந்த மக்க ளுக்கு இருக்கி றது. நாகரிகம் அடைந்த நாடு மக்களது உரிமைகளை மதிக்க வேண்டும் - என்றார். (த-சி)

# ஆடு, மாடுகளைப் போன்று நடந்தனர் காணாமற் போனோரின் உறவினர்கள்

## பிரதிப் பொலிஸ் மா அதிபர் கூறுகின்றார்

யாழ்ப்பாணம். நவ. 30

பிரிட்டன் பிரதமர் டேவிற் கமரூன் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது யாழ். பொது நூலகத்துக்கு முன்னால் கூடிய காணாமற் போனோரின் உற வுகள் ஆடு. மாடுகள் போன்று செயற்பட்டனர். இதனாலேயே பிரிட்டன் பிரதமரைச் சந்திக்க விடாமல் அவர்களைப் பொலிஸார் தடுத்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், முதலமைச்சர் ஆகியோர் மூலம் உரிய ஏற்பாடுகளை மேற்கொண்டு அவர்கள் பிரிட்டன் பிரதமரைச் சந்தித்திருக்க முடியும்.

இவ்வாறு தெரிவித்தார் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எம்.எம் ஜிவ்றி.

> “நாடாளுமன்ற உறுப்பினர் கள், முதலமைச்சர் ஆகியோர் மூலம் உரிய ஏற்பாடுகளை மேற்கொண்டு அவர்கள் பிரிட் டன் பிரதமரைச் சந்தித்திருக்க முடியும்.

நேற்று யாழ். பொலிஸ் நிலையத்தில் நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

காணாமற்போனோரின் உறவினர்கள் தமது உறவுகளை மீட்டுத் தர பிரிட்டன் பிரதமரிடம் நடவடிக்கை எடுக்குமாறு கோரி கடந்த 15 ஆம் திகதி யாழ். நல்லூர் கோயில் முன்பாகவும் யாழ். பொது நூலகத்துக்கு முன்பாகவும் போராட்டத்தில் ஈடுபட்டனர். பிரதமர் டேவிற் கமரூன் யாழ். பொது நூலகத்தில் முதலமைச்சரைச் சந்தித்துக் கொண்டிருந்த போது இந்தப் போராட்டம் நடந்தது. போராட்டக்காரர்கள் பொது நூலகம் நோக்கி நகர்ந்த பொழுது பொலிஸாரினால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

இது தொடர்பில் நேற்றுச் செய்தியாளர்கள் பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் துரையப்பா விளையாட்டரங்குக்கு முன்பாக காணாமற் போனோரின் உறவினர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதன் போது அங்கு வெளிநாட்டு அதிகாரி ஒருவர் சென்ற போது அவர்கள் ஆடு. மாடுகள் போன்று குழப்பம் விளைவிக்கும் வகையில் செயற்பட்டுள்ளனர். இதனாலேயே போராட்டக்காரரைத் தடுத்து நிறுத்தினோம்.

பிரிட்டன் பிரதமர் டேவிற் கமரூன் சுன்னாகத்தில் உள்ள நலன்புரி முகாமுக்குச் சென்றிருந்த போது அங்குள்ளவர்கள் குழப்பம் விளைவிக்காமல் அமைதியான முறையில் கலந்துரையாடியிருந்தனர். ஆனால் கவனவீர்ப்பில் ஈடுபட்டவர்களே மோசமாகச் செயற்பட்டனர்- என்றார். (த-4)

# நியமனம் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.30

வடக்கு மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்குரிய முகாமைத்துவ உதவியாளர், மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான நிய மனங்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். தேசியகல்வியியற் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இப் பதவிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டோர் அன்றைய தினம் உரிய நேரத்துக்கு சமுகமளிக்குமாறு வடக்கு மாகாண அரச சேவைகள் பட்டதாரிச் சங்கச் செயலாளர் எஸ். மயூரன் அறிவித்துள்ளார்.

மேற்படி நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு முன்னர் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்ட போதும் தவிர்க்க முடியாத காரணத்தினால் அது கல்வியியற் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளது.

(த-288-400)

# பிக்கு நடமாடியதால் பதற்றம் மக்கள் ரயர் எரித்து எதிர்ப்பு

## *பட்டிப்பளையில் தொடர்ந்தது போராட்டம்*

மட்டக்களப்பு, பட்டிப்பளைப் பிரதேச செயலரை அச்சுறுத்தியதாகக் கூறப்படும் பிக்குவான அம்பிட்டிய சுமண ரத்னதேரர் நேற்று பிரதேச செயலக வீதியில் நடமாடியதால் பிரதேச செயலகம் அமைந்துள்ள பிரதான வீதியில் பதற்றமான நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து பிரதேச பொது மக்கள் ஒன்றுகூடி பிக்குவுக்கு எதிராக தமது எதிர்ப்பைத் தெரிவித்து வீதியில் ரயர்களைப் போட்டு எரித்துள்ளனர். இந்தச் சம்பவத்தையடுத்து அவ்விடத்துக்குச் சென்ற கொக்கட்டிச் சோலைப் பொலிஸார் எரிந்து கொண்டிருந்த ரயர்களை அகற்றியுள்ளனர்.

எனினும், குறித்த பிக்குவை மட்டக்களப்பில் அமைந்துள்ள அவரது விகாரைக்கு பொலிஸார் பாதுகாப்பாக அனுப்பி வைத்துள்ளனர் என்று பிரதேச மக்கள் தெரிவித் தனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மக்களையும்

இது குறித்து நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவித்ததாவது:

போராட்டம் நடத்தியவர்கள் மீதோ, அருட் தந்தையர்கள் மீதோ பொலிஸார் தாக்குதல் நடத்தவே இல்லை. அங்கு நின்ற பொலிஸார் லத்தியைக் கூட கையில் வைத்திருக்கவில்லை. அங்கு தவறி விழுந்த பெண்ணொருவரை பொலிஸாரே தூக்கி விட்டிருந்தனர் - என்றார். (த-4)

### மக்கள்

பியுள்ளனர். இந்நிலையில், நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வரவு - செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான ஏழாம் நாள் விவாதத்தில் உரையாற்றியபோதே சுமந்திரன் மேற்கண்ட விடயம் குறித்து கேள்வியெழுப்பினார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு:-

வடமாகாணத்தின் வளர்ச்சி 25 வீதமாக அதிகரித்துள்ளது என அரசு கூறுகிறது. அது பொய். வடமாகாண வளர்ச்சி குறித்து வெளிவிவகார அமைச்சர் தெரிவித்த கருத்தை அவர் வாபஸ் பெற்றார். நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் உயிரிழந்திருந்தார். இது தற்கொலை என்றுதான் நாம் நினைத்தோம். ஆனால், அது கொலை எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. எது எவ்வாறிருப்பினும், உயிரிழந்த அவரது குடும்பத்துக்கு நாம் எமது அனு தாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அண்மையில் வல்வெட்டித்துறை பிரதேசசபை உறுப்பினரின் வீடு தாக்கப்பட்டது. அத்துடன், கரவெட்டி, சாவகச்சேரி, வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர்களின் வீடுகளும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டன. வட மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கத்தின் வீட்டுக்கு முன்னால் மலர் வளையம் வைக்கப்பட்டது. ஏன் இவை நடக்கின்றன?

வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் கடந்த 22 வருடங்களாக இருந்த நடேஸ்வராக் கல்லூரி, அம்மன், பிள்ளையார் ஆலயங்கள் உடைத்துத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. இதைப் பார்வையிடச் சென்ற வடக்கு முதல்வர் விக்னேஸ்வரன் இராணுவத்தினரால் தடுக்கப்பட்டார். ஒரு மாகாண முதல்வர் தமது மாகாணத்தில் உள்ள ஓர் இடத்திற்குச் செல்வதை எப்படித் தடுக்க முடியும்? வடக்கில் ஜனநாயகம் நிலை நாட்டப்பட்டுள்ளது என அரசு கூறுகிறது. ஆனால், வடக்கு மக்களின் ஒரு இலட்சத்து 32 ஆயிரம் வாக்குகளைப் பெற்று அந்த மாகாணத்தின் முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டவர். தமது மாகாணத்தின் ஒருசில இடங்களுக்கு சுதந்திரமாகச் செல்லமுடியாது இராணுவத்தினரால் தடுக்கப்பட்டார். இது வடக்கில் இடம்பெறும் இராணுவ ஆட்சிக்குச் சிறந்த உதாரணம் அல் லவா?

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு நான்கு வருடங்கள் கடந்துள்ள நிலையிலும், வடக்கு, கிழக்கு மக்கள் இன்னும் ஏன் இழிவுபடுத்தப்படுகின்றனர்? இறந்த காலத்தை மறந்து எதிர்காலத்தை நோக்கிப் பயணிக்க நாம் தயாராக இருக்கிறோம். அரசும் அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் - என்றார். (த-சி)

### 'பேஸ்புக்'கிலும்

கண்டுபிடிப்பதற்கு இலங்கை அரசு தடைவிதித்திருந்தது. எனினும் மறைவாக ஆங்காங்கே வீடுகளிலும் பிரத்தியேக இடங்களிலும் மாவீரர் நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டன. இவற்றைப் பற்றிய படங்களும் பதிவுகளும் முகப் புத்தகங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டன.

உயிரை ஈகம் செய்த தனது சகோதரனுக்காக மாவீரர் தினத்தில் வீட்டில் குடும்பத்தினர் சுடர் ஏற்றிய ஒளிப்படத்தை ஒருவர் தனது முகப் புத்தகத்தில் பதிவேற்றியுள்ளார். இதனை எப்படியோ உளவறிந்த பொலிஸார் அந்த முகப் புத்தகத்துக்கு உரியவரைத் தேடிச் சென்றிருக்கின்றனர். அவரது வீட்டைச் சரியாக கண்டறிய முடியாத நிலையில் அக்கம் பக்கத்தில் விசாரித்திருக்கின்றனர்.

இதனைக் கேள்விப்பட்ட குறித்த நபர் உடனடியாகத் தனது முகப்புத்தகக் கணக்கை மூடிவிட்டுத் தலைமறைவாகிவிட்டார். தலைமறைவாவதற்கு முன்னர் தனது குடும்ப உறுப்பினரை நினைவுகூரக்கூட தனக்கு இந்த நாட்டில் உரிமை இல்லையா என்று அவர் தனது நண்பர்களிடம் கவலைப்பட்டுள்ளார்.

இலங்கையில் ஊடக சுதந்திரம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு வரும் நிலையில் சமூக வலைத்தள வெளிகளும் உளவு பார்க்கப்படுவது மக்களின் கருத்துச் சுதந்திரத்துக்கு விடுக்கப்படும் மிக மோசமான அச்சுறுத்தல் என்று மனித உரிமைகளை ஆர்வலர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

ஊடகங்களின் சுய தணிக்கை, அடக்குமுறை என்பவற்றுக்குள் கொஞ்சமாவது சுதந்திரமான வெளியை மக்களுக்கு வழங்கி வந்த சமூக வலைத்தளங்களையும் அதிகாரிகள் உளவு பார்த்து அதனடிப்படையில் தனிநபர்கள் மீது நடவடிக்கை எடுக்க முயற்சிப்பது கருத்துச் சுதந்திரத்தின் மீது மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தும் என்று அவர்கள் கூறுகின்றார்கள். (உ-ங)

### மாநகர

சென்ற கூட்ட அறிக்கையை ஆமோதிப்பது தொடர்பில் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களிடையே கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

யாழ். மாநகர சபையின் சட்ட திட்டங்களுக்கு அமைவாகச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இரு தரப்பு உறுப்பினர்களும் மாறி மாறிக் கருத்துக் களை முன்வைத்துள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சி வந்த பின்னரே யாழ் குடாநாட்டில் போதைப்பொருள் அதிகரித்துள்ளதாக ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவர் குற்றச்சாட்டை முன்வைத்தார். இதனை எதிர்த்து எதிர்க்கட்சி உறுப்பினர் சபையின் தீர்மானங்கள் பேசப்படும் போது கட்சி சார்பான கதை களைப் பேச வேண்டாம். என்று தெரிவித்தார். இத னால் இரு தரப்பினரிடையேயும் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இதன் போது தகாத வார்த்தைப் பிரயோகங் களும் தாராளமாக இடம்பெற்றன. ஆயினும் இதனைக் கண்டும் காணாதது போன்று மாநகர சபை முதல்வர் தனது தொலைபேசியில் உரையாடிக்கொண்டிருந்தார். (த-14)

### இரண்டாவது

வேறியது. 2014 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தை 21 ஆம் திகதி ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷ சபையில் சமர்ப் பித்து உரையாற்றினார். இதையடுத்து இரண்டாம் கட்ட வாசிப்பு மீதான விவாதம் 22 ஆம் திகதி முதல் நேற்று 29 ஆம் திகதி வரையான 7 நாள்கள் இடம்பெற்று நேற்று வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

எதிர்க்கட்சியின் பிரதம கொரடாவான ஜோன் அமரதுங்க வாக்கெடுப்பைக் கோரினார். இதையடுத்து இடம்பெற்ற வாக்கெடுப்பில் எதிர்க்கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக தேசியக் கூட்டணி ஆகியன வரவு- செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்தன. (த-சி)

### காணிகளைப்

கக் கூறப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் முப்படையினருக்கும் தேவையான தனியார் காணி களை இலகுவாகச் சுவீகரிப்பதற்காக, மாவட்டக் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் பிராந்திய அலுவலகம் ஒன்று ஏற்கனவே திறந்து வைக்கப்பட்டது. இந்தப் பிராந்திய அலுவலகத்தின் ஊடாக ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய சுவீகரிப்பு நடவடிக்கைகள் சுவீகரிப்பு அலுவலரினால் முன்னெடுக்கப்பட்டன.

சுவீகரிப்பு அலுவலராக ஆரம்பத்தில் கடமையாற்றிய முன்னாள் பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி பதவி விலகியதைத் தொடர்ந்து அந்தப் பதவிக்கு யாரும் விண்ணப்பிக்கவில்லை.

இதனால் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டன. தற்போது இந்தச் சிக்கல்களைத் தீர்த்துக் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக பிரதேச செயலர்களை அந்தந்தப் பகுதிக்குரிய சுவீகரிப்பு அலுவலர்களாக நியமிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கு முன்னோடியாக, யாழ். மாவட்டக் காணி அலுவலகத்தில் உள்ள சுவீகரிப்பு ஆவணங்களை அந்தந்தப் பிரதேச செயலர்கள் வந்து பெற்றுக்கொள்ளுமாறு மாவட்ட செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

### றெக்ஷயன்

எதுவும் மீட்கப்படவில்லை. அத்துடன் ஒருவர் தனது தலையின் பின்புறமாகச் சுட்டுக்கொண்டு தற்கொலை செய்வதென்பது சாத்தியமாகக் கூடியதல்ல என்றும் பொலிஸாரும் தடயவியல் நிபுணர்களும் கருதுகின்றனர்.

எனவே கொலையைத் திசை திருப்பும்நோக்குடன் தற்கொலைக் கதை திட்டமிட்டே பரப்பப்பட்டதா என்ற கோணத்திலும் இந்தக் கதையைப் பரப்ப உடந்தையாக இருந்தவர்கள் கொலையாளியுடன் நெருங்கிச் செயற்பட்டார்களா என்ற கோணத்திலும்கூடப் பொலிஸார் விசாரணைகளைத் திருப்பி விட்டுள்ளனர்.

கொலையாளியைத் தாம் இன்னும் அடையாளம் காணவில்லை என்றும் அதே வேளை இன்னும் ஒரு வாரத்திற்குள் அவரைக் கைது செய்துவிடுவோம் என்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜிவ்றி வாராந்த செய்தியாளர் மாநாட்டில் நேற்றுத் தெரிவித்தார். (உ-04)

# சாதனையாளர்கள் 10 பேருக்கு 'வடக்கின் வர்ணம்' விருதுகள்


ஆர்.நிர்மலேந்திரா


ஆர்.தர்சிகா


கே.லோகாஜினி


ஜெ.அனித்தா


பி.வேணுஜா


டபிள்யூ சி.எல். லிவிங்ரன்


ஆர்.காவேரி


யூ.வினோத்குமார்


எ.ரஞ்சன்


ஜி.வசந்தகுமார்

யாழ்ப்பாணம், நவ.30
வடமாகாண சபையின் நான்காவது வர்ண இரவு நிகழ்வில் விளையாட்டுச் சாதனையாளர்கள் 10 பேர் 'வடக்கின் வர்ணம்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த வர்ண இரவு நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம்பெற்றது.

2013 ஆம் ஆண்டு உள்ளூர், சர்வதேசத் தடகளப் போட்டிகள், குழுநிலைப் போட்டிகள் என்பவற்றில் பங்குபற்றிப் பதக்கங்கள் வென்றவர்களின் புள்ளி அடிப்படையில் தடகளத்தில் 6 பேரும், குழுநிலைப் போட்டியில் 4 பேரும் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு முதல் முறையாக 'வடக்கின் வர்ணம்' என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இவ்வாறு கௌரவிக்கப்பட்டவர்களின் விவரம் வருமாறு:-

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மாணவர் ஆர்.நிர்மலேந்திரா.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவி ஆர். தர்சிகா

வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரி மாணவி லோகஜினி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி ஜே.அனித்தா.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாணவன் சி.எல்.லிவிங்ஸ்ரன்.


சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன் வினோத்குமார்.

இலங்கைக் கடற்படை விளையாட்டு அணியைச் சேர்ந்த ஆர்.காவேரி, மன்னார் மாவட்ட உதை பந்தாட்ட அணி வீரர் அன்ரன் ரஞ்சன், யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பி.வேணுகா, வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஜி.வி. வசந்தகுமார் ஆகியோரே விருது பெற்றவர்களாவார்.

(த-23-10-86)

## ஆவரங்கால் இந்து - மத்தி அணிகள் இறுதியாட்டத்துக்கு

யாழ்ப்பாணம், நவ.30
மல்லாகம் சிறிமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் முத்துலிங்கம் ஜெயநாதன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் சிறிமுருகன் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெறவுள்ளது.



இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவர் கே.மனோகரனும் சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் கஜதீபனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(த-23)

## மாகாண அமைச்சுக்களிடையே அடுத்த வாரம் எல்லே போட்டி

யாழ்ப்பாணம்,நவ.30
வடக்கு மாகாண அமைச்சுக்களுக்கு இடையிலான 2013ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழாவில் ஓர் அங்கமான ஆண்களுக்கான எல்லே போட்டி எதிர் வரும் 2ஆம், 3ஆம் திகதிகளில் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத் தில் இடம் பெறவுள்ளது எனப் போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

(த-23)

"-"

**ஆண்களுக்கான எல்லே போட்டி எதிர் வரும் 2ஆம், 3ஆம் திகதிகளில் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.**

## யாழ்.உதைபந்தாட்ட லீக் சாதித்த அணிகள்

யாழ்ப்பாணம். நவ.30
யாழ்.உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் தலைவர் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் திருக்குமரன் விளையாட்டுக் கழக அணி ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி ஆகியவை வெற்றி பெற்றுள்ளன.

முதலில் இடம்பெறவிருந்த ஆட்டத்தில் திருக்குமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணி மோதவிருந்தது.

ஆயினும் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி போட்டிக்கு நேரத்துடன் சமுகம் தராமையால் திருக்குமரன் விளையாட்டுக் கழக அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனைக் கோட்டை யூனியன் விளை யாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.




இதில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(த-23)

# சர்வதேச, தேசியப் போட்டிகளில் பங்குகொண்டவர்களும் கௌரவிப்பு


பி.வேணுஜா


பி.சாணு


பி.ஜோன்சன்


ஆர்.கிஷோர்


டபிள்யூ சி.எல். லிவிங்ரன்

யாழ்ப்பாணம், நவ.30
வடமாகாண சபையின் நான்காவது வர்ண இரவு நிகழ்வில் சர்வதேச, தேசிய ரீதியில் போட்டிகளில் பங்குபற்றிய சாதனையாளர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

பி.வேணுஷா 8 ஆவது தெற்காசிய கனிஷ்ட கூடைப்பந்தாட்ட இலங்கை அணியில் இடம் பெற்றமைக்காக கௌரவிக்கப்பட்டார்.

மன்னார் சென்.சேவியர் ஆண்கள் கல்லூரி மாணவர்க ளான ஆர்.கிசோர், பி.யோண்சன் ஆகியோர் தாய்லாந்தில் நடைபெற்ற 19 வயதுப் பிரிவு அணிகளுக்கான 41 ஆவது ஆசிய உதைபந்தாட்டப் போட்டியில் இலங்கையின் 19 வயது தேசிய அணியில் இடம்பெற்றமைக்காகக் கௌரவிக்கப்பட்டனர்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாணவன் டபிள்யூ.சீ.எல். லிவிங்ஸ்ரன் இந்தியாவில் நடைபெற்ற தெற்காசிய விளையாட்டு விழாவில் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் வெள்ளிப் பதக்கம் பெற்றமைக்காக கௌரவிக்கப்பட்டார்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி சாணு இலங்கையில் நடைபெற்ற ஆசிய உதைபந்தாட்ட போட்டியில் இலங்கையின் 13 வயது தேசிய உதைபந்தாட்ட அணியில் இடம் பெற்றமைக்காகக் கௌரவிக்கப்பட்டார்.

(த-23)


## இன்றைய ஆட்டம்



இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் 'எவ்.ஏ' கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் பள்ளிமுனை சென். லூசியா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(த-23)

# உதைபந்தாட்ட வீரர்களுக்கு பயிற்சி






யாழ்ப்பாணம், நவ.30
யாழ்.வை.எம்.சீ.ஏ. நிறுவனம் யாழ். மாவட்ட பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு உதைபந்தாட்ட வீரர்களுக்கான பயிற்சி வகுப்பை அண்மையில் நிறுவன கேட்போர் கூடத்தில் நடத்தியது.

யாழ்.பல்கலைக்கழக உடற் கல்விப் பிரிவின் தலைவர் எஸ்.கணேசநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

பயிற்சி வகுப்பில் யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் உதைபந்தாட்ட அணிகளைச் சேர்ந்த 35 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

(த-23)

## நாளை மோதும் அணிகள்

யாழ்ப்பாணம், நவ.30
யாழ்.உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் தலைவர் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடர் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறவுள்ள ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(த-23)

# இங்கிலாந்து கவலை



ஆஸ்திரேலியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான ஆஷஷ் தொடரின் முதலாவது போட்டியின் பின்னர் இங்கிலாந்து அணியின் வீரர் ஜொனதன் ட்ரொட் பங்குபற்ற முடியாமை குறித்து இங்கிலாந்து அணி மிகுந்த கவலையடைந்துள்ளதாக இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ருவேர்ட் ப்ரோட் குறிப்பிட்டுள்ளார்.

முதலாவது போட்டியில் இங்கிலாந்து அணி 381 ஓட்டங்களால் படுதோல்வியடைந்திருந்த நிலையில், அப்போட்டியில் தடுமாறியிருந்த ஜொனதன் ட்ரொட் அப்போட்டியின் பின்னர் இங்கிலாந்துக்குத் திரும்பியிருந்தார். மன அழுத்தம் சம்பந்தமான நோய் காரணமாகவே அவர் இங்கிலாந்துக்குத் திரும்பியிருந்தார்.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்த ஸ்ருவேர்ட் ப்ரோட், ஜொனதன் ட்ரொட்டை இழந்தமை மிகுந்த கவலை தரும் ஒரு விடயம் எனவும், இங்கிலாந்து அணியில் 4 அல்லது 5 வருடங்களாக ஜொனதன் ட்ரொட் விளையாடி வருகிறார் எனக் குறிப்பிட்ட அவர், ஜொனதன் ட்ரொட் மிகச் சிறப்பான மனிதர் எனக் குறிப்பிட்டார். மூன்றாம் இலக்கத்தில் துடுப்பெடுத்தாடும் ஜொனதன் ட்ரொட் இங்கிலாந்து அணிக்கு சிறந்த திடத் தன்மையை வழங்கியதாகக் குறிப்பிட்டார்.

அனைத்துக் கவனமும் ஜொனதன் ட்ரொட்டின் பக்கம் தற்போது காணப்படுகின்ற போதிலும், அவருக்குத் தேவையான அந்தரங்க மரியாதை அவருக்குக் கிடைக்கப்பெறும் என நம்புவதாகக் குறிப்பிட்டார். அவர் விரைவில் குணமாகுவார் என எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (கு)

# உலகக் கிண்ண '20/20' பங்கேற்கும் 6 அணிகள் தேர்வு

ICC WORLD TWENTY20 Bangladesh 2014

அடுத்தாண்டு பங்களாதேஷில் இடம்பெறவுள்ள உலக 20/20 தொடரில் பங்குபற்றவுள்ள 6 அணிகள் தெரிவாகியுள்ளன. 16 அணிகள் கொண்ட இத்தொடரில் 10 அணிகள் ஏற்கனவே தெரிவாகியிருந்த நிலையிலேயே 6 அணிகள் தற்போது தெரிவாகியுள்ளன.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இடம்பெற்றுவரும் தகுதிகாண் போட்டிகளின் முடிவாக இந்த அணிகள் தெரிவாகியுள்ளன.

தகுதிகாண் போட்டிகளில் நேற்று முன்தினம் ஹொங்கொங், நெதர்லாந்து அணிகள் உலக 20/20 தொடருக்குத் தெரிவாகின. ஏற்கனவே அயர்லாந்து, ஆப்கானிஸ்தான், நேபாளம், ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய அணிகள் உலக 20/20 தொடருக்காகத் தெரிவாகியிருந்தன.

இவ்வணிகள் தகுதிகாண் முடிவில் 2 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு உலக 20/20 தொடரில் குழு நிலைப் போட்டிகளில் பங்குபற்றும்.

பாகிஸ்தான், ஆஸ்திரேலியா, இந்தியா, மேற்கிந்தியத் தீவுகள் அடங்கிய குழு '1' உடன் இவ்வணிகளில் ஓர் அணியும், இங்கிலாந்து, நியூசிலாந்து, தென்னாபிரிக்காக, இலங்கை அணிகள் அடங்கிய குழு '2' உடன் மற்றோர் அணியும் உலக 20/20 தொடரின் இரண்டாம் சுற்றுப் போட்டிகளில் பங்குபற்றும். .(கு)

# மேற்கிந்திய டெஸ்ட் அணி அறிவிப்பு

நியூசிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவுள்ள மேற்கிந்தியத் தீவுகள் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. 16 பேர் கொண்ட குழாமாக இது அறிவிக்கப்பட்டுள்ளது.

டரன் சமி தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள இந்தக் குழாமில் சுழற்பந்து வீச்சாளர் சுனில் நரைன் சேர்க்கப்பட்டுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளின் மட்டுப்படுத்தப்பட்ட பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட போட்டிகளில் முக்கிய வீரராகக் காணப்படும் சுனில் நரைன், டெஸ்ட் போட்டிகளில் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தாதன் காரணமாக அவர் டெஸ்ட் போட்டிகளில் சேர்க்கப்படுவதில்லை.


எனினும், மேற்கிந்தியத் தீவுகளின் சுழற்பந்து வீச்சாளரான ஷேன் ஷிலிங்பேர்ட் பந்தை எறிவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நிலையில், அவர் அது தொடர்பாக சோதனைகளுக்கு உள்ளாகவுள்ளார். அவர் பந்தை எறிவதாகக் கண்டறியப்பட்டால் அவரால் பந்துவீச முடியாது என்பதாலேயே சுனில் நரைன் இக்குழாமில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி டிசெம்பர் 3ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள குழாம்:

டரன் சமி, டினேஷ் ராம்டின், ரீனோ பெஸ்ற், கிறெய்க் பிரெத்வெய்ட், டரன் பிராவோ, ஷிவ்நரின் சந்தர்போல், ஷெல்டன் கொட்டரெல், நர்சிங் டியோநரைன், கேர்க் எட்வேர்ட்ஸ், ஷனொன் கப்றியல், சுனில் நரைன், வீரசம்மி பேர்மாள், கெரான் பவல், மார்லன் சாமுவேல்ஸ், ஷேன் ஷிலிங்பேர்ட், சட்விக் வோல்ற்றன். (கு)





# கலிஸ், ஸ்ரெய்ன் நீக்கம்

தென்னாபிரிக்காவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும், தென்னாபிரிக்க அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் மூன்றாவதும், இறுதியுமான போட்டியில் சகலதுறை வீரர் ஜக்ஸ் கலிஸ், வேகப்பந்து வீச்சாளர் டேல் ஸ்ரெய்ன் இருவரும் பங்குபற்ற மாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இருவருக்கும் ஏற்பட்டுள்ள உடல் உபாதைகள் காரணமாகவே இவர்களிருவரும் இந்தப் போட்டியில் பங்குபற்ற மாட்டார்கள் என அறிவிக்கப்படுகிறது.

இதில் ஜக்ஸ் கலிஸின் வலது கையின் சிறிய விரலில் உபாதை ஏற்பட்டுள்ளது. இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் இந்த உபாதை ஏற்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது. அதேபோல் டேல் ஸ்ரெய்னுக்கு வயிறு, இடைப் பகுதியில் உபாதை ஏற்பட்டுள்ளது. இரண்டாவது போட்டியின் போது அவர் இந்த உபாதை குறித்து வெளிப்படுத்தியிருந்தார்.

3 போட்டிகள் கொண்ட இத்தொடரை பாகிஸ்தான் அணி ஏற்கனவே வெற்றி கொண்டுள்ள நிலையில், நாளை இடம்பெறவுள்ள மூன்றாவது போட்டியில் இவர்கள் இருவரையும் பங்குபற்ற வைப்பதை விட, இத்தொடரின் பின்னர் இடம்பெறவுள்ள இந்திய அணிக்கெதிரான தொடரில் இவர்களிருவரும் முழுமையான உடற்தகுதியுடன் காணப்படுவதை உறுதிப்படுத்தும் விதமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதில் ஜக்ஸ் கலிஸ் ஒரு வருடம், 9 மாதங்களின் பின்னர் ஒருநாள் சர்வதேசப் போட்டியில் முதன்முறையாக இந்தத் தொடரிலேயே பங்குபற்றியிருந்தார் என்பதோடு, 2 போட்டிகளின் நிறைவிலேயே அவருக்கு உபாதை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

**இருவருக்கும் ஏற்பட்டுள்ள உடல் உபாதைகள் காரணமாகவே இவர்களிருவரும் இந்தப் போட்டியில் பங்குபற்ற மாட்டார்கள் என அறிவிக்கப்படுகிறது.**

# மிஸ்பா உல் ஹக் பெருமிதம்



தென்னாபிரிக்காவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும் தென்னாபிரிக்க அணிக்குமிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச போட்டித் தொடரை வென்றமை குறித்துப் பெருமிதமடைவதாக பாகிஸ்தான் அணியின் தலைவர் மிஸ்பா உல் ஹக் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் இறுதி நேரத்தில் சிறப்பான பந்துவீச்சை வெளிப்படுத்திய பாகிஸ்தான் அணி ஓர் ஓட்டத்தால் வெற்றிபெற்று 2 போட்டிகளின் நிறைவிலேயே இந்தத் தொடரை வெற்றி கொண்டிருந்தது.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள மிஸ்பா உல் ஹக், இந்தத் தொடர் வெற்றி மிகப் பெரிய சாதனை எனக் குறிப்பிட்ட அவர் குறிப்பாக இளம் அணியைப் பொறுத்தவரை இது மிகச் சிறப்பானது எனத் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் இளம் அணி தங்களால் வெற்றிபெற முடியும் என நம்ப ஆரம்பிக்கும் எனக் குறிப்பிட்ட அவர், இந்த நம்பிக்கையே அபுதாயிலும் டுபாயிலும் இல்லாமலிருந்ததாகவும் அதன் காரணமாக வெற்றிபெற முடியாது காணப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

இந்தத் தொடர் வெற்றி பாகிஸ்தான் அணிக்கு தன்னம்பிக்கைக்குச் சிறப்பானதாக அமையும் எனக் குறிப்பிட்ட மிஸ்பா உல் ஹக், எதிர்காலத்தில் சிறப்பான தன்னம்பிக்கையுடன் போட்டிகளில் பங்குபற்ற முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தொடர் வெற்றி தென்னாபிரிக்காவில் வைத்து பாகிஸ்தான் அணி பெற்றுக்கொண்ட முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடர் வெற்றி என்பதோடு இந்திய உப கண்ட அணியொன்று பெற்றுக் கொண்ட முதல் தொடர் வெற்றியாகவும் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (கு)

# ஆசிய இளையோர் கிண்ண கிரிக்கெட் டிசெ. 28 ஆரம்பம்



ஆசியக் கிண்ண இளையோர் (19 வயதுக்கு உட்பட்டோர்) கிரிக்கெட் போட்டி ஐக்கிய அரபு எமிரேட்ஸில் டிசெம்பர் 28 ஆம் திகதி முதல் ஜனவரி 4 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்கும் 8 அணிகள் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளன. 'ஏ' பிரிவில் இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிகளும், 'பி' பிரிவில் பங்களாதேஷ், இலங்கை, ஆப்கானிஸ்தான், மலேசியா அணிகளும் இடம் பெற்றுள்ளன. லீக் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரை இறுதிக்கு முன்னேறும்.

இந்திய அணி லீக் ஆட்டத்தில் டிசெம்பர் 28 ஆம் திகதி ஐக்கிய அரபு எமிரேட்ஸையும், 29 ஆம் திகதி நேபாளத்தையும், 31 ஆம் திகதி பாகிஸ்தானையும் எதிர்கொள்கிறது.

ஆசிய க் கிண்ணப் போட்டிக்கான இந்திய இளையோர் அணி வருமாறு:

விஜய் ஜோல் (அணித் தலைவர்), சஞ்சு விஸ்வநாத், அகில் ஹெர்வாத்கர், அங்குஷ் பைன்ஸ், ரிக்கி புய், ஹெர்யாஸ், சர்பிராஸ்கான்,தீபக்ஹோடா, குல்தீப் யாதவ், அமிர் கானி, கரண்கைலா, மிலின்ட், அவேஷ்கான், ரிஷி அரோத், மொனு குமார்சிங். (த-400)

# பாரத ரத்னாவால் சர்ச்சை



கிரிக்கெட்டில் பல்வேறு உலக சாதனைகளை ஏற்படுத்திய சச்சின் டெண்டுல்கரைக் கௌரவிக்கும் வகையில் அவருக்கு பாரத ரத்னா விருது வழங்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.


இதேபோல் விஞ்ஞானி சி. என். ஆர்.ராவுக்கும் இந்த உயரிய விருது வழங்கப் படுகிறது. இதற்கு பல்வேறு தரப்பினர் ஆதரவும், வாழ்த்துக்களும் தெரிவித்து வரும் நிலையில், விருதுக்கு சச்சின் தேர்வு செய்யப்பட்டமை தொடர்பான சர்ச்சையும் எழுந்துள்ளது.

சச்சினுக்கு பாரத ரத்னா அறிவிக்கப்பட்டதை எதிர்த்து அலகாபாத் உச்ச நீதிமன்றில் பொது நல வழக்குத் தொடரப்பட்டது. இந்நிலையில், சச்சினுக்கு பாரத ரத்னா விருது வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வழக்கறிஞர் கனகசபை என்பவர் சென்னை உயர்நீதிமன்றில் ஒரு பொதுநல வழக்கு தொடர்ந்துள்ளார். அவர் தாக்கல் செய்த மனுவில், சச்சின் மற்றும் சி.என். ஆர். ராவ் ஆகியோர் பாரத ரத்னா விருதுக்கு தேர்வு செய்ததில், விதிமுறைகள் பின்பற்றப்படவில்லை என்று தெரிவித்துள்ளார். (த-400)

# மரண அறிவித்தல்

## சூசைப்பிள்ளை மரியதாஸ்

(தம்பிஐயா, சில்லாலை - இத்தாலி)



சில்லாலையைப் பிறப்பிடமாகவும், பலர்மோ, இத்தாலியை வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை மரியதாஸ் கடந்த 21.11.2013 வியாழக் கிழமை இத்தாலியில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் லண்டனில் வசிக்கும் திருமதி பிறடென்சியா (தெயா)வின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - யாகம்மா தம்பதியரின் ஏக புத்திரனும் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை (மருசலின்) எலிசபேத் தம்பதியரின் அன்புமருமகனும் மேரிதிரேசா (நேசம் - இளவாலை), லூர்துமலர் (மலர் - கனடா), திரேசம்மா (ராணி - சில்லாலை) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஜானிப் பிரியா (லண்டன்), சிந்துப்பிரியா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமலதாஸ் (லண்டன்), சுஜி (லண்டன்) ஆகியோரின் அன்புமாமனும் ஆயிஷாவின் பாசமிகு பேரனும் அலைக் சாண்டர்,(இளவாலை), சவிரிமுத்து (கனடா), செபஸ்ரியாம் பிள்ளை (தாளையடி), பேபி (லண்டன்), பவானி (கொழும்பு), பனிமயம் (இராசாத்தி-பெல்ஜியம்), பிறேமா (கொழும்பு), அன்ரன் (லண்டன்), தெறன்ஸ் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் சிறி (லண்டன்), கருணா, சியாமினி (பிரான்ஸ்), நிஷாந்தினி, சுதாகரன் (கனடா), பிரபாகரன் (ஜேர்மனி), அருட் தந்தை பாஸ்கரன் அடிகளார், சுதர்சினி (கனடா), பிரதினி (கனடா), டெனிசன்(சிரேஷ்ட நடவடிக்கை அலுவலர்-UNDP), டெனோசன் (ஆசிரியர்-யா/செனியோசப் மகாவித்தியாலயம் -மாதகல்), அருட் சகோதரி செபோஜினி (வவுனியா- திருக்குடும்பக் கன்னியர்மடம்), டிமல்சன் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க திருப்பலி நாளை மறுதினம் (2.12.2013) திங்கட் கிழமை மு.ப. 11 மணிக்கு சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித யாகப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**சில்லாலை கிழக்கு, பண்டத்தரிப்பு.**

தொடர்பு:
0039 3887214828 (இத்தாலி - டிமல்)
0044 7411397132 (லண்டன் - சிந்து)
0044 7594343651 (யானி - லண்டன்)
0012 899972085 (சுதர்சினி - கனடா)

தகவல்:
சகோதரிகள் : மேரிதிரேசா(நேசம்),
லூர்துமலர்(மலர்), திரேசம்மா(ராணி)
மருமக்கள்: அருட்தந்தை ச. பாஸ்கரன் அடிகளார்
அருட்சகோதரி செ.செபோஜினி
0094 21 321 8659 (இலங்கை -ராணி)
0094 21 490 5813 (இலங்கை -நிஷாந்தினி)

(C/13855)(4.6.3)

# இந்தப் பந்துவீச்சால் கிண்ணம் வெல்லலாமா?



2015ஆம் ஆண்டு ஆஸ்திரேலியா, நியூசிலாந்தில் நடைபெறவிருக்கும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இந்தியா இந்தப் பந்து வீச்சை வைத்துக் கொண்டு கிண்ணத்தை வெல்வது கடினம் என்று இலங்கை முன்னாள் அணித் தலைவர் அர்ஜுன ரணதுங்க கூறியுள்ளார்.

மும்பையில் இடம்பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட அர்ஜுன ரணதுங்க கூறியதாவது:

இந்தியா துடுப்பாட்டத்தில் பலமாகவே உள்ளது. ஆனால் உலகக் கிணணத்தை வெல்லும் அளவுக்குப் பந்து வீச்சு இருப்பதாகத் தெரியவில்லை - என்றார் அவர். (த-400)

# ஐ.நாவின் தெற்காசிய தூதுவர் டெண்டுல்கர்



சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்ற சச்சின் டெண்டுல்கர், ஐ.நா அமைப்பின் தெற்காசியத் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர், அண்மையில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றார். இந்நிலையில் ஐக்கிய நாடுகளின் சபையின் தெற்காசிய பிரிவின் தூதராக, இரண்டு ஆண்டுகளுக்கு அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து சச்சின் கூறுகையில், கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற பின் எனது இரண்டாவது இன்னிங்சை சிறப்பாகத் தொடங்க உதவிய யுனிசெப் அமைப்புக்கு நன்றி.

இந்தத் தூதர் பணி எனக்கு மிகவும் முக்கியமானது. என்னால் முடிந்தளவுக்குச் சிறப்பாகச் செயற்பட உள்ளேன்.

உலகின் பெரும்பாலான சிறுவர்கள் போதிய சுகாதார வசதிகள் இல்லாமல் உள்ளனர்.

இதனால் ஏற்படும் நோய் பாதிப்பு காரணமாக, தினமும் 1600 சிறுவர்கள் உயிரிழக்கின்றனர் என்ற செய்தி என்னை மிகவும் பாதித்தது.

யுனிசெப்புடன் இணைந்து இவர்களுக்கு சுகாதாரத்தின் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த விரும்புகின்றேன் - என்றார். (த-400)

**வீடு வாடகைக்கு**

யாழ்ப்பாணம் K.K.S. றோட் பிரதான வீதியில் 4அறை சமையலறை கொண்ட சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக் குண்டு.

தொடர்பு: 077 1932430

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.11.2013 அன்று அச்சிட்டு வெளியிடப்பெற்றது.